MADRAS
197/109 14

உ

முருகன் றுணை.

திருவாவினன்குடி என்னும்

பழநித்தல மான்மியம்.

கும்பகோணம் காசுக்கடை

ஸ்ரீ அ. சு. சபாபதி செட்டியாரவர்கள்

இயற்றியதை

பழநி அடிவாரம் புதுவை தருமச்சத்திரமணியம்

ஸ்ரீ வீ. மாரியப்பசெட்டியாரவர்கள்

விருப்பத்தின்படி

மதுரை புதுமண்டபம் புத்தகக்கடை

மு. ஆவுடையப்ப பிள்ளையவர்களால்

மதுரை

கிருஷ்ண விலாச அச்சாபீசில்

பதிப்பிக்கப்பெற்றது.

1909.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

"பழநித்தலமான்மியம்" எனனுமிந்நூல், கலியுக வரதராகிய கந்தக்கடவுள், ஆன்மகோடிகளுக்கருள் செய்வான் கோயில்கொண்டருளியிருக்கின்ற ஆறுபடை வீடுகளிற் சிறந்ததூம், நினைக்க முத்திப்பேறளிப்பதூம், திருவாவினன்குடியென வானோர் வழங்குவதுமாகிய பழநிப்பதியின் சிறப்புகளை எடுத்துக்கூறும் வசன நூல்.

எம் நண்பர் பலர் ஸ்ரீலஸ்ரீ பாலசுப்பிரமணியக்கவிராயரவர்கள் திருவாய்மலர்ந்தருளிய பழநித்தலப் புராணம் கற்றோர்க்கேயன்றி ஏனையோர்க்குப் பயன்றுய்த்தலிலதாதலின், வசன நடையிலியற்றி வித்வான்களொழிந்த ஏனையோருமுணர்ந்து பயனுய்யுமாறியற்றித்தரல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டமையானும், என்மாட்டு முழுவன்புடையாராகிய பழநி அடிவாரம் புதுவை தர்மச்சத்திரம் மணியம் மகா-ா-ா-ஸ்ரீ வீ. மாரியப்பசெட்டியார் இப்பழநித்தலமான்மியத்தை நாளது கீலகவருஷம் பங்குனி உத்தரத் திருவிழாவின்முன் அச்சுப்புத்தக ரூபமாகப்பார்க்க வேண்டுமென வற்புறுத்தினமையானும் யான்புலன் மலிவில்லேனெனினும்.

கந்தையினு மண்ணிடையுங் கரந்துமணி கண்டோர்தஞ்
சிந்தை மகிழ்ந் தேற்பர் சினந்துதரார்—எந்தைகுகன்
நற்புகழை நாட்டுதமிழ் நன்கமைத்தி லேனெனினும்
விற்பனர்க ளெள்ளார் விழைந்து, என்னுந்துணிபால்

மூன்று தினங்களுள்ளேயே ஒருவாறு எழுதிமுடித்தேன்.

நிற்க, யான்திருக்குடந்தை மகாமக விஷயமாகச் சில நூற்களியற்றுவதை மேற்கொண்டேனாகையாலும் அங்கேயே யான் நிற்கநேர்ந்தமையாலும் மதுரை புதுமண்டபம் புத்தகஷாப் மகா-ா-ஸ்ரீ மூ. ஆவுடையப்பபிள்ளையவர்கள் இதனை அச்சிற் பதிப்பிக்கும் முயர்ச்சியைக் கைக்கொண்டு பதிப்பித்தனர். யான் மறுமுறை பார்ப்பதன் முன்னமேயே அச்சிடப்பட்டமையா லிதனைக்கண்ணுறுந் தண்டமிழ்ப்பொலிவும், எண்டிசைப்புகழும், நண்ணிய புலமையும், கண்ணகனறிவுமுடைய நண்பர்கள் பிழைகளிருப்பினும் மன்னித்துட் பொதிந்துள சிறந்த பொருளையே பாராட்டுவார்களென நம்புகின்றேன்.

இங்ஙனம்,

அ. சு. சபாபதி.

சாற்றுக் கவிகள்.

பழநி அடிவாரம் ஸ்ரீ. பெரியசாமி பண்டாரம் அவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மாமேவு மயிலமிலு மலைகலையு மகிழ்ந்தேற்கும்
வள்ளி காந்தன்
தாமேவு தலகலத்தி னெறியறிந்தே முதன்மைதிகழ்
தண்டாச் சீர்சால்
பூமேவு பழநிதல மான்மியத்தைத் திதிபலவுள்
பொற்பிற் கூட்டி
நாமேவு நடைசிறக்க வகுத்தளித்தான் சபாபதிப்பேர்
நாவல் லோனே

தஞ்சை இராசேந்திரம் ஸ்ரீ அ. சாமிநாதபிள்ளை அவர்களியற்றிய

தண்ணார் மதிநுதிகள் சார்ந்திறைநேர் நற்பழநி
எண்ணார் தலமகிமை யின்றமிழால்—பண்ணாரும்
மான்மியமாச் சாற்றினன் வள்ளல் சபாபதிப்பேர்
அன்றதமிழ் வல்லா னறிந்து.

மதுரை ஸ்ரீ. மு. திருமலைமுத்துப்பிள்ளை யியற்றியது.

ஆன்மியமா பலனடியர்க் கருள்முருக னமர்பழநி யருந்தலத்து
மான்மியமா மருநூலை யினியவா சகத்தமிழால் மதுரை வாழும்
மேன்மியமா னிலவினைறுநற் சபாபதிப்பேர்ப் புனிதனளித் தானவ்வந்
தா
தான்மியமா பலனெனவரே மகிழ்ந்தனன்னைப் பிறந்தாரிற் றலைநின்றாரே.

பரம்பக்குடி ஸ்ரீ சுந்தரமாணிக்கப்பிள்ளையவர்களியற்றிய
கட்டளைக் கலித்துறை.

மங்கையோர் பாகத் திறைக்கோர் குருவாம் மயிலவன்றன்
செங்கையிற் றண்டு மயிலும் பிடித்தே சிறந்தமரும்
இங்கப் பழநித் தலமான் மியத்தைத் தொல்லுலகில்
எங்கும் புகழச் சபாபதி வள்ள லியம்பினனே.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
6 AUG 1909
MADRAS.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

"திருவாவினன்குடி"

என்னும்

பழநித்தலமான்மியம்.

காப்பு.

விநாயகர் வணக்கம்.

வெண்பா.

பாரார் பழநிதலப் பண்ணோர் நன் மான்மியத்தைச்
சீரார் தமிழ் நடையாற் செப்புதற்குப்—பேராரும்
ஆதியுமை தாமளித்த வைந்துகரத் தாறுமுகச்
சோதி யண்ணன் றாளே துணை.

சிவபெருமான் வணக்கம்

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

கார்பூத்த மழையொருபாற் கவின்செய்யக்
கதிரவனுங் கறையா ரோவாப்
பேர்பூத்த முழுமதியும் பெட்புடனே
நாப்பணினிர் பெருமா தங்கச்
சீர்பூத்த வடமேரு வெள்ளிமலை
மேலுலவுந் திருவே போல்
ஏர்பூத்த அம்மையிரு பாலருடன்
இடபமிவர் இறையை யுள்வாம்.

உமாதேவியார் துதி.

பூவாரு மிமயமால் வரைமுளைத்த
பொலன் கொடியைப் புவனமெல்லாம்
மாவாரு மணிவயிற்றில் வளர்த்துவெளி
யாக்கியருள் வழங்குந்தாயைத்
தூவாரு மறைகாணாத் துரியநிலை
கடந்தொளிருஞ் சுடரின்வாமப்
பாவாரும் பகுப்பிலுறை பசுங்கிளியைப்
பரவிநம பயத்தைத் தீர்ப்பாம்.

இஷ்டவிநாயகர் தோத்திரம்.

கட்டளைக்கலித்துறை.

தூயற்கருளுந் தொழிலுடையானற் சுகவுருவாய்
தோயப்பெறுவன் றுரியமுந்தாண்டித் துலங்குவனென்
மாயப்பிறப்பின் மலமறுத்தாளும் வளக்குடந்தை
ஆயத்துறைவாழ் விநாயகன்றாளென்னணிமுடிக்கே.

சுப்பிரமணியர் துதி.

பூமேவும் வரைமானைப் பிறங்குமிரு
விழியானைப்புனையாநின்ற
தூமேவும் முகமானும் நதிமானை
யிடங்கொண்டார் சொலுமார் கொன்றை
மீமேவுஞ் சிரங்கொண்டார் கல்லாலின்
புடைநின்றார் விரும்பித்தந்த
தாமேவு பிடியோடு கானமரும்
மான்மருவுங் கடவுள்வாழி.

பழநியாண்டவர் துதி.

பெண்கொண்ட பாகத்தர் நீர்கொண்ட
சென்னியத்தர் பிறைககத்தர்

பழநித்தல மான்மியம்

பண்கொண்ட வம்பலத்தே நித்தத்தர்
ஆழ்பித்தர் படையேறத்தர்
விண்கொண்ட துயர்தீர வென்றுதரு
செவ்வேலர் விழையு மாதர்
எண்கொண்ட ரெண்டுடையார் பழம்விரும்பிப்
பழமானா ரெனையாள்வாரே.

சமய குரவர்கள் துதி.

பண்டிருந்து தொடர்ந்து வருவினைகளெனும்
படர்பனிக்கோர் பருதியாகி
மண்டிருந்த மலமகற்றி மாயை யெனுந்
தொடர்களைந்து மருவஞானங்
கொண்டிருக்க வெனவருளு மமுத்மொழி
குவலயத்தே கொடுத்த நால்வர்
வண்டிருக்கு மரை மலர்த்தாள் கொண்டிருக்கச்
சென்னிமிசை வறுமையென்றே

ஆசிரிய வணக்கம்.

விருப்பரிலாந் தனித்தமிழைச் சிவஞான
வியன் பொருளை விரும்பித்தந்து
அருப்பமுற வெனையாண்ட ஆறுமுக
நாவலப்பே ராளக்கர் தோய்ந்த
தருக்கமிகு நாவலனென் திருஞா
ன சம்பந்தத் தண்ணார் கொண்டல்
பெருக்க வெனு தகவரைமேற் படிந்தருண்மா
ஞானமழை பெய்யு மன்றே.

—:o:—

திருச்சிற்றம்பலம்

முதலாவது

நான்முறையுங்கிரிச் சருக்கமும்.

—:o:—

வெண்பா.

எந்தை சூதனிருக்கும் ஏற்றவரை யொன்றன்னில்
சிந்தை யினிக்குஞ் சிவந்தழைக்கும்—விந்தைத்
திருப்பெருகுங் கல்வித் திறந்தளிர்க்கும் வாழ்நாள்
விருப்பமுற நீடும் விரைந்து.

பொன்னுடரும் பெறுதற் கரிதாகிய தவப்பேற்றைப் பெற்ற முனிவர்களாலுந் துதிக்கப்படுபவரும், வேதசிக்கை யறுத்து வெளியாக்கிக் குலவரையறைபகுத்தவருமாகிய வியாசமுனிவரின் மாணாக்கர்களிலெல்லாஞ் சிறப்புடையவராய் விளங்கும் சூதமகாமுனிவர், ஆசிரமங்களிலெல்லாம் மேன்மை பெற்றதாகிய நைமிசாரண்யத்திற்குச் சென்றார். அப்பொழுதங்குள்ள அரும் பெருந் தபோதனர்களெல்லாம் பேரானந்தங் கொண்டவர்களாய் எழுந்து, எதிர் சென்று உண்மைப் பக்தி விநயத்துடன் சோடசோபசாரங்கள் செய்து, உன்னத ஆசனத்திருத்தி, அகமலர்ச்சியோடு முகமலர்ச்சியும் நனிமிகக்காட்டி, முகமன்பலகூறிப்புகழ்ந்தனர். சூதமகாமுனிவர் இருடிகள் சூழாம் தனக்குச் செய்த உபசாரங்களையேற்று உள்ளக் களிப்புடனிருக்கும்போழ்து, ஐம்புலன்களையும் வென்று, அமலனைத் துதிக்கும் அருந்திருத்தொழில் பூண்ட அம்முனிவர்கள், சூதமகாமுனிவரை நோக்கி, கல்வி கேள்விகளில் வல்ல முனிவர் சிகாமணியே ! எங்கள் தூயதவப்பயனால் தாங்களிவ்விடம் வரப்பெற்றேம். அம்மையோர் பாகத்தண்ணலராய சிவபெருமானாரின் திருக்கல்யாண குணங்களை விளக்கும் புராணங்களைக்கேட்க மிக ஆசை

கொண்டிருக்கின்றோம்; தேவரீர் கருணை கூர்ந்து திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று பணிந்து, துதித்து, வேண்டிக்கொள்ள, அதற்குவந்து சூதமகாமுனிவர் கூறலுற்றார்.

ஈறிலா ஈசனார் இணையடியே இனிதுபாடி என்றல்மறவாத எண்ணத்தீர்! அழகுமலிசுந்தரர் அரும்புகழ் விளக்கும் அருமைப்புண்ணிய புராணங்கள் புகலுதற்கு இடமும், காலமும், ஏற்போருமென்னு மிம்மூன்றும் பெறல் வேண்டும். அதற்கேற்ப, இது தெய்வவனமும் தேவதத்தன்மையுடையதாதலாலும், நீலகண்ட நிமலனார் பதமே உன்னலும், துதித்தலும், காண்டலும், தொழலும், நம்காலத்தின் வேலையாக்கொண்ட நமக்கிது சற்காலமானதாலும், கேட்போராய நீங்களும், அறிவாலும், குணத்தாலும், ஒழுக்கத்தாலும் அற்புதமுடையீராதலினால் புராண மோதுதற்குக் குறைவறத்தகுதியேற்பட்டது இதனினும் எனக்குப் புண்ணியப்பேறு உண்டோ? என்றிசைத்தார். முனிவர்கள் எல்லோரும் திருப்பாற்கடலிலெழுந்த அமுதுண்ட அமரரென்ன ஆநந்தக்கடலில் மூழ்கி முனிவரரை நோக்கி" எங்கள் தவப்பயனுயுதித்த முனிவர்தந் திலகமே! கேண்மோ, சிறியேம்மாட்டு இவ்வளவு கருணைகொண்டதற்குப் பெரிதும் நன்றியுடையேம், கடன் பாடுடையேம், முன்னர்ப்பதினெண் புராணங்களையும், உபதேசித்தீர்கள்; அவற்றுட்சிறந்த கந்தப்புராணத்திலே கிர்ப்பிரகாச காண்டத்துளே மேரு முதலிய மலைகளையும், புவனங்களையும், கூறிய பகுதியிலே, எல்லா மலைகளிலும் விசேடித்ததாகித் தென்றிசைக்கண்ணே வராககிரி என்று ஒப்பற்ற ஓர்மலையுளது; அதன்பால் இருமை இன்பங்களையும், பாலிக்கவல்ல திருப்பெருந்தலமொன்றுளதென்னத் திருவாய் மலர்ந்தீர்கள். அதன் பெருமைகளனைத்தையுங் கருணைக்கடலே! அருள்கூர்ந்து உரைத்தருள வேண்டுமென்று தாழ்ந்து துதித்து இரந்துவேண்டினர்.

இது கேட்ட சூதமுனிவராகிய முனிவர் பெருமான், பேருவகையுடையராய் முனிவரரை நோக்கிக் குகத்தாசர்களே! கோதிலாக்குணமணிகளே! கேண்மினெனத் திருவாய் மலர்ந்தருளுவாராயி

னார். நீவிர் கேட்ட அத்தலப்பெருமைகள் அனைத்தையும் அள[வி]ட்டுப்புகலுதல் யாவர்க்கும் அரிது! அரிது!! ஆயினுஞ்சிறியேன் கேட்டறிந்ததிற்சிறிது சுருங்கச் சொல்வேன் கேண்மோவெனச் சுருக்கிச்சொல்வாராயினார்.

நீர் சூழ்ந்த விப்பூவுலகில் மலைகள் அளவிலாவாக இருந்தாலும் மேரு, ஏமகூடம், (சதிர்காமமலை) இமயம், மந்தாரம், கயிலை, கந்த சைலம் என்னுமிவற்றின்கண்ணே எம்பெருமானாகிய சுவாமிநாதன் என்நாளும் வீற்றிருப்பர் இஃதன்றிக் கடம்புமலை, சம்புமலை, போதிமலை, ஆலி, கேதாரபருப்பதம், சிபருவதம், திருக்காளத்தி, திருக்கழுக்குன்றம், திருத்தணிகை, வேங்கடம், குகனேரி, திருவண்ணாமலை, முதுகுன்று, திருச்சையம், திருச்செங்கோடு, நாராயணகிரி, கொல்லி, ஈங்கோய்மலை, திருக்கறகுடி, திருசிராமலை, சுவாமிமலை, குன்றக்குடி, திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலைமலை, திருச்செந்தூர், கந்தவெற்பு, பொதியகிரி, திரிகூடாசலம், வெண்ணெய்வரை, கொடிமுடிக்கிரி, கோங்குமலை, மருதமலை, அத்திரி, பேரூர், வெள்ளியங்கிரி, காளமலை, வராககிரி என்னுமிப்பெயர்கொண்ட திவ்ய திருமலைகளிலே குருபரனாகிய குமரக்கடவுள் எஞ்ஞான்றினும் இனிது வீற்றிருந்து அடியார்களுக்கபய சாதனங்களை அளித்து அருள்கின்றார். இவற்றுள் வராகமலையென்னும் அம்மலைக்கு வடசாரலில் மால்மலை (விஷ்ணுமலை) ஒன்று உண்டு. வடகுட திசையாய் வாயு[திக்கி]ல் ஒரு குரோச தூரத்தில் பிரமன்மலை என்றும் ஒன்று உண்டு. அதன் குணபால் (கிழக்கு) சிவபெருமானெழுந்தருளப்பெற்ற திருச்சிலம்போன்று விளக்கமுறப் பொருந்தியிருக்கிறது. மனிதர்களாலும் தேவர்களாலும் புகழ்தற்கரிய நல்லழகுற்றதாய்ச் சத்திமலையோடுகூடி முருகக்கடவுள் நடுவே தங்கப்பெற்ற தன்மையாற் சிவமலையென்னுந் திருப்பேர் பெற்றுப் பரம்பொருளாய் எம்மான் சிவபெருமானரைப் போன்று நின்றுளது.

பிறைக்கொழுந்தும், கங்கையும், கொன்றையும், அறுகுஞ்சூடிய சிவபெருமானார்தஞ் சடாடவி போலவும், திருவிழி போலவும்,

திருமுகம் போலவும் விளங்கும் பெற்றியது. இச்சிவமலையிற்றான் சூரபத்மனுதிய வசுரரைக்கொன்று, தேவர் தந்துயரைத் தீர்த்துக் காத்த கந்தக்கடவுள் வீற்றிருந்தருளுகின்றார், இதன் பாங்கரே தான் திருவாவினன்குடியென்னும் பழநித்தலமமைந்துளது. இதன்மாடே (பக்கத்தே) கூவிளவனமுமுண்டு. கோங்குவனம் என்னுமோர் தலமும் உளது. இவற்றின் பெருமைகள் எளியேனுற் புகலுதற்கு மிக அரியனவேயாயினும் சிலவற்றை யெடுத்துச் சுருக்கிக் கூறுகின்றேனெனத் திருவாய் மலர்ந்தருளுகின்றார்.

——:(o):——

இரண்டாவது

வராககிரிச் சருக்கம்.

—:o:—

வெண்பா.

சாம்பப்பெண் பாகத்தர் கந்தக்கடம்பத்தா
ரேமத் துயரகற்ற வின்பமுடன்—தாமருவின்
மேவும் வராககிரி மேலாந் திருப்புகழைக்
கூவும் வாய்க்குண்டோ குறை.

தேவகுஞ்சரிமணுளனை, வள்ளிக்கொடி புணர்கொழுகொம்பை குகனைக்கொண்டாடுங் கோதிலா முனிவர்களே! கேளுங்கள், மேற்சொல்லிய வராககிரி காலனையுதைத்த காலவும், கந்தக்கடவுளும், மேவி வீற்றிருக்குஞ் சிறப்பையுடையது. ஏனைக்கிரிகளில் எதுவும் ஒப்புரைக்க வொண்ணு வேற்றத்தையுடையது. மேலாங் கலைகளனைத்தையும் முற்றவுணர்ந்த பெரியோர் தென்பாலுள்ள வெள்ளியங்கிரியென்றே விளம்புவர். இம்மலை எழுதவொண்ணுத இயலுடையதாய் (இயல் = அழகு) தம்பாற்பயிலுநர்க்கு அவர்பாற் செறிந்

துள மலங்களை நீக்கித் தூய்மை (பரிசுத்தம்) செய்து ஈறிலா (முடி விலா) இன்பளிக்கும் வேதம்போல எவ்வாற்றலர்க்கும் (ஆற்றல்= வலிமை) குறித்துக் கணிக்கொணாததாய் கணித்தல்—அளவுபடுத் தல்) (ஒண்ணாதது—முடியாதது) தம்மைக்காண்பார்க்கும் தம்மி டைப்பயில்வார்க்கும் இகபரசாதனங்களை யளித்து முற்றிலாப் பே ரின்ப வற்றிலாப் பெருவாரிதியை யளிக்குந்தன்மைத்து, திகழும் பொன்னிறமுடையதாய், அகன்று விரிந்து நிற்றலானும், தானியங் கள், மணிகள், லோகங்கள் முதலியன தந்து உயிர்களைக் காத்தலா னும் சர்ப்பங்கள் மேல்விளங்குகின்ற தன்மையானும் இவ்வருங்கிரி பூமியையே ஒத்திருக்கின்றது. இன்னும் இதுபோல் பஞ்ச பூதங் களின் தன்மை பொருள் செயலைக்கொண்டதாய், அவ்வப்பூதங்கள் போல்விளங்குந்தன்மையுடையது. மூத்தேவர் முதலாக ஏனையர் போல அவர்பாலுள்ள குணம், செயல், பொருள் முதலியன கொ ண்டு, அவரவராய், அவரவர் உலகாய், அவைகளனைத்தையும் ஒருமி க்கப்பெற்ற விண்ணுலகாய் விளங்குந்தன்மையது. இன்னும் அண் டங்கள் பலவற்றின் வினை, பண்பு, பொருள், அனைத்துங்கொண்டு அவ்வவ்வண்டங்களாயும் அவ்வவ்வண்டங்கொளொருங்கு (ஒன்றா க) திரண்டபிண்டமாய் விளங்குவதும், பல்கோடிஅண்டங்களும் தந் திருவயிற்றிற்கருக் கொண்டீன்று தளராத்தன்மைவாய்ந்துள கந்தற் கும்ஞானசம்பந்தற்கும முதளித்தமுலையுடையாளும், உண்ணாமுலை யென்னுந் திருப்பேருடையாளும், என்னையும் எங்குலத்தையும் அடி மைகொண்டு காப்பவளுமாகிய இன்னருள் சுரக்கும் எனதன்னை இமயவல்லியையொப்பதும் தேவெணப்படுவோரெவரையும் எம தன்னை சிவையையும், எமதப்பன் சிவனையுந்தன்பாலடங்கப்பெற் றுள தன்மையாற் பரசிவமென்னும் பரம்பொருளாய் விளங்கும் பெற்றித்து(பெருமையுடையது) இனிப்பலவிரித்துப்புகலுதலென்? சீவகோடிகளனைத்தையுங்கருணையாற்புரக்குங்கண்ணுதலார் தாமே விரும்பித்தஞ்சத்தி,பாலர் சமேதராய் வீற்றிருந்தைந் தொழிலடா த்திவருகின்றனரென்றால் வேறு புகலவும் வேண்டுமோ?

இஃதன்றி மேகங்களைக் கச்சுப் போலிடையிற் கொண்டுளது, தரிசித்தவர்கள் கண்களைக் கொள்ளை கொள்ளுந் தோற்றத்தையுடையது. அரிபிரமாதியர்களாழியினு மழிதலில்லது இன்னும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையுமுடைய பிரமன், விட்டுணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளின் பெரிய அழகிய வடிவமெனப்படும். அரசமரமும், முதன்மையான சிவஞானபோதத்தைப் புகலுதற்கிடமாகிய ஆலமரமும், மாலைபோன்ற மலரையுடைய அழகிய கொன்றை மரமும், திருச்செங்காட்டிலே சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஆத்திமரமும், ஓத்தமனதராய், பதினொருகோடியுருத்திரர்கள் வழிபடும் மருதமரமும் நீண்ட திருவானைக்காவில் திவ்விய அப்புலிங்கர் மேவுதிருவெள்ளை நாவலும், அழகிய மதுரைப்பதியிற் சொக்கலிங்கப்பெருமான் தோன்றிய கடம்பமரமும், திருவொற்றியூர்க்கண்ணே மூலசோதிலிங்கப்பெருமானூர் விளங்கும் மகிழமரமும், கருங்கல்லைத் தெப்பமாயருளிய மேருவில்லியுறை திருப்பாதிரிக்கண்ணுள்ள பாதிரிமரமும், தவத்தினருங்கலைஞானிகளும் விரும்புங் குங்கிலிய மரமும், திருப்பராய்த்துறையின்கணுள்ள பராய்மரமும், சற்குருவாய்ச் சிவபெருமான் எழுந்தருளிய குருந்தமரமும், சிவபெருமானைத் தோற்றுவித்த பொன்னிறமூங்கிலும், அம்மை தொழுலிங்கர் வீற்றிருக்குங் குறும்பலாவும், சண்பகக்காடும், குறுமுனிமேவு பொதியவரைமேவு சந்தனவனமும், நிலைபெற்ற கருவூர்க்கணுள்ள குணமுள்ள வஞ்சியும், திருக்கரையூரினுள்ள வன்னிமரமும், காவிரி சுற்றியிருக்குந் தென்பதிக்கணுள்ள இலந்தைமரமும் மேலைச்சிதம்பரமென்னுந் தலத்தேயுள்ள சித்ரமூலியும், விளங்குகின்ற புளியும், முதன்மை பொருந்திய காஞ்சித்தலத்திலிருக்குங் காஞ்சியணிந்த சிறிய இடையையுடைய இறைவி தவஞ்செய்திருக்கு இனிய மாமரமும், நீண்ட கோங்குவனத்திற் பெரிய தவத்தைச் செய்த வில்வமும், கந்தக்கடவுள் உருவாகிய வேங்கைமரமும், வெட்சியும், காந்தளும், குரவும், காஞ்சியும், இவை போன்ற மகத்துவமுடைய மரங்களும், நறுங்கனி தளிர் மலர் தரு மரங்களும், சித்தர்கள் ஏத்தும் பலமூலிகைகளுமுடைய மேன்மையுடை

யது. இஃதன்றித் தேவர்களுக்கு வாகனமாகும் மிருகங்களும், புட்களும், ஊர்வனவும், மிகுதியுடையது. கானில வளங்களு மெஞ்சாதுடையது. காயத்தையாற்றுவதும், தழும்புகளையாற்றுவதும் நோயை நீக்குவதும், போன உயிரை மீட்பதும், வனப்பை மிகுத்துவதும், காயத்தை வச்சிரகாயமாக்குவதும், இரசவாதஞ் செய்விப்பதும், எண்ணரிய சித்துகளியற்றுதற் கேற்றதான பல மூலிகை நிறைந்த விக்கிரியினுள்ளே எஞ்சென்னிமிசைத் தன்னிரு சரணாரவிந்த முதலியின்பமளித்த முருகேசன் மேவப்பெற்ற தன்மையாற் சத்துருத்வமுடைய விலங்குமுதலெல்லாச்சீவராசிகளும் இயற்கைக்கு மாறாக மித்திரத்துவமுடையதாய்க்கூடி வாழுந்திருவுடைத்து. இன்னும், சூரியன் தன் சப்த புரவிகளுடனுஞ் செல்வது அம்மலையின் நடுவுயரத்தேயன்றி மேற்செல்லுதலில்லை. அம்மலையினோர் பாகத்தே மேயும் பசுக்களோடு ஒன்றாய்ச் சந்திரன்றான், ரு நிற்பன். மேலே விளங்குகின்றதாரகைகள் (நட்சத்திரங்கள்) அம்மலைச் சோலையின்கணுள்ள தேனொழுகுகின்ற நறுமலர்போல் ஒளிரும் (பிரகாசிக்கும்) பெருந்தவத்தையுடைய முனிவர்களும், பெரும்பலத்தையுடைய வேடர்களும் அதியன்பு கொண்டொற்றுமையாய் ஒருமிக்க வனத்தில் வாழ்வார்கள்.

மணிகளோடு விளங்குகின்ற இவ்வராககிரி விண்ணுற நிமிர்ந்து நிற்குநிலையால் வேட்டுவப்பெண்கள் பொன்னுலகுறுவர். பொன்னாட்டுப்பூவையரும் வேட்டுவமின்னாருடன்கூடி பன்னல் விளையாட்டும் பயில்வர், தேவமகளிர் மலைச்சுனையில் நீராடுவர். இளமாவுந் தேனுந்தின்ன வேண்டுமென்னும் வேட்கையுடையவராய் தன்னாட்டமிர்தினை யள்ளிக்கொடுத்து மாறாகப் பெற்றுப் பெருவூதியம் (இலாபம்) பெற்றவராய் மகிழ்ந்து திரிவர். குன்றுமணி மணியும் குறத்தியரை நோக்கி நவரத்தினங்களை யணிமினென்றும் தழைகளை உடன் மின் மின்னு பொன்னுடை தரிமினென்று நல்கியும், பரனுறன் மின் எம் நவமணியழுத்திய பொன்மனைக்கு வம்மினென விளித்தும், (வம்மின்—வாருங்கள், விளித்தல்—கூப்பிடல்)

அவ்வண்ணம் அக்குறமகளிர் செய்யாமை கண்டியற்கைக்குணம் செயற்கையால் திருத்துதல் கடினமெனமூறுவல் செய்யுந் தன்மையையுமுடையது. இவ்வரையின்கணுள்ள குறத்தியர் தினைகளைக் கொய்யவருங்கிளி முதலிய புள்ளினங்களை இரத்தினக் கற்களைக் கவணாகக் கொண்டோச்சி விரட்டுவர். மானின் இறைச்சிகளையரிந்து மிக்க நொய்தான அக்கினியிற் காய்ச்சுவார். தேனில் நனைப்பார், வேடருடனே உண்டு களிப்பார். ஆட்டின் மார்பிலுள்ள செவந்த இரத்தத்தைப் பலியிட்டுத் தினைமாவுடன் தேனையுங் கலந்து, கரகத்துடன் தேக்கிலை முதலியவற்றில் வைத்துப் படைத்து அக்கினியிற் நடுக்கினது நல்ல புகையையிட்டுச் சிவந்த நிறமுள்ள கண்களையும், முருக்கமலரையொத்த தலைச்சூட்டையுமுடைய கோழிகளையும் தோகைமயில்களையும், சன்னதிக்கண்ணே விடுத்து பன்னிருகரத் தெம்மண்ணலைத்துதித்து வெறியாட்டயர்வர். வேட்டுச்சிறுமிகள் கொடிய புலி, சிங்கம், மான் முதலியவற்றின் குட்டிகளையும், யானைக்கன்றுகளையும் பிடிப்பர், விளையாடுவர், கொடிகளாற் கட்டுவர், பின்னரவிழ்த்துவிடுவர், சிறுபறையை யடிப்பர். மேலும் அவ்வராக மலையில் கல்லெனவிழும் அருவியினொலியும், தேவமாதர், கின்னரர், முதலியர் கானத்தொனியும், நீராடுமோதையும், பட்சிகளின் கீதத்தொனியும், முனிவரர் சித்தர்தம் அருட்பாவினொலியும், கிளிகளின் குரலும், அவற்றைத் துரத்துங் குறமாதர்தந் திந்தொனியும் மூங்கில்கள் ஒன்றோடொன்று உராஞ்சுதலாலுண்டாகிய தொனியும், கவண் எறிதலாலுண்டாகு மொலியும், மழலை மொழிகளை வசனிக்கும் சிறார்களின் குரலும், தினைக்கதிர் கொய்வார் தழுனியும், யானைகள் முழக்கும், இடியிடிக்கு மதிர்வும் முரசவாத்தியங்களின் ஒலியும், மலையின் எதிரொலியும், மலையில் வாழும் வேடர் தம் வில்லோதையும், மலர்மதுவுண்ணும் தேனொலியும், கேட்பவர் காதுகுளிர மனமினிக்கத் தொனிமயமாகப் பகலிரவும் விளங்கும். வேடர் தம் வலிமைகூறியே போரென்றுகூறின் உடனே பகைவரை வெற்றிகொண் டன்றித் தங்கோபத்தைத்

தணிக்கார். அஃதன்றிப் பொருக்கமாட்டார். அல்லது சிலகாலந்தாங்கி யிருக்க மாட்டார். அல்லது கடைபட்டு நில்லார். இவரையன்புடனடைவோரை அவர்க்கு அரிய வமுதினை வுதவிக்காப்பர். தேவர் துயர் தீர்த்த திருச் சத்திவேல்தாங்கு மெம் நாதன் முருகனையன்றி யொருவரையும் உன்னார். அந்நாளில் திருக்காளத்தியப்பர்தந் திருக்கண்ணில் இரத்தஞ்சொரிய அதனைக் கண்டு பொறாமல் அம்பினால் தோண்டித் தம்கண்ணையவர்க்குச் சாத்தினவரும், அகப்புறப்பற்றுகளை யெல்லாம் முற்றும் வென்றவரான திண்ணனார் என்னுங் கண்ணப்பநாயனாரது குலத்திற் பிறந்தவர். சுவாமிநாதராய சுப்பிரமணியர்க்குத் தம்பெண்ணாய மான்மகளை யீந்த மாதுலனான அக்கொற்றக் குலத்திலுதித்தவர்கள். மேற்சார்பிலே வசிப்பவர். அறவழியே சென்று அறத்தவர் தம்மொடு கலந்தொழுகு நோன்பினர். இன்னும் எண்ணரும் புகழுடையோர் என்னையாளுடைய வீரன், குஞ்சரிதன் மாறன், தோகை மயின் மேலுலவு பாலன், அடியார்க்கருளு மனுகூலன் பழநிமலை மேனுறையும் பாரக்கைவேலன், தன வராகமலை வேடர்கள் பெருமையும் பேசுதற்கெளியதாமோ? இத்தன்மையுள்ள வராகமலையையடைந்தோர் எத்தகைய புல்லரும் பாவிகடாயினும் புனிதராய், ஞானமிக்குடையராய், இம்மை மறுமைப் பேற்றினைப் பெற்றெஞ்சாவீடடைந்தஞ்சாது வீற்றிருப்பர். இவ்வராக மலையிற் கிளர்ந்தோடும், ஆற்றின் கரையில் வெள்ளைநிறப் பளிக்கறையின்மேல் அதி ஆலிலோடுபிறையணிந்த பிஞ்ஞகன்றனைத் தேவர்களும், முனிவர்களும், சித்தர்களும், இயக்கர்களும், அரக்கர்களும், வசுக்களும், ஓரு மயக்கமுமில்லாராய் அருச்சனை செய்து துதித்துப்பாடி நிற்பர். இம்மலையின் கண்ணே சிறப்பு வாய்ந்த கோயில்கள் பலவுள. குளிர்நறு மிளிர் நதி பலவுள. மலர் பொதி சுனைகளெண்ணிறந்தன. இங்குள தீர்த்த மனைத்துங் கங்கையினும் பாங்குயர் பதவி தரவல்லது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த இவ்வராக கிரியில் பருவத இராசன் பெற்ற பாவையும் புல்லிய நாயினுங்கடையேன் கண்ணினும், கருத்தினும் சென்னியினும் மலர்ந்துள செய்ய தாமரைத்தாளுடைய உமா தே

வியார் ஒருபாகத்தில் வீற்றிருக்கவும், சூரர் உயிர் சோரவுண்டு தேவர் துயர் தீர்த்த வீரராய பாலர்களவு காயினே யுயிர்க்குயிராப் பரதேசிகன் நடுவே சூரியனைப்போல் விளங்கவும், சிகரங்களையுடைய பெரிய மலைகடோறும் வந்து பூசிக்குந் தேவர்க்குக் கிருபையைப் புரிந்து அவ்விடத்து வீற்றிருந்தருளுவர். உட்பகையாறையும் அறுத்து விளங்கும் உயர்குண முனிவர்களே! வராக கிரியை மிக்க தூரவிடத்தினின்று கண்டாலும் துன்பக்கடல் வறண்டு தீயும். இதனை நினைத்தாலும் பல்பிறவிகளிற்செய்துள பவங்களெல்லாமில்லைது நீங்கப்பெற்றவராய், புனிதமாதவர்புகழ் பெம்மான்பதம் பெற்றீறிலா வின்பி லினிதிருப்பர் இதன் பெருமையாரே கூறுவர் என்று கூறி முடித்தார்.

—:o:—

மூன்றுவது

மாயாத்திரிச்சருக்கம்.

——(:o:)——

வேண்பா.

மாயோனும் வேதாவும் வந்துதொழ முந்நாளில்
தாயோர் பராசத்தி தன்மாயை—மாயோக
நித்தருடன் மாமலையா நின்றருள்மா யாத்திரியென்
சித்தந் தெளிவிக்குஞ் சேர்த்து

பழநிப்பதிக்கணுள்ள வராகமலைக்கு மாயாத்திரியென்ற பெயர் வருவதற்குக் காரணமென்னவென்று நைமிசாரணியவாசிகளாகிய திண்ணிய புண்ணிய முனிவர்கள் கேட்க ஞானப்பிரகாசம் பெற்ற தபோதனராகிய சூதமுனிவர் கூறுகின்றார். முனிவர்காள்! நீவிர்

கேட்ட விஷயம் சொல்லுதற்கரியதும், இரகசியமுமானது. ஆயினும் உயர்ந்தோருக்கும் புண்ணியபுருடர்களுமாகிய உங்களுக்குரைப்பது தருமமாதலாற் சொல்லுகின்றேனென்று சொல்லுகின்றார்.

முன்காலத்தில் பராசத்தியின் திருவருளாலே சிவதத்துவ முதலாக பிருதிவி (மண்) ஈராகவுள்ள முப்பத்தாறுதத்துவ சமூகங்களாகிய உலகங்களையெல்லாம் வெளிப்படுத்திக் காத்துப்பின்னர் ஒடுக்கிய பராசத்தியானவள் எமது பெருமானாராகிய தற்பரசிவத்திற்கு மாறிலாது பெற்ற குடிலையென்னும் மடமகளின் ஒருசத்தியுருவில் குடிலையின் சத்திவடிவாகிய பஞ்சசாதாக்கியங்களுள் ஒன்றுன கர்த்திரு சாதாக்கியத்தினின்றும் சதாசிவனுகி அதினின்றும் மகேசுரன் றோன்றி அதினின்றுந்தோன்றினர் உருத்திரக்கடவுள். அவரிடத்தினின்றுந்தோன்றிய விட்டுணு, பிரமன், இருவருந் தம் மனத்தே எழுந்தருளித்தவுடனே சிவசத்தியான என்னம்மை உருவுடையவளாய் அவர்க்குமுனவந்து நின்றார். அப்போழ்து அரி பிரமரிருவரும் அன்னையின் பாதங்களை நறுமலரால் அர்ச்சித்துவணங்கித்துதித்துத் தேவி! சங்கரி! இப்பூமியிற் பலதலங்களிருப்பினும் அடியேமாகிய நாங்கள் நின்னையறிந்து அடிபரவி வணங்கியுய்யத் திவ்ய திருவுருவொன்று கொடுத்தருளவேண்டுமென்று குறையிரந்தனர். இவ்விருவருந்துதித்தற்குவந்து, அருள் சுரந்து, ஐபன் பாகப் பசுங்கொடி பகருவாள்: அன்புடைய அடியார்களே! எம்முடைய பழயகலைகளுட் பொருந்திய சத்திகளோ அளவிலாதன வாயுள. ஒவ்வோர் சத்திகளின் பேதங்களுக்கோ அளவில்லை. அவைகளொவ்வொன்றும் வரலாற்று முறைவழுவாமல் ஏழுலகங்களினும் எக்காலத்தும் ஐந்தொழில் நடாத்திநிற்கும். இவ்வைந்து தொழில்களுக்கும் நாமே காரணமாயிருக்கின்றேம். ஐந்தொழில்களையும் இயற்றுதற்கு ஐம்மூர்த்திகளான நம்மையுஞ் சிருட்டித்தேம். முறையாய பஞ்சசத்திகளும் யாமே. இன்னும் பஞ்சப்புலன்களையும் நீக்கின ஞானிகளது உள்ளத்துங்குடிகொண்டிருப்பேம். எஞ்ஞான்றும் மெய், யுள்ளம் முதலிய கருவிகள், புவனபோகம் என்ப

வற்றைக்கொடுத்து அவற்றாற் சிவகோடிகள் தமது இருவினைப்பயனையும் அநுபவித்து அழிந்து பின்றோன்றுதற்குக் காரணமாயுள்ள மாமாயை என்னும் ஒரு சத்தியாகக் காணப்படும் மாயாசத்தியானவள் யாமே. பெரிய மலையாக வருகின்றேமென்று சிவபெருமானுடன் பொருந்தி பெரியமலையுருவாய்த் தம்மாணையாற்றோன்றி விளங்கினர். பரமபதியாகிய சிவபெருமான் அம்மையாருடன் மலையுருவிற்கூடி நின்றதன்றி, மும்மூர்த்திகளுந் தாமுமொருவராய் நின்று பராசத்தியை வணங்கித் துதித்தார்; இவ்வமலனார் தந்திருவாட்டையும் அம்மையார் தந் தன்மையையும் சிற்றறிவுஞ் சின்னாளுமுடைய யாமோ கணக்கிட்டறிவது? இவ்வாறாகிய காரணத்தால் மூவுலகங்களையும் ஆக்கிக்காத்தழிக்கும் மாயையினுருவமாதலால் மாயாத்திரி (மாயாபூதரம்) எனப்பெயர்பெற்றது என்று சொல்லி மாயாசத்தி எழுந்தருளியிருக்கும் இம்மலை வராககிரி என்றபேர் வந்த காரணமுங் கூறுகின்றேமென்ன முனிவர்கள் துதித்து வணங்கி முகமன் பலகூறி யுரைத்தருளவேண்டுமென்று பணிந்து கேட்கச் சூதமகாமுனிவர் சொல்லுகின்றார்.

———:(o):———

நான்காவது

பன்றிக் குட்டிக்குப் பால்கொடுத்த சருக்கம்.

———:(o):———

வெண்பா.

காரேனந் தேடக் கழல்மறைத்த கண்ணுதலார்
சீரேனமாச் சிறுகுருளை—பேரேற
வந்துமுலை தந்த வளமார் வராககிரிக்
கந்தன் திருவடியே காப்பு.

கேளுங்கள் முனிவர்களே! இம்மலைக்கு வராககிரி என்றுபேர்
வந்ததற்குக் காரணமென்னவென்றால்; சிங்க முதலாய மிருகங்கள்
இருக்குங் காடுகளடர்ந்ததும் வேதமருளிய வியாச பகவான் இரு
ந்து தவஞ் செய்யப் பெற்றதுமான திருக்குருந்துறை என்னுந் தல
த்தில் ஒரு முனிவன் தன்வாழ்நாட்களை எம்பெருமானார் திருத்தா
ண்மலரைப் போற்றுவதிலேயே பொழுது போக்கி அட்டாங்கயோ
கமாய் சிவயோகத்தில் நெடுநாளிருந்து பின் பஞ்சாக்கினி மத்தியி
லிருந்தருந்தவம் புரிந்து வந்தார். அப்பொழுது திசைமுகன் வமி
சத்திற் றோன்றிய சுகல முனிவரின் புத்திரர்கள் பன்னிருவர் அங்
குசென்று அவரையசைத்து அவர் தவத்திற் கிடையூறிழைத்தனர்.
தடையுண்ட முனிவர் தந்தவத்தை விட்டெழுந்து இக்கொடுங்கா
ரியம் நீங்கள் செய்தமையால் பன்றிகளாகப் பிறக்கக்கடவீர் என்று
சாபமிட்டனர். இட்டசாபங்கிட்டிய தாதலின் முன்னான்கு முனி
புத்திரரும் பெருந்துயருற்று வித்தியாதரனென்னும் விஞ்சையர்
தலைவனும், அவன் மனைவியும் மாயாசலத்தில் பன்றியாயிருத்தல்
கண்டு, அப்பெண்பன்றியின் கருவினுற்றுக் குட்டிகளாகப்பிறந்த
னர். அக்காலத்தே மதுரைமாநகரத்தை அரசுசெய்துகொண்டி
ருந்த பாண்டியராஜன் வேட்டையாட நால்வகைத்தானையுடன்
இம்மலைச்சாரலைச்சார்ந்தான். சேனைகளிற்சிலர் மிருகங்களைக்கொ
ன்றழித்து வெற்றியுற்று நிற்கையில் வினைவயத்தால் பன்றிகளான
விஞ்சையர்கண்டு வெருண்டு சேனைகளை எதிர்த்துத் தாக்கிச் சின்ன
பின்னமாக்கித்திரும்புகையில் பாண்டியராஜன் தடுஞ்சீற்றமேறி வில்
லில் நாணேற்றிப் பாணம்விடுத் தாண் பன்றியைக்கொன்றான்.
அதுகண்ட பெண்மை எம் நாயகனிறந்தபின் நாமினியிருத்தல் நல
னலவென்று நினைந்து நாயகனைக்கொன்ற பாண்டியனைக்கொன்று
பின்றானும் இறக்கவேண்டுமென்ற கருத்துடன் அதிஉக்கிரவேகமாய்
பாண்டியனை எதிர்த்துப் பாய்ந்து வருகையில் சரசன் என்னும் வேடன்
கொன்றொழித்தான்.

பெற்றதாய் தந்தையரை இழந்த பன்னிரு பன்றிக்குட்டிகளும்

நொந்து நொந்து மனம் நைந்து தாயின்முலை தேடியலைந்து வீரிட்டலறிக்கதறி வாய்ப்புலர்ந்து நாவறண்டு வயிறொட்டிக்குடல்காய்ந்து உடல்சுருண்டு மயங்கிக்கிடந்தன. அப்பொழுது எங்கை சிவபெருமானுருடன் கலந்திருந்தைந்தொழிலையு நடாத்துபவளும், அண்டமெலாமீன்றாளும், காப்பாளும், அருள்வாளுமாகிய அன்னை இறைவரை நோக்கி நாதரே!

பரம்பொருளாய்ப் பரம்பொருளின் பேதமுமாய்
பரவுமண்டம் பலவுமாகி
நிரம்பியெங்கும் நிலைபொருளாய் நின்மலமாய்
நின்றவனு நிலையுங்கோடா
வரம்பறுத்து வழிபருவிக் காக்கின்ற
மாக்கருணை மணியே! என்னே!
மரம்பயின்ற மனத்தட்டனை குருளைகட்கு
வகையருளா வளர்த்தானம்மா.

எப்பொருட்கு நீதலைவன் எல்லாமும்
நீயாயுப் இயம்பலென்னே
செப்பலென்றே நீயன்றி வேறுளவோ
தொழிலைந்துந் தெளியவாக்கி
ஒப்புயர்வு காலமிடங் கற்பனைகள்
அற்றொளிரும் உறைவாயெல்லாந்
தப்பறவே யுணருணர்வே முதல்வாவோ
நீயுணரா ததுவுமுண்டோ

ஆரறிவார் அலகுபடா கிலாத குணம்
அருமறையு மலறி யின்னுங்
தேரரிய திருவுடையாய் தெரிவுடையக்
குருளைகளைத் திருவுள்ளத்தே
ஏரமுற எண்ணாத தின்றனையே
இன்றனையே இலாதுவேறு

சேரவொரு புகலுண்டோ வருள்கொண்டே
 சிந்தையுறச் செறியட்கோதாய்

என்று அம்மையாருருடன் வினவ, பரங்கருணைத் தடங்கடலாகிய மதி சூடிய சடாடவியர் அம்மையாரை இன்புற நோக்கி தையலர்தந் துய்ய திலகமே! யாம் அருளின்றியேனும் அறியாதேனும், யிருந்தேமல்லேம். பசுக்கள் தத்தம் வினைக்கேற்ற பயனையடைதல் வேண்டுமென்பது கருதியிருந்தேம். வினைப்பயன் முடியுஞ்சமயங் கருதி நின்றேமென்று சொல்லி உடனே,

தாயாகித் தந்தையுமாய்த் தனிமுதலாய் நின்றளிக்கும்
 தலைவன் அன்பர்
சேயாகித் குமராகித் தனிக்கருணை செய்யமலன்
 செவந்த வேனத்
தாயாகித் தரைதழுவித் தளர்குழவி தளர்வகற்று
 தகைமை வேண்டி
மாயாது விழுந்தயர்ந்த குருளைகள்பாற் சென்றுமுலை
 வழங்கிற்றம்மா.

நான்கு கால்களும் நால்வேதமோ? அதன் திருமேனி வேதப்பொருள் முடிபாகிய மெய்ஞ்ஞானத்தின் திரட்சியோ? சிறந்த ஒலியையுடைய ஆனனம் சொல்லுதற்கரிய அருள்வெள்ளப் பெருக்கோ? குற்றமற்ற இரத்தினத்தை யொத்த திருவுருவந்தாங்கிய பெருமானாரின் கொண்ட கோலக்கோலம் என்றெம்மனோர் வகுத்தற்கு அரிது! அரிது!!

இங்ஙனஞ் சிவபெருமான் பன்றியுருவமாகி யெழுந்தருளியது இன்பத்தாலும் அன்பினாலும் சிறந்து விளங்கும் மெல்லிய தனங்களையுடைய தற்காதேவியின் உருவமோ? அழியாப் பெருந்தவத்தை யியற்றிய மாயார்சலம் பெற்றிய வரப்பேறோ? அல்லது பன்றிக்குட்டிகள் செய்த எஞ்சாத்தவமோ? ஏதெனக் கூறுவது.

சேய்க்கிரங்கிவரும் பசுப்போல்வந்து பன்றிக்குட்டிகளைக் கிட்டியவுடனே தாயென நினைந்து அரிபிரமாதியர்க்கரிய சோதி சுந்தரன் முலைசுவைத்து தெளிவடைந்தது.

இதனைக்கண்ட வானவர் அரனின் அருள் நினைந்து ஆநந்தக் கூத்தாடினர். மலர்மழை சொரிந்தனர். துந்துமிகள் ஆர்த்தனர். பாண்டியனும் பரமனருளினைப் பாடியாடி ஆநந்தப்பரவசனாய்த் தன்னையறியாத பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிப்படி (பூமி) மிசை வீழ்ந்து ஆநந்தத்துயில்கொண்டான். சிவபெருமானின் திருமேனியினின் விழியருட்பால் மாந்திய சிறப்பினாலே உடனே பன்றிக்குட்டிகள் பன்னிரண்டும் அழகுவாய்ந்த பன்னிரண்டு மக்களாயினர். அவர்களைச் சிவபெருமான் பாண்டியற்கு மந்திரியாக்கித் தம்மிடங் கரந்தார். உடனே பாண்டியன் அவர்களை மந்திரிகளாக ஏற்றுக்கொண்டு மலைச்சிகரத்தில் கன்னே சிவலிங்கத்தை ஸ்தாபித்து உண்மைபட அருச்சித்து வந்தான். அச்சிவலிங்கப்பெருமானை சர்ப்பாபரணமணிந்த பாண்டீசப்பெருமானென நாமம் வழங்குவர். அவ்விடத்தை நேத்திரபுரி என்று உலகத்தவர் கூறுவர்

இஃதல்லாமல் அழகிய முனிவர்களே! வேறொன்று சொல்லுதற்குண் டதுவென்னவெனில் காசிபரிஷியின் வழிவந்தவராகமுனியென்போன் வன்னிமர நிழலிலிருந் தருந்தவமுஞற்றிச் சிவபெருமானை வணங்கி நிற்க மதிபுனைசடையோன் அன்னவனன்பாலிரங்கிக்காட்சி கொடுத்தருளி நினக்குவேண்டும் வரங்களைக் கேளென; முனிவன் என்பவக்கடல் வற்றவும் நின்தாண்மலர் பெற்றுய்யுஞ் சிவபோக மருளவேண்டுமெனத் துதித்து வேண்டினன். இடபாரூடராய்ப் பார்வதி சமேதராய் வந்த பெம்மான் முனிக்கு இயமம் முதலானவற்றைப் பிரமன் சந்தேகமறவுணர்த்துவனெனத் திருவருள் சுரந்து இம்மலைக்கு வராககிரியெனப் பெயர்வழங்குக என்று ஓதி மறைந்தருளினர். முனியும் யோகலிங்கமொன்று மலையினிடத்தேயுண்டாக்கி பெருமையுந் தலைமையும் பெற்றமுனிவர் கூட்டத்

துடன் துதித்து சுழன்று சுழன்று வரும் வினையை ஒழித்து வேத முடிப்பொருளாகிய அமலனார் திருத்தாள்புக்கிருந்தான்.

மேற்சொல்லிய இவ்விரண்டு காரணங்களாலும் இம்மலைக்கு வராககிரி என்று பேர் வந்ததெனவுரைத்தருளினார்.

இவைகளெல்லாங் கருத்துடன் கேட்டிருந்த முனிவர் மிக மகிழ்ந்து கொண்டாடி சூதமகாமுனிவரைத் துதித்துச் சொல்லுகின்றார்.

———:(०):———

ஐந்தாவது

அருச்சுனன்றவச்சருக்கம்

வெண்பா.

பார்த்தர்க் கருள்செய்யப் பாகப்பெண் கந்தரோடு
கூர்த்தபெரு வேடுருவங் கொண்டருளிச் — சீர்த்திமலி
பொற்பாதந் தோயவரு பூங்கொன்றைத் தாமருறை
வெற்பே தருஞ்சுதத்தை வேண்டு.

நைமிசாரண்ய முனிவர்கள் சூதமகாரிஷியை வணங்கி எம்பொருட் டிச்சிரமெடுத் தழகள் புண்ணிய புராணமாகிய சிவபெருமானும் பிராட்டியாருங் குகக்கடவுளு மெழுந்தருளப்பெற்ற வராகமலையின் வைபவங்களைக் கூறினீர்கள். இன்னும் அதின் மகிமைகளைக்கூறி யருள்புரிய வேண்டுமெனத் தவசிரேட்டராகிய சூதமுனிவர் கூறுகின்றார்.

காமம் முதலாகிய முக்குறும்பினைத் தொடர்பறவறுத்துப் பஞ்சப்புலன்களென்னுந் திருடர் செல்லும் வழியையடைத்து ஒள்ளிய தழற்கடவுட்கு ஆகுதி முதலியன கொடுத்துத் தவம்புரிந்து சிவானந்தத்தை யனுபவிக்கும் முனிவர்களே ! திவ்விய நறுமணங் கமழ் மலர்கள் தோறும் அளியினங்கள் வீழ்ந்து நறவுண்டு களிகொண்டு இன்னிசை தெவிட்ட மதுரகானம் பாடப்பெற்ற தாமரை மாலையையுடைய திசைமுகன் றலைகளிற் குட்டிச் சிறைவைத்துத் தன்றாதையாகிய பரமற்கும், ஓமெனுமறைப்பொருளை யுரைத்தருளிய குருபரன் வீற்றிருக்கும் வராகமலையின் சிறப்பு இன்னமொன்றுண்டதனையுஞ் சொல்கின்றேன் கேளுங்களெனக் கூறுகின்றார்.

தண்டலில் தமிழ்வளஞ்சிறக்க மதுரைநகர் மேவிய ஆலாலசுந்தரக்கடவுள் வெள்ளியம்பலத்தே திருநடனஞ்செய்கின்றதைத்தேவர் முனிவர் மற்றுள புண்ணியச்சீவன்களுந் தரிசிக்க நேர்ந்தகாலத்தே தாமரைப் பூவின் மேலுறையுந் திசைமுகனும், திருமாலும் இருபக்கத்தும் நின்று துதிப்ப தண்மலர்க்கற்பகநறுஞ் சோலைக்கிறைவனாகிய மகபதி தலைமிசை முகிழ்த்த (குவித்த) கையனாய்ப்பெருமான் முன் நின்று,

நெற்றிமிசை யழகுதரு கண்ணா போற்றி
நீளரவ வெயின்மணிப்பூண் நித்தா போற்றி
அம்புதமா விடையூரு மழகா போற்றி
அம்மையொரு கூறுடைய ஐயா போற்றி
சிற்பரம வெளிக்குளுறு தேவே போற்றி
தேசோ மயானந்தச் செல்வா போற்றி
சொற்பரவு வேதமுடிச் சுத்தா போற்றி
தொடக்கறுத்தே எனையாளுஞ் சொக்கேபோற்றி.

வேறு

நஞ்சுண்டாய் போற்றி நறுநதிமுடியாய் போற்றி
பஞ்சுண்ட பூந்தாட் பரையுடையாருளே போற்றி

விஞ்சுண்ட வெய்யவினை துடைத்தருளவிமலா போற்றி
அஞ்சுண்ட தொண்டர்க்கருளரசே போற்றி போற்றி

எனப்பலவாறு துதித்துப்போற்றி விஷ்ணுவானபன்றியின்தந்தத்தையும், கூர்மத்தின் ஓட்டையும், மச்சத்தின் கண்ணையும்,நரசிங்கத்தின்றோலையும், வாமனரின் கங்காளத்தையும், இன்னும் பலவற்றையும் அணிந்தருளிய பரமபதியே ! காட்டிலே வேட வடிவங்கொண்டுசென்று அருச்சுனனது வில்லாலடிபட்ட வேதமுதலே ! என்று பலவாறு துதித்து அடியேங்களுக்குத் தேவரீரேயன்றி வேறாதரவுமுண்டோ ? ஆதலால் உய்யும்வகை யருள்செய்யவேண்டுமென்று சொன்னான். அது கேட்ட மேருவில்லி மிக்கருளுடையராய் அருள்கூர்ந்து முறுவல்பூப்ப மகிழுடன் நோக்கி அவற்குவேண்டும்பற்பல அரும்பெருவரங்கள் நல்கிய பின்னர் புழுத்தநாயனையேன் எத்தனையாக்கை எடுத்திடினுந்தாழ்ந்த வென்றலைமேல் பூந்தொளிர் சரணாரவிந்தத்தையுடைய அங்கயற்கண்ணி மாதேவியார் சொக்கேசரைநோக்கி என்னுயிர்த் தலைவா ! வேதவித்தாய் விளங்குமெய்ப்பொருளே ! கொன்றையொர் சடைக்கொற்றவா ! தேவரீ அருச்சுனனை அடிமை கொள்ளும்பொருட்டு அருளைமுன்னிட்டுப் போர்புரிய வேடுருவங்கொள்ள நிகழ்வதெக்காலமெனக்கேட்டாள். அப்பொழுது இறைவர் இன்முறுவல்பூப்ப அம்மையாரை ஆர்வமுற (ஆசையோடு) பார்த்துப் பருவதராயன்பாவையே ! மாயாசலத்து நடப்பதுகாண்பாய் எனக்கூற எனதன்னை மீனாம்பிகையும் மகிழ்ந்திருந்தார்

கொடியனாய துரியோதனன் வஞ்சனையாற் பாண்டு புத்திரர்களாகிய பாண்டவர்களை அழைத்து மாயச்சூதாடுவித்து நாடுமுதற் பல்வளமுங் கவர்ந்து துன்புறக்காட்டிடைப் போகவிடுத்தகாலத்தே இவ்வராக மலையிலிருந்து அருந்தவம்புரிந்து கண்ணனைக்கண்டு அன்னவன் பாதம் வணங்கக் காப்போனாகிய கமலக்கண்ணன் வேதங்களொலிக்கப்பெற்ற மார்க்கண்டேயமெனும் வெற்பிடை (மலை) தே

ஞெழுகு முல்லைக்கொடிக்கீழ் நறுநிழலிலிருந்து பற்குனன் கடுந்தவம் புரியின் கங்கைமதி சூடியன், கந்தனைப் பயந்த எந்தை வந்தருளுவன். அதனாற்றுன்பமெலாம் நீங்கப்பெற்று பகைவென்று சுகமுறுவீரெனச் சொல்லிய அவ்வண்ணமே அருச்சுனன் சென்று அருந்தவமியற்றி நின்றான். எல்லா மறியும் ஒண்குணக்கடலாகிய இளமதிச்சடையுடை எந்தை பாண்டு மைந்தர்க்கு அருள் செய்யவேண்டி வேடவுருக்கொண்டு, சிகைவகுத்து வாகைமாலை சூடி, நுதல்விழி மறைத்து மழுமான் கொண்ட கரதலங்களில் சிலையுங் கணையுங்கொண்டு, சோகிமாலை தரித்து, நீலநிறக்கச்சணிந்து, செருப்பைக் காலில் மாட்டிக்கொண்டு சென்றார். கயற்கண்ணம்மையாம் பிராட்டி வேடுவச்சி யுருவங்கொண்டு முருகனை இளங்குதலைக் குழவியாக்கி (பிள்ளை) க்கையிலேந்திக் கூடையுடன் திரிபுவனங்களுமதிசயிக்க, எம்பிறையைத் தொடர்ந்து சென்றனள். தேவகணங்கள் வேடர் கூட்டமாகத் தொடர்ந் தெங்கிராத வேந்தர்க்குக் கையாளாகச் சென்றனர். நான்கு வேதங்களும் நல்திகழ் ஞமலிகளாக (நாய்) ப்பின்றொடர்ந்தன. யமன் பன்றிவடிவாக முன்சென்றான். காலகாலனாகிய கடுக்கைப்பிரான் ஓர் பாணம் விடுக்க அது கைதத்தம் மெய்யொடு தவம்புரி அருச்சுனன்பாற்சென் றடைக்கலம்புகுந்தது. வேடர் குழாங்கள் (கூட்டங்கள்) மூடிகிவருந்தொனியும் ஞமலிகளார்க்கின்ற தொனியும், பன்றியினடைக்கலத்தொலியு மிருசெவித்துளைகளில் மண்டி நிறைதலாற் றன்யோகநிலைவிட்டுக்கண்திறந்து பற்குனன் பார்க்கையில் நாய்கள் தொடரவுங் காமதகனனாகிய வேடன் கணைகள் பின்றொடர்தலையுங்கண்டு ஐயன் றிருவிளையாட்டென்பதுந் தனக்கருள் செய்வான் கொண்ட கோலமென்பது முணராதுவெகுண்டு நோக்கி, சரண்புகுந்த விலராகத்தை எளிதில் நீ கொல்லவிடுவனலலேன், எனச்சீறிச் சினந்தான்.

கருணைக்கடலாகிய வேடுருவந்தாங்கிய எந்தை நகைத்து, அருச்சுனனை நோக்கி, நீ சொல்வதுஞ் செய்வதுந் நகாதெனக்கூறினர். இருவரும் மறுத்து மறுத்து உரையாடிச் சினந்து சிலைகோலியமர்

செய்ய தொடங்கினர். ஓம் எனும் பிரணவ மந்திர முதல் எனைப் பண்டை வடிவங்களுங் காணுதற்கரிய பெருமானே அச்சத்தைத் தரும் வேட்டுருவந்தரித்து நடித்தால், அருச்சுனனோ அறியுந்தகையன்? (தன்மையன்). சிறந்த மந்திரங்களை அன்புடனே யுச்சரித்துக் கணைகளைக் கடுவிசையுடன் விடுத்தனன். அவைகளனைத்தும் மலராகிய மாளிகைக்கண் ஒட்டியுறும் பராகங்கள் போலாயின. உள்ளாகவளையும் வில்லொலியும், பாணங்கள் ஒலிசெய்துகொண்டு செல்கின்றவேகமும், வாயினின்றுண்டாகும் சினச்சிரிப்பும், போர்த்தொழில்பற்றிவரும். அறைகூவும், சினமும், வஞ்சினவுரையும், வீரமும், துள்ளுகின்ற தோளும், பெருகாநின்ற தொழில்வகையும், இகழத்தக்கவர் ஒருவருமில்லை யெனும்படி இருவரும் எதிர்த்தெதிர்த்துநின் றமர் ஆடினர். அக்காலத்தே அருச்சுனன் மிக இளைத்துத் தளருந்தன்மைகண்டு, கிருபாமூர்த்தியாகிய எம்பிரான் பற்குனனின் சிலைநாணறுத்தனன். நாணற்ற தன்மையைக் கண்ட பாண்டவன் சினமூண்டு கலையால் பெருமானார் திருமேனியிற்பட ஓங்கியடித்தனன். அவ்வடியோ பல்லாயிரங்கோடி யண்டத்தும்,* அதனுள்ளோரும் சராசரங்களின்மேலும் தேவர்கள்மேலும், அடித்த அருச்சுனன் மேலும் பட்டது.

சிலையாலடி படும்வேளை யிலெவர்தா மடிகொள்ளார்
நிலைமாலயன்முத லாமுயிர்யாவுந் தழும் புற்ற
மலையார்த்தனி னுடன்மீதினும்படவிம் மித முற்றுன்
கலைசூடியு வுலகெக்குறை பதிம்பன்பதோர் காட்டே

பின்னிருவரும் மற்போர் தொடங்கிக் கட்டிப்புரண்டனர்.

(பழநித்தலப் புராணம், அருச்சுனன் றவச்சருக்கம்
20வது செய்யுள்.)

வேதமடி யுண்டன விரிந்த பலவாகம
விதங்களடி யுண்டன வொரைம்

பூதமடி யுண்டன விநாழிகை முதற்புகல்செய்
பொழுதொரு சலிப்பில் பொருளின்
பேதமடி யுண்டன பிறப்பிலி யிறப்பிலி
பிறங்கலரசன்றன் மகளார்
நாதனம லன்சமர வேட வடி வங்கொடு
நரன்கையடி யுண்டபொழுதே.

வில்லிப்புத்தூரார் பாரதம் அருச்சுனன் றவநிலைச்சருக்கச்செய்யுள்

விண்ணிலுறை வானவரில் யாரடி படாதவர்
விரிஞ்சனரி யேமுதலினோர்
மண்ணிலுறை மானவரில் யாரடிபடாதவர்
மனுக்கண்முத லோர்க ளதலக்
கண்ணிலுறை நாசர்களில் யாரடிபடாதவர்கள்
கட்செவி மகிபன் முதலோர்
எண்ணில் பலயோனியிலும் யாரடிபடாதன
விருந்துழி பிருந்துழியரோ.

இவ்விதம் மற்போர் செய்கையிற் சிவபெருமானாகிய வேடர், காண்டீவனைக் ககனமுறவீசி புயர எற்றினர். அப்போழ்து மேலுற்ற வீரன் கீழுறுதற்குள் தண்ணருட்பரமதாகிய அன்னையும் கருணைத்தடங்கடற் பெருமாட்டியுமாகிய சிவை, ஈசுரனை நோக்கி வள்ளலே! இனித்திருவிளையாட்டயர் தலைவிட்டு அருள்புரியவேண்டுமென வேண்டினள். உடனே சிவபெருமான் இடபாரூடராய்ப் பார்வதிசமேதராய்க் காட்சிகொடுத்து நின்றார். வானவர் பூமாரி பொழிந்தார். பழமறைகளெல்லாந்துதித்தன. தேவதுந்துபி முழங்கின. பன்றியுருக்கொண்ட யமனும் பண்டையுருக்கொண்டு பரன் உயர் பதுமக்கழலைத் துதித்தான். இதுகண்ட அருச்சுனன் நிந்தை செய்த தன் வாயிலறைந்து கோபித்த தன் முகத்திலறைந்

தும், பெருமூச்செறிந்து தரையில் விழுந்து புரண்டு தன் குற்றங்களை எண்ணி எண்ணி நைந்துருகித் தெளிந்து,

வித்தாபொறுத்தி! விகிர்தாபொறுத்தி!
அத்தாபொறுத்தி! அருளேபொறுத்தி!
ஊனேபொறுத்தி! உயிரேபொறுத்தி!
வானேபொறுத்தி! வரமேபொறுத்தி!
வாழ்வேபொறுத்தி! வகையேபொறுத்தி!
ஆழ்வாய்பொறுத்தி! ஆதிபொறுத்தி!
கருணைக்கடலே! கபாலி பொறுத்தி!
அருணைப்பிழம்பே! அப்பா பொறுத்தி!
கடையேற்கருளுங் கத்தா! பொறுத்தி!
விடையூரண்ணா! விழைவே பொறுத்தி!
அம்மையப்பா! அமலா பொறுத்தி!
மும்மைவினைக்கு முடிவே பொறுத்தி!
புழுவிற்கடையேன் புரிந்த பொறுத்தி!
பழுபவந்தொலைக்கும் பயனேபொறுத்தி!
ஆயநின்னருளாட் டறிவனோ நாயேன்?
மாயகன்மத்துள் மறைந்துழல் கடையேன்
நாயநின்தாண்மலர் தொழும்பனேன் பற்றினேன்
தாயகமாகுந் தனிமுதற்கோவே!
குவிமனத்தடியேன் குறைபொறுத்தீசா!
நவியமைங்கையாய்! நாதா! போதா!
புன்மையேன் புலைமை தன்னையே போக்கி
இன்னருள் புரிவாய் இறைவநீயிங்கே.

எனப்பலவாறு துதித்தான். இதுகேட்ட மதுவார் கொன்றை மாலையணிந்த பெம்மான் அருண்முகங்காட்டி நின்பாற்கருணையா லிதுசெய்தனம், நீ வேண்டுவகேளெனத் தான் விரும்பிய வரங்களனைத்தும் பெற்றுப் பரமனைத் துதித்து நின்றான். எங்குமுன்

ள எம்பிரான்றன்றிருக்கோலம் மறைத்தருளினார். இம்மலைக்கண்ணே எமன் அருச்சுனற்காக வராகவுருவெடுத்தமையால் வராகமலையென்றுரைத்தலுண்டு. சிவபெருமான் நின்று விற்போர் செய்தமையா லவ்விடத்திற்குச் சாபவல்லி என்னும் பெயரும் பெற்று ஐயனருளால் வழங்கிவருகின்றது என்று முனிவர்பிரான் திருவாய்மலர்ந்தருளினார். பின்னர் முனிவர்கள் சூதமுனிவரைப் போற்றி துதித்து வியாதமுனிவர்தஞ் சிரேட்ட மாணவராகிய எங்கள் தவப்பேறே! தயவுசெய்து இவ்வராகமலையின் கண்ணே எம்பெருமானாகிய சோமசுந்தரக்கடவுள் வீற்றிருக்கப் பெற்ற திவ்விய இடங்களெல்லாம் கூறியருள வேண்டுமென்று பணிந்து வேண்டசூத முனிவர் சொல்லுகின்றார்.

—(:o:)—

ஆறாவது

வராககிரிச் சீவத்தான சருக்கம்.

வெண்பா.

வானோங்கு தெய்வ வராககிரி தன்னிலுறு
தேனோங்கு கொன்றைச் சிவபெருமான்—மீனோங்கு
வாள்விழியின் னாரிருவர் மாமுலைசேர் மாமுருகன்
தாள்விரும்பி லுண்டோ தவறு.

முன்னாள் தேவேந்திரலோகத்துள்ள பஞ்சதருக்களும் அகங்காரக்கடலில் மூழ்கி வராககிரிவந்து அந்தணவடிவந்தாங்கி ஓர் குகையிலிருந்து சந்திரசேகரனை வணங்கிப் பூங்கொத்துகளை முழைகளிற் சொரிந்தது. மூலாதாரத்துள்ள பிராணவாயுவானது நெற்

நியிலுள்ள பிரமரந்திரத்தின்மேல் உருவியகாலத்தில் அருள் சுரக்
கச்சிவபெருமான் திவ்விய அருளைப்பெற்று தருக்களனைத்துந்
தத்தமிடஞ்சென்றன. பிரமரந்திரத்துண்டாகிச் சுரக்கின்ற அமுத
மிரங்கிய இடத்தில் சிவபெருமான் சென்னிமிசையுள்ள பூக்கள் வீ
ழ்ந்து அவ்விடத்தே விளங்குதலால் வனப்புடை புரவரசு (பூவரச
மரம்) இருக்கும் இம்மலை பூம்புரை எனப்பேருற்றது. இவ்விடத்
தையடைவோர் தாம் விரும்பிய பெறவரும் பேறெலாம் பெறுவர்.
இம்மலையின் பக்கத்தே விஷ்ணு அரசு செய்யும் இடம் ஒன்றிருக்
கிறது. அதனை முன்னோர் மன்னனென்று கூறுவர் அதன் வளங்
களை எடுத்துச்சொல்லவல்லவர் எவர்? இவ்விடத்தே புண்ணிய தீர்
த்தங்களும், குளிர்ச்சி பொருந்திய அழகியசுனைகளும், சிவபெரு
மானும், கந்தக்கடவுளும், கோயில்களும், வேறுவிசேட இடங்களு
மெண்ணிறந்தனவாக விருந்தாலும் உமாபதியரெழுந்தருளியிருக்
கும், இடமாக விசேடித்துக்கூறுவது ஐந்துண்டு இவ்வைந்திடங்
களைப் பற்றிகேட்டாலுஞ் சொன்னாலும், நினைத்தாலும் மேலான
பேறுகளனைத்துந்தரவல்லது. மேககாரகிரகமென்னு மோரிடமுண்
டவ்விடத்தில் பிருதிவி பூசனை செய்தருள்பெற்றது; அச்சிவலிங்கத்
திற்கு பிரதிவீசர் எனப்பேர்வந்தது. வடமேற்குத்திசையில் வேத
கூபம் என்னுந்தீர்த்தக்கரையிலுள்ள வேங்கைமர நிழலில் அப்பு
பூதமானது தேவகன்னி வடிவெடுத்துப் பூசித்துப்பேறு பெற்றது.
அச்சிவலிங்கத்தை அப்புலிங்கரெனக்கூறுவர். தண்ணீராற் பூசிக்
கப்பட்ட இடமாதலால் அத்தானம் சிவனம்என்னும் பேர்பெற்றது.

அப்புலிங்கரிருக்கு மிடத்திற்குத் தென்கிழக்கே அக்கினி எழு
பிரமசாரிகளாகவந்து சிவபெருமானைக்குறித்து ஒருவருடம் தவமி
யற்றி எழுகன்னியர்களை மணந்து பெரும் பேறு பெற்றான். இத்
தானத்திற்கு அக்னீச்சுரம் என்னும் பேருற்றது. இத்தானமார்ந்த
ஈசனுக்கு அக்கினீச்சுரனெனப் பெரியோர் கூறுகின்றார்கள்.

இவ்வக்கினீச்சுரத்துக்குக் கிழக்கே ஒரு பகுதியில் வாயு பெ
ருந்தவஞ்செய்து பூசித்து நந்திவடிவத்தையும், மற்றும் பெறற்கரிய

வளங்களும் சிவஞானமும் பெற்றுச்சென்றது. அதனால் அத்தானத்திற்கு வாயுவீச்சுரம் என்றும் ஈசற்கு குருஞானலிங்கம் எனவும் பேரெய்தியது. இம்மலையில் பிரகஸ்பதி தலத்தில் ஆகாயமானது பிரமசாரியாய் சுக்கிரன், வியாழன், மற்றைத்தேவர்கள், நாரதர் உடனிருக்கப்பூசித்துப் பெறும் பேறு பெற்றது. இத்தலத்தே எம்பெருமானார் ஞானானந்தக் கூத்தினைச் செய்தருளுவார்.

அநாதியேபொருந்திய ஞானநாடகமாகிய திருக்கூத்தேவிளங்கமங்குலேசன் என அச்சிவலிங்கம் விளங்காநிற்கும். நினைத்த மாத்திரத்தே முத்திதரவல்லதும், எவ்வுலகத்தவரும் புகழ்வதுமாகிய தக்ஷிணகேதாரமென்றுஒருதலமுண்டு அதனையடைந்தால் உண்மையறிவாகிய சிவஞானம்பெருகும் அதன் மகிமையையுஞ் சொல்லுகின்றேன் கேளுங்கள். பெரிய தவத்தைச்செய்ய விரும்பியவராகமிருதரென்னும்இருடி நீரருந்திப் பொறியடக்கி தவம்பயின்று அட்டமாசித்தியும் பெற்றிருந்தார். இவர் பலவுலகங்கள் சென்றும் உயிர்கள் தம் வயப்பட்டிருக்கும்படியாகவும் அநேக அருமைச்சித்துகளியற்றி வடகேதாரஞ்சென்று சிவபெருமானைப்பூசித்துப் பின்னுஞ் சிவசாரூப்பியத்தைத்தரும் இத்தீர்த்தத்தை நாடிவருவார் வராககிரியின் அடிவாரத்தே யோகிகளும், ஞானிகளும், முனிவர்களும் இருக்கக்கண்டு அவர்களுடன் கூடித்தவஞ்செய்தாற் சுவாநுபூதிச் செல்வம் பெறலாமெனவெண்ணி வடகேதாரத்திலுள்ள லிங்கதரிசனத்தையும் விடமனமில்லாதவராய் ஏங்கி என்செய்வது என்று தோன்றாது ஈசனையே துதித்துவேண்ட அப்பொழுது எம்பெருமானார் அரிபிரமாதியர் துதிக்க வடகேதாரத்தே கொடுத்த காட்சியை இவ்விடத்தே கொடுத்தருளினார். இது கண்டெல்லாரும் போற்றித் துதித்து ஆநந்தக் கூத்தாடியார்த்தநின்றார். அஞ்ஞான்று சிவபெருமான் இடபவாகனத்தை விட்டிறங்கி, பிரணவ ஆதாரமான அறையின் மீது நின்று இருடிகள் துதிக்கவும், வேதங்களோலமிட, தேவர்கள் வணங்க வாணாசுரன் அழகிய முரசத்தை முழக்க உமாதேவியார்

இடப்பாகத்தை நின்று தரிசிக்க வராகமலையின்கண் திருக்கூத்தாடியருளினார்.

நிர்த்தனம் புரியும்பொழுது சந்திரகாந்தியால் கங்கைநீர் பெருகிச்சிந்தி அழகிய கூவநீர்வடிவாயிற்று. இதுகண்ட நடராசர் நடனத்தை விட்டனர். அத்தீர்த்தத்திற்கு வராகமிருத முனிவர் முதலிய தபோதனர் சுதரிசனமெனப் பேர்வைத்தனர். இத்தீர்த்தத்தையுண்டு சதாசிவவடிவமுற்று முத்தியடைந்தனர். மங்கலசிருங்கம் என்னும் ஒரு தலமுமிருக்கின்றது அதன்பெருமைகளையுஞ் சுருக்கிச் சொல்கின்றேன். கேளுங்கள்,

திருமால் முதலிய தேவர்கள் புடைசூழ்ந்து துதித்துவர, சிவபெருமானார் தந்திருத்தேவியோடும் தம் பாலரோடும் கைலைக்கெழுந்தருளினார் அப்பொழுது தேவகானம்பாடச் செவிசாய்த்து கேட்டுவந்திருந்தருளும்போது குமரக்கடவுள் வேட்டையாட விருப்பங்கொண்டமையைத் தாதைபாருணர்த்த மாயாத்திரிக்கு(பழநிமலைக்கு) போகக்கடவாய் என்று கூறியருளக் கந்தக்கடவுளும் அவ்வாறே அங்கு சென்றார். இதற்கு முன்னரே இவர் வரவுக்குக் காத்திருந்த முனிவர்கள் பாதங்களில் விழுந்துவணங்க அவர்களுக்கருள் செய்து அவர்களிடத்தே இவ்விடம் படைப்புத் தொடக்கத்தில் நமக்குப் படை விடாகுமென்று கூறினர். இதுகேட்ட முனிவர் இறத்தலில்லா முனிவர் மூலத்தான மிதுவெனத்துதித்து மகிழ்ந்திருந்தார். பின் புட்பகாந்தாவனத் தெழுந்தருளி அங்கிருந்து அடுத்தலத்துள்ள செருத்தணி என்றும் வழங்குவர். செருத்தணித் தலத்தெழுந்தருளி அங்குளவர்களுக்குந் தேவர்களுக்கும் முதலில் வேட்டுவக்கோலத்தைக் காட்டியருளிப் பின் வள்ளியம்மையாரின் திருமணக்கோலத்தையுங் காட்டியருளினார். இவ்விடத்தே வள்ளிமலையில் நடக்க திருமணக் கோலத்தைக்காட்டி யருளினதால் இத்தானத்திற்கு மங்கலசிருகமென்று பேர்வந்தது. பின்னர் குமரக்கடவுள் பழநிப்பதிக்கணியுள திருமுல்லைவனத்தே எழுந்தருளி தம்மை நினைத்துத் தவஞ்செய்யும் மார்க்கண்டேயர்க்கும், வெட்சி

மாலையைத்தாங்கிய துர்க்காதேவிக்கும் காக்ஷிகொடுத்து அருள்புரிந்து தினந்தினம் பண்டைய பல ஆன்மாக்களுக்குங் கிருபைசெய்து பூம்புரை என்னுந்தலத்தில் வீற்றிருந்தருளினார் இஃதன்றி இது போன்ற சிவபெருமானுடைய தலங்களும், திவ்விய நதிகளும், தீர்த்தங்களு மிருக்கின்றனவென்று சூதமகாமுனிவர் கூறியருளினார்.

—:0:—

ஏழாவது

நதியுற்பவித்த சருக்கம்.

வெண்பா.

வாழ்வு தருந்தெய்வ வராககிரித் தீர்த்தத்தில்
மூழ்குபவர் முட்டாமே மும்மையிலும்—தாழ்வின்றி
நல்லசுகந் தாய்பெற்று நங்கையொருபாகத்தன்
வல்லபதத் தேவாழ்வார் வாய்ந்து.

முன்வந்த நல்வினைப் பகுப்பினால் வேத ஆராய்ச்சியுடையராய்ச் சிவமேபொருளென்பதைக் கடைப்பிடித்து தவத்தையியற்றி அவன் பாத மடையும் வழி நிற்கும்முனிவர்கள், சூதமுனிவரை வணங்கி ஐயகோ! இவ்வராககிரியில் நதி உற்பவித்தவிதத்தை அடியேங்களுக் குரைத்தருளவேண்டுமென்று தாழ்ந்து வணங்கிக்கேட்க முனிவர்பெருமானாகிய சூதமுனிவர்சொல்கின்றார்.

கேளுங்கள் தவசிரேட்டர்களே! எம்பெருமானார் வீற்றிருக்கும் பெருமைவாய்ந்த கைலைமலையில் சுத்தகலா தத்துவத்தினின்றுந் தோன்றிய மூலப்பிரகிருதி என்னும் மாயையானது கன்னிப்பெண்

ணின் வடிவெடுத்து அருட்கடலாகிய ஆலாலனைத் துதித்துத் தவஞ்
செய்ய உயர்வுள்ள நிலையுடைய இடமொன்றருளல் வேண்டு
மெனப்பணிந்து துதித்து வேண்டலும் கருணைப்பங்கடவுள் மனமி
ரங்கிப் பஞ்சபூதங்கள் எம்மை வழிபட்டுப் பேறெய்திய முல்லைவன
மென்னுங் கர்ப்பபுரியை அடைந்து செய்ய, காமதேனுருவங்கொ
ண்டு எம்மைப்பூசித்து உலகமெலாந் தோன்றச்செய்வாயாக என
ஆக்ஞாபித்தார். அவ்வண்ணமே, அவள், அவ்விடஞ்சென்று, காம
தேனுருக் கொண்டு எவரும் இதற்கு முன் செய்யாத அரும்பெருந்
தவத்தைச்செய்துவந்தாள்; அப்பொழுது சிவபெருமானாரின் கட்ட
ளைப்படி அகத்தியமுனிவர் தென்பாலுள்ள பொதியமலைக்குவந்
தார். அவர் பூமி உய்யும்படி இப்பொதியச் சிகரத்திருந்த பொரு
நை ஆற்றின் நீரைத் தரைமிசைவிடுத்தார், அதில், ஒரு பாதி தாம்
பிரமலைவழியாய்ப் பாய்ந்து சென்று தாம்பிரவர்ணம் பெற்று தாம்
பிரவன்னி எனும் பெயர் பெற்றது. மற்றோர் பாதி, வடதிசையாய்
ஓடிச்சென்று பாதலமளவும் போம் ஒருவழியாய் ஓடிச்சென்று
வராகமலைக்கணவந்து சமுத்திரம் போலப்பெருகி ஐந்து துறைகளை
யுஞ் சேர்ந்து அழகிய பல அரும்பொருள்களும் வாரிக்கொண்டு
வந்து விரைந்து சென்று திருப்பாற்கடலிற்கலந்தது. சித்திரமாக
ச்செல்லும் இச்சித்திராநதி திரிகூடாசலம் என்னும் மலையில் ஒரு
சிறு பகுதி தங்கி நின்றது. ஒரு பகுதி ஏனை மலையருவிகளோடு
கூடி வைகை என்னும் பெயரோடு சென்று உவர் நீர்க்கடலையடை
ந்தது. ஒரு பகுதி மேற்கே சென்று குடகடலிற் சங்கமமாயிற்று.
இவ்விதமாக தமிழ் வளர்த்த தவப்பெரும் அகத்திய முனிவர் வீற்
றிருக்கப் பெற்ற பொதியமலையினின்றும் போந்து கொற்றக்குமரன்
மலை ஆகிய இவ்வராகமலையிற் பெருகியோடும் நதியின் பெருமை
எடுத்துப் புகல்வது எவர்க்குத்தான் எளிதாகும். இந்நதி மாயாத்
திரியைச் சார்தலாலும், பிரகிருதியாற் பூசிக்கப்பட்ட இடம், இருத்
தலாலும் சேரராசனுக்கு நல்லபாலுடன் கொண்டுவந்து ஊட்டலா
லும் பூமியிலுள்ள ஆன்றோர் இதனை அம்பாநதி என்று சொல்கின்
றார்கள்.

ஆன மாயைவெற் படைதலா லருட்பிரம் கிருதி
தான மெய்தலா லத்தமான் றடம்பொழிற் கருவூர்க்
கோன வற்குநன் பாலுட னூட்டலாற் கொணர்ந்து
மாநி லத்திலம் பாநதி யென்பர்நூன் மரபோர்

என்னும் பழநித்தலப்புராணச்செய்யுளானு முணர்க

மாமரத்தின் நிழலிற் செல்லும் தாய்பிரநதி உமாதேவியார் பசுவினுருக்கொண்டு வீற்றிருக்கின்ற இடத்திற்குப் போதலால் பொருநை என்னு நாமம் பெற்றது என்று பெரியோர் கூறுகின்றார்கள்.

மணிமுத்தாநதியும், காவிரியாறும், தாம்பிரபர்ணிநதியும், அழகு நெருங்க விளங்கும் முக்கூடலில் அழகிய பணியீசரும் திரிகுலேசப்பெருமானும், வீரேசரும், ரிடபாரூடேசரும், பிரமேசரும், தாரகேசுரரும், விசாலேச்சுரரும், கரசேச்சுரரும், அகத்தியேச்சுரரும், அனந்தேச்சுரரும், கொங்கணேச்சுரரும் ஆகிய இம்மூர்த்திகள் வீற்றிருக்கின்ற தானங்கள் இந்நதி தீரத்தே விளங்குகின்றன. வேறு வேறு பக்கங்களிலும் துறைகளிலும் அநேக சிவதலங்களும் புனித தீர்த்தங்களும் விளங்குகின்றன. உமாதேவியார் பசுவடிவங்கொண்டு பூசித்த இடமாதலால் பசுமலை என்று பெரியோர் கூறுகின்றார்கள்.

இஃதன்றி சண்முகநதி என்று ஒன்றுண்டு அதைப்பற்றிப் பின்னர் சொல்கின்றேன். இப்பொழுது முற்காலத்திருந்து சிறப்புப் பெற்றுவிளங்கும் திரிவேணி சங்கமதீர்த்தம் என்று ஒன்றுண்டு அதனைப் பற்றிக்கூறுகின்றேன் கேளுங்கள். இமையமலையில் உமாதேவியார் தனக்கேழு பெண்கள் குற்றேவல் செய்யப்பெற்றவளாய் சிவபெருமானை நோக்கி நோன்று அப்பரம பதியையே தனக்கு நாயகனாகக் கொண்டாள். அப்பொழுது தேவியாருக்குக் குற்றேவல் செய்த ஏழு பெண்களும் இறைவர் பாதத்தை வணங்கித

துதித்து நின்றார்கள். அப்பொழுது வெள்ள வேணியன் அப்பெண்களை நோக்கி நீவிர் வராகமலையின் கணுள்ள வேதகூபத்தின் வனப்பு வாய்ந்த கரைக்கண் நிற்கும் வேங்கைமரத்தடியில் தவஞ்செய்யுங்கள். அப்பொழுது யாம் வந்துமக்கருள் செய்வோமெனப் புகன்றருளினார். அவ்வண்ணமே, அவ்வேழு பெண்களும் அவ்விடஞ்சார்ந்து எம்பெருமானார் திருக்கோலத்தாள்களையே மனத்திற் பதித்தவராய்த் தென்றிசை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். அஞ்ஞான்று சிவபெருமானார் அவருள்ளத்திடத்தையாராய்தல் வேண்டிக் காயத்திரி தீர்த்தமும் பொருநையாற்று நீரும் சமுத்திரம்போற் பெருகுமாறு ஒரு திருவிளையாட்டுச் செய்தார். அவர்கள் அஞ்ஞான்றும் (பொழுது) உள்ளத்திற்றளர்வு பயமுதலியனவின்றி, ஈசனை நினைத்த வண்ணமாகவே அவ்வேழு பெண்களுமிருந்தனர். அவ்வெள்ளம் அவர்களை வலம் வந்து சென்றது. பத்தப்பிரியராகிய பெருமான் உமாதேவி சமேதராய் இடபாரூடராய்க் காட்சிகொடுத்து வேண்டிய அளவிறந்த அரும் பெரும் வரங்கள் நல்கி மறைந்தருளினார். இவ்வாறான காரணத்தால், அப்பீசர் என்னும் பெயரும் அவ்விடத்திற்கு மாதரீச்சுரம் என வழங்கி வருகின்றது மாயாசலம் என்னும் மலையுடனே கூடத்தோன்றுதலால் மாயாபுரி என்னும் பெயருடன் விளங்குகின்றது. இவ்வேழு பெண்கள் பொருட்டால் வராகமலையினிடத்தே காளிந்தி, சரசுவதி பொருநையாறு என்னும்இம்மூன்று நதிகளும் ஒன்று சேர்ந்து விளங்குந்தலம் திருவேணிசங்கமம் எனவும் அரும்பெயர் பெற்றது. சொல்லப்பட்ட மாயாபுரிக்கு மேற்கே ஆறுகுரோசத்திற்கப்பால் காளிந்தி நதியும் சரசுவதி நதியும் தாமிரபரணி என்னுமிம்மூன்று நதியும் ஒன்று சேரும் அது திரிவேணி சங்கமமாகும். அவ்விடத்தே சிவபெருமான் உருவங்கொண்டு திருமாலும் பிரமனும் இருபுடை (இரண்டு பக்கம்) நிற்க எழுந்தருளியிருக்கின்றார். இம்மூர்த்தியை மகாப்பிரபு என்று பெரியோர் கூறுகின்றார்கள். இவ்விடத்தே தம்மை வழிபட்ட அரிபிரமர்களுக்கு நல்வர நல்கி எம்

பெருமானார் வராகமலையின்கண் தமது திருவடியை நிறுத்தி யறிதற்கரிய பரம்பொருளாயினர். மாதரிச்சுரம் என்னும் இத்தானத்தே எப்பிறைவர் தமது அடிச்சுவட்டைப் பதித்திருக்கும் இடமாதலால் இதனை சோதிபதத்தானம் என்கின்றார்கள். வராகமலைக்கு வடக்கே சித்தர்களும், முத்தர்களும், யோகர்களும் நெருங்கியுள்ள அழகிய சித்தகிரி என்றோர் வெற்புளது அதில் சிவபெருமான் திருவருள் வடிவமென்று சொல்லப்படும் ஏழு பெருந்தீர்த்தங்களிருக்கின்றன இவற்றுள் பனிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை எம்மன்னால் சிரமிசையுள்ள கங்காநதி தோன்றும் இதின் மூழ்கியவர் இட்ட காமியங்களைப்பெற்று முத்தியடைவர். இது (சத்தியம்) சித்தமலைக்கண்ணுள்ள தாமிரபர்ணி நதிப்பக்கத்தில் கீழ்பால் சந்திரகிரியொன்றுன்றுளது அதில் சசி (சந்திரன்) தீர்த்தமென்னும் நல்ல தீர்த்த மொன்றுண்டு. சந்திரன் வளர வளர நீர் மிகுந்தும் தேயத்தேய நீர் சுருங்கியும் வரும். வேறோர் தீர்த்தமும் உண்டு. இதில் ஆடுவோர்க்கு எல்லா நோயும் எல்லாப் பாவமும் அழியுமென்று மேலோர் சொல்லுகின்றார்கள் அதற்குச் சமீபத்தில் சூரிய தீர்த்தமென்றொண்டு. அது தன்னில் மூழ்கினவர்களுக்கு சிவஞானத்தைக் கொடுக்கும். அதற்குப் பக்கத்தில் அழிவில்லாத சூலசிருங்கமலையின் கண்ணே ஓர் அதிசய தீர்த்தமுண்டு அதுபல அற்புதங்களைக்கொடுக்கும். சூலசிருங்கம் என்னும் மலைக்கு வடகிழக்குத்திக்கில் முன் கூறியப்பிரமமலை உள்ளது. அம்மலையின் உச்சியில் விநாயகக்கடவுள் வீற்றிருக்கின்றார். அதன்மேல் உயர்ந்த பல குகைகளுண்டு. அவைகளின் மத்தியிலுள்ள குகையில் உலகந்தாங்கும் அரிய பராசத்தி வீற்றிருக்கின்றாள். அவ்விடத்தே பல்லாயிரங்கோடி சித்தகணங்களும், போகர், முனிவர், முத்தர், தேவர்கள் கூடியிருப்பர். ஞானவடிவாகிய பராபரைத்தீர்த்தமும் சிறந்த அன்ன தீர்த்தமுஞ் சூழ்ந்திருக்கின்றது.

இவ்விடத்தேதான் பிரமதேவர் நாகர் வடிவங்கொண்டு பராசத்தியை வணங்கினார். இத்தீர்த்தங்களாடி அம்மை பராசத்தியை

யும் ஐங்கரக்கடவுளையும் வணங்கினோர் மும்மைப்பயனையும் பெற்று முடிவிலின்பமடைவரென்பது வேதமுடிபு. பிரமன் நாகவுருக்கொண்டு பராசத்தியை வணங்கின காரணத்தால் பிரமமலை எனப் பெயர்வந்தது இதன் பக்கத்தேயுள்ள வேறொரு மலையில் தெய்வத் தன்மையுள்ள மடுக்கள் பலவுண்டு. ஞானியரும் முனிவரரும் பக்கங்களிலிருக்கின்றார்கள். இதற்குத் தென்கிழக்கில் பெரிய வராக மலையுளது. அதற்கு வடக்கே நாராயண மலையுண்டு அதில் திருமால் பசுவுருக்கொண்டு சத்த தீர்த்தக்கரை மேவிய சித்தர்க்குந் தேவர்க்கும் அருள் செய்து சிவபெருமானைத் துதித்துப் பெருமையுற்றதால் பெருமாள் மலை என்று பேரெய்தியது. இந்த மலைக்கு வடக்கில் சத்திகிரி, சிவமலை என்று இரண்டு மலைகளுண்டு. அவற்றின் பெருமைகளைப்பின்னர் சொல்கின்றேன் பன்றிமலையின் வளங்கள் முழுதும் சொல்ல ஒருநாவுடைய என்னாலாமோ ஓராயிரம் நாவுடைய ஆதிசேடனாலும் முடியாது வராகமலைக்குப் பக்கத்தில் வடதிசையில் கன்னிகார வனமொன்றுண்டு. அங்கெழுந்தருளிய சிவலிங்கத்திற்குத் தூய்யலிங்கமென்பர் இதன் பெருமை மனத்தாலும் நினைத்தற்கு அரிது! அரிது! அரிபிரமர் போற்றுமிச் சிவலிங்கத்தை அர்ச்சித்தவர் தம்மேம்பாடு இவ்விதமென்று சொல்லுதல் கடினம், என்று சொல்லி சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்குச் சொல்லியருளினார்.

——(:o:)——

எட்டாவது

கன்னிகார வனச் சருக்கம்.

வெண்பா.

கன்னனுடன் வேதாவும் கன்னியுமை தானுமுனம்
எண்ணரிய வர்ச்சனைசெய் தின்புற்ற—கண்ணரிய

கன்னிகா ரப்பேர் கடிவனத்தைக் கண்டாலும்
பொன்னுலகும் வந்துதொழும் பூண்டு.

வேதங்களில் வல்ல முனிவர்கள் சூதமுனிவரைத் துதித்து உலகவிருளழிக்கும் பகுதி (சூரியன்) போல எம்மனத்தின் கணுள்ள இருளையழிக்குஞ் சூரியனைப்போல விளங்குஞ் சூதமுனிவரே! நீர் சொன்ன அரும் பெரும் சிவபெருமான் றிருக் கதைகளால் மிகத் தூயரானோம். அச்சிவ புண்ணிய சாத்திரங்களை இன்னுங் கேட்கவேண்டு மென்னும் ஆசை அதிகரிக்கின்றபடியால் இன்னுந் தாங்கள் சிரமத்தைப்பாராட்டாது கூறியருளவேண்டுமென் றுரைக்க சூதமுனிவரும் அகமகிழ்ந்து கூறுகின்றார். முனிவர் தஞ் சிரேட்டர்களாகிய உங்களுக்குச்சொல் லுதலினும் வேறு தவப்பயனெனக்கென்னவிருக்கின்றது. ஆகையால் அவசியம் சொல்லுகின்றேன் கேளுங்களெனக் கூறுவார். முன்னம் பிரகாசமுடைய சிவலிங்கமொன்றிருக்கின்றது. அது தன்னையடைந்து பூசித்தவர்களது மனமுருகுப்படி முத்தி இன்ப மளித்தருளுந் தகைமைத்தென்று கூறினேன். அதனை விவரித்து தெளியச் சொல்கின்றேன். இயம்புதற்கரிய வேதங்களும் அது இது உது என வருத்துரைக்க முடியாத்தகைமை வாய்ந்த சிவபெருமானாகிய தன் மதிச்சடையார்க்கு முன்னம் ஆலகால விஷத்தை யீந்தனம் இப்போழ்தாகிலும், அவரை திருப்தி செய்வோமெனவெண்ணி, திருப்பாற்கடலே ஒன்றாய்த் திரண்டு வந்ததனைய வெள்ளியங்கிரிமேல் எம்பெருமான் பார்வதி சமேதராய்ச் சிங்கஞ்சுமந்த ஆசனத்தில் வீற்றிருக்கும் போழ்து திருநந்தி தேவர் தன்னுடைய பிரம்பால் தேவகணங்களை ஒதுக்கிப் பக்தி பந்தியாய் நிறுவப்பட்ட அத்திருவோலக்கத்தில் தேவகுருவாகிய வியாழபகவான் பெருமான் முன் சென்னிமிசை கூப்பியகரங்களோடு அவர் அடிமிசை வீழ்ந்து வணங்கி மயிர்பொடிப்பப் புளகங் கொண்டு ஆனந்தக்கூத்தாடிச் சிறிதுந் தன்னையறியாது ஆனந்தப் பரவசப்பட்டுச் சிறிது தெளிந்து,

தத்துவமாய்த் தத்துவங்கட் கப்பாலா
யறிவாகித் தானுந்தேரா
சித்துருவாய் முத்தொழில்செய் மூர்த்தியராய்
மூவருளுந் தேவே மூல
நித்தியனாய் ஐந்தொழிலு மாக்கியரு
ளானந்த நீண்டசோதி
வித்தகனாய் நின்றொளிருங் கத்தவெமைக்
காத்தருள்வார் வேறுமுண்டோ.

குறியாகிக் குணமாகிக் குறிகுணங்கட் கப்பாலாய்க்
கோதில் ஞான
அறிவாகி யறிவானாய் யானந்த நிலையாகி
ஆய்ந்த மூல
நெறியாகி நித்தியனாய் நின்றருளும் பெம்மானே
நின்னுள்ளத்தைச்
செறிஞானஞ் சிறிதுமிலா என்போல்வார் அறிதரவுந்
தெள்ளிதாமோ.

படைப்பானும் படைப்பானைப் படைத்தானும்
பண்டை முதல் பார்க்கவொண்ணா
விடைப்பாகா! விமலா நின் சன்னிதியி
லைந்தொழிலு மேவக்கண்டேம்
உடைப்பரிய வல்வினையே முன்பெருமை
உணர்தரவு மூற்றமில்லேம்
கடைப்பட்ட வெம்மையொரு பொருளாகக்
கண்ணுதலே காக்க வென்றான்.

என்று பற்பல துதிகளைச் சொல்லிப் பாடித் திருவருளின் கடாக்ஷண்யத்தை விரும்பி நிற்க, சண்முகக்கடவுளைப் பெற்ற சதாசிவ மூர்த்தியின் சரிபாகம் பெற்ற இமயவல்லி இறைவர் பாதத்தை இறைஞ்சி தேவே! வேதங்களை ஓதியுணர்ந்த வியாழன் நின்னை

தத்துவங்களாயும் தூலசூக்குமமாகிய வடிவங்களை யுடையாய் எனவும் துதித்தனனே. அது எனக்கு ஒன்றுந் தெரியவில்லை. விளங்கக்கூறியருளவேண்டுமென்று தேனினுமினிய இன்னிசைச் சொற்களாற் கொஞ்சிக் கெஞ்சிக் கேட்க, எம்பெருமானார் மனமகிழ்ச்சியுடன் நங்கை தூலசூக்குமமென்னும் அவ்விருவுருவும் ஓர்சம்பந்தத்தைக்கொண்டிருக்குமென்று கூறியருளினார். பின்னும் அதனை விளங்கக் கூறவேண்டுமென்று கேட்கக்கருணைமூர்த்தியாகிய பசுபதி கூறுகின்றார்.

ஆகாயத்தைப்போலமலைமுழுவதையுங் கொள்ளுவேம். கோபுரங்களும் தூபியும் பலியிடுகின்ற மதிக்கத்தகுந்த அழகிய பலிபீடமும் ஏனைய வகைகளும் ஆகிய அவையெல்லாம் விளங்கா நின்றது, தூலலிங்கமெனப்படும். அவை ஏழு வகைப்படும் அவை என்னவென்றால்,

1. பரார்த்த லிங்கம்—சிவபெருமான் மகாசங்கார காலவரையும் சாக்கித்தியராயிருந்து ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்கப் பெறும் இலிங்கம், இதனை தாவரலிங்கம், திரலிங்கம் என்றும் கூறுவர்.

2. சுயம்பு லிங்கம்—தானே தோன்றியது.

3. காணலிங்கம்—விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர், முதலிய சிவகணாதியர்களால் தாபிக்கப்பட்டது.

4. தைவிகஇலிங்கம்—விட்டுணு, பிரமன், இந்திரன் முதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது.

5. ஆரிடலிங்கம்—அகத்தியர், புலத்தியர், நாரதர், அத்திரி வசிட்டர் விஸ்வாமித்திரர், காசிபர் வாமதேவர் பிருகு முதலிய முனிவர்களாலே தாபிக்கப்பட்டது.

இராக்கதர் முதலியோராலும் தாபிக்கப் பட்டதுவும் இதுவே.

6. மானுடலிங்கம்—மனு முதலிய அரசர்களாலும் அறிவுடைய கண்ணர், பரசுராமர், இராமர், முதலாயினோராலும் தாபிக்கப்பட்டதாம்.

7. கணிகலிங்கம்—பூசித்தவுடன் விடப்பட்ட லிங்கம் இது மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்ஷம், சந்தனம், கூர்ச்சரம், புட்பமாலை, சருக்கரை, மா என்னும் பன்னிரு பொருள்களுள் ஒன்றாற் செய்யப்படுவது.

பார்த்தலிங்கமுதல் கணிகலிங்கம் (க்ஷணிகலிங்கம்) வரை முறையே ஒன்றின் ஒன்று தாழ்ந்தது என்று கூற, உமாதேவியார் எந்நாதா அப்படியாயின் பார்த்தலிங்கம் அல்லது சுயம்புலிங்கத்தில் அருச்சனை செய்யும்படி தகுந்த ஒரு தலத்தைத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க பெருமானார் பேருவகையுடன் சொல்லுகின்றார். உமையே! தென்றிசையிலே வராகமலைக்கு ஆறு நாழிகை வழிகொண்ட விடக்கில் கன்னிகாரவனத்திலே பிரமனும் விட்டுணுவும் முன்செய்த தவத்தினாலே மூலகாரணமாகத்தோன்றியுள்ளேம். பெண்ணரசே நீ அவ்விடஞ்சென்று வழிபாட்டைச்செய்வாயாக என்றருளினார். உமாதேவியார் கேட்டு பின்னரும் சிவபெருமானைத் துதித்து விஷ்ணுவும், பிரமாவும் விரும்பித்தவஞ் செய்து என்ன வரங்களைப்பெற்றார்கள் என்றுகேட்க, ஆதிமறைப் பொருளாகிய அமலன் கூறுகின்றார், கிருதயுகத்தில் விஷ்ணு உலகத்தைப்படைக்குமாறு தன் உந்தியிற் பிரமனைப்படைத்தான். வேதத்தினையும் உபதேசித்தான், இன்றியமையாப்பொருள்களின் இலக்கணங்களையும உபதேசித்து பூமி முதலியவற்றைப்படைப்பாயாக வென்றுக்ஞாபித்தான். அவ்வாறு படைத்துவந்தபிரமன் பிரமண

வப்பொருளின் உண்மைப்பொருள் நானென்பதுதெரிந்தும், அகங்காரத்தால் தானே பரம்பொருளென்னும் அகங்காரத்தில் முழுகினன். அதன்பயனாய் ஐந்தொழிலும் அமைப்பவன்றானே என்று கர்வத்தைக் காட்டி னின்றான். இதனைத் திருமாலறிந்து அவன் அகங்கார மமகாரங்களை ஒழிக்க நினைத்தான். அக்குறிப்பின்படியே திருமாலின் குண்டலங்களிலிருந்து மதுகைடவன் என்னும் இரண்டு அசுரர்கள் தோன்றி பிரமன் கையிலிருந்த வேதத்தைப் பிடுங்கிக்கொண்டு சமுத்திரத்திற்குள் புகுந்தொளித்துக்கொண்டார்கள். உடனே பிரமன் செயலற்றுத் தன் வலியடங்கி அகங்காரம் நீங்கித் தன் பிழையை ஓர்ந்து (தெரிந்து) திருமாலைச் சரண்புகுந்து வேண்டினன். மனமிரங்கிய திருமால் அபயங்கொடுத்து மச்ச உருவெடுத்துக் கடலுட்சென்று அவ்வசுரர்களை வதைத்து நான்கு வேதங்களையுங் கொணர்ந்து கொடுத்து ஆகாய முதலிய எழுலகங்களையும் முன்போல விளங்க வைத்தான். அப்பொழுது பிரமன், மகாவிஷ்ணுவைத் துதித்துப் புகழ்கின்றபொழுது விஷ்ணு பிரமனைக் கையமர்த்தி இப்புகழ்ச்சிக்குச் சிறிதும் யான் உரியன் அல்லேன். அட்ட திக்குப்பாலகரும் எத்தேவரும் யானும் நீயும் ஆயிரங்கூறொன்றிலாயிரங்கூறிலொன்றிற்கும் சமமாகாததோர் நம் நாதர் ஒருவருண்டு. அவரே இப்புகழ்ச்சியைப் பெறுதற்குரியர் எனக்கூற, அப்பெருமானைத் தமியேனுங்கண்டு தொழ அருள் செய்ய வேண்டுமெனப்பணிந்து பரிந்து வேண்ட அருள்செய்ய விரும்பிய விஷ்ணு பிரமனையும் அழைத்துக்கொண்டு வராகமலையின் வடசாரலிலேயுள்ள கோங்கு வனத்தையடைந்தான். அங்கு குளிர்ந்த இடத்தில் மலர் பொருந்திய ஓர் தடாகமொன்றமைத்து பிரமனைக் கரையிலிருந்து தவஞ்செய்யும்படிக் கட்டளையிட்டுத்தானும் நீரினுண் மூழ்கித் தவஞ்செய்தான். இவர்கள் தேவதினத்தில் நாற்பது தினம் வரையுந் தவத்தைச் செய்தனர். அப்பொழுது யாம பாதலத்தினின்றும் முளைத்த மலைபோல மிக்க ஒளியுடையதாக பூமியினமேல் சிவலிங்க வடிவங்கொண்டு மேற்றிசைத் திருமுக முற்றுப் புட்பங்க

ளிறைந்த திருப்பாற்கடலையொத்த தடாகத்தில் தோன்றி அவ்விருவருக்குங் காக்ஷி கொடுத்தோம் மீனுருவும் பாம்புருவுங்கொண்ட விஷ்ணுவும் பிரமாவும் நாள்தோறும் ஐப்பசிமாத முழுதும் செவ்விய சிவந்த பாதங்களை யருச்சித்தனர். அப்போழ்து இடபாரூடராய்க் காட்சி கொடுத்தோம். அவர்கள் விரும்பியபடி வேண்டிய வரங்களைக் கொடுத்த யாம் அந்த லிங்கத்தினின்றும் ஒரு கணமும் பிரியாதிருக்கின்றோம் அவ்விடத்தேயிருந்து நீ நிறைவாக வழிபடின் அக்கினி சாக்ஷியாக உன்னை திருமணஞ்செய்வோம் என்று திருவாய் மலர்ந்தருளினார். அரிபிரமர் துதித்தாலும், பிரமப்பொருளாயிருந்தலினாலும், அச்சிவலிங்கத்தை பெரியாருடைய நாயகன் என்று எக்காலத்துந் தொழுவார். அத்தலம் சபாபுரம், பிரமபுரம் என்னும் பெயருடையதாய் விளங்குகின்றது, என்று கூறியருளிய கூற்றுடை பாதப் பரம் பொருளை நோக்கி எந்தலைவா! நிறைவாக வழிபட வேண்டுமென்றது எதுபற்றி? அதனை யடியாட்குத் தெளிவுபடவுரைத்தருளவேண்டுமென்று பணிந்துகேட்கச் சடாடவியர் சொல்கின்றார். முன்னர் தாருகவனத்து முனிவர்கள் வேத நூல் வழியை விட்டு வாம்வழி குறித்தவராய் ஒழுகினார் அவ்வொழுக்கத்தை நீக்கவேண்டுமென்றிந்த காலத்தில் திருமாலும், பிரமனும், முனிவருஞ்சென்று அவர்படிற்றொழுக்கத்தைக் கண்டு எம்மிடத்தில் தெரிவித்தார்கள். அது கேட்டுக் கோபித்திருந்த தன்மை கண்டு, கைகுவித்து, என்னருகில் வந்தனர். யானும் இருபத்தைந்து வடிவங்களில் ஒன்றாகிய பிட்சாடன மூர்த்தி வடிவங்கொண்டு சென்றோம். திருமாலும் மோகினியுருவங்கொண்டு தொடர்ந்தான்; அவன் மேல் காதல்கொண்டேம் மோகினியை நோக்கி நின்னைச் சேர்வேன் என்று கூறினேன். அப்பொழுது அவன் முனிப்பெண்களது கற்பும், முனிவர்களது அகங்காரமுந் தீர்ந்தபின் என்னைச் சேர்ந்தருள்வீராக என்றனன். அப்படியே யாம் பிட்சா பாண்டமாக ஓடேந்திசெல்லுகையில் முனி பன்னியர் அனைவரும் நாணற்றும், கலையற்றும், வளையற்றும், கற்பற்றுந் தெளிவிலராய்க் கிடந்தனர். மோகினியுருவைக்கண்ட தாருகாவன ரிஷிகள் காமந்தலைக்கொண்டு தட்டழிந்து.

கெட்டு அழிந்தார்கள். சிலர் விஷப்பமுணர்ந்து எமக்கூறு செய்ய, யானை, தீ, மழு, மான், நாகம், புலி முயலகன் முதலியவைகளை வேள்வியினின்றாக்கிவிடுத்தனர். அதனை யாம் உறித்து உடுத்தும், ஆயுதங்களாகக் கொண்டும், படையாகக்கொண்டும், ஆபரணங்களாகப்பூண்டும், கையிலெடுத்தும், மிதித்தும், அடக்கினேம். பின் அவர்களுக்கருள் செய்து காத்தோம். இதுவே முன்னடந்த காரியம்.

மோகினி வடிவாக நின்ற திருமால் இவ்விதமியற்றி முறுவலித்து நின்றதைக்கண்டு மகிழ்ச்சியடைந்தான். திருமாலே உனக்கு வேண்டுவது என்ன சொல்க என்றபொழுது அவன் தொழுது பரயபதி! நீர் எனக்குத்தனி நாயகன், தேவரீர்க்கு தமியேன் மனைவியாகும் இவ்வரங்கொடுத்தருள வேண்டுமென்று குறையிரந்தனன், அது உண்மையாதலால் அவ்வரத்தைக்கொடுத்துத் திருவருளாலே விவாகமுஞ்செய்வேம் என்று கூறினேம். எம்பக்கத்தெப்போதும் இருக்கும் தேவியாகிய நீயே அந்தத்திருமால் என்று சொல்லி கோங்கு வனத்திற் சென்று தவமியற்றுகவென விடுக்க உலகெலாம் பெற்றுங்கன்னிவடிவுடைய அம்மை கயிலைவிட்டு நீங்கிச்சென்று வாமை, சேட்டை முதலிய எட்டு வகைச்சத்திகளாகிய தோழியர்கள் குற்றேவல் செய்ய கன்னிகார வனத்திலே பூசை செய்தாள். பின்னர் சிவபெருமானால் அருளப்பட்ட வில்வ நீழலின்கண் அரியதவத்தைச்செய்தாள். உமாதேவியார் தருமத்தைச் செய்யுங்காலமாகிய திரேதாயுகத்தில் சிவபெருமானை வணக்கஞ் செய்து அருமையான வரங்கள் பெற்றுய்வை யடைந்தாள். துவாபர யுகத்தில் ஆதிசேடன் வணங்கித்தன் துன்பத்தை யொழித்தான். கலியுகத்தில் கௌசலராஜன் வழிபட்டு அர்ச்சித்து முத்தியடைந்தான். இப்படிப்பட்ட சிறப்புப்பொருந்திய வனத்தை நினைத்தாலும் பெயர் சொன்னாலும் முத்தி பெறுதல் சத்தியம்.

——(:o:)——

ஒன்பதாவது

அருச்சவனச் சருக்கம்.

வெண்பா.

வன்னியுநற் சேடனுமே வந்து பிறைமவுலி
இன்னினிய தாளேத்தி எற்றமுறும்—பன்னரிய
கன்னிகா ரப்பேர் கடிபொழிலைச் சிந்தித்தால்
பன்னலமு முண்டாம் பயன்

சூதர் புகன்ற அருமைச் சிவபுராணத்தைக் கேட்ட நைமிசாரண்ய முனிவர்கள் சூதமுனிவரை வணங்கி அக்கினியும், சேடனும், கன்னிகாரவனத்தில் எந்த விதத்தில் தவஞ்செய்து என்ன பிரயோஜனத்தைப் பெற்றார்கள் என்பதைத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று தாழ்ந்து கேட்க சூதமுனிவர் சொல்கின்றார்.

தக்கன், சிவபெருமானையும் உமையையும் நிந்தித்து ஏனைத் தேவர்களை அழைத்து மரியாதைசெய்து பெருவேள்வி செய்தகாலை அழையாதிருந்தும் தாதை யென் கருணையால் சென்ற காலத்தும் அவமரியாதை செய்ததையுணர்ந்த சிவபெருமான் சீற்றத்தினின்றும் தோன்றிய அகோர வீரபத்திரரால் அல்லுண்டழிந்த பல தேவருள்ளும் ஒருவராகிய அக்கினி தன் நாவும், கையும், இழந்து தன் பிழையையறிந்து அம்மை பாகத்தண்ணலார்க்குப் பிழையியற்றியவர் எவரேயானாலும் உய்யவும் பெறுவரோ? என்பதை முற்று முணர்ந்து திங்கட்சடையாரை அவர் சந்நிதியிற் சென்று,

அல்லார் குழலாள் அருமையுங் கூறாய் .
கல்லார்க் கருளும் கதிமா முடியாய்

புல்லேன் பிழையைப் பொறுப்பாய் புனிதா
கல்லார் பிழையைக் கருதா முதலே.

மின்னேர் சடையாய் விழைவே காப்பாய்
இன்னுரிதழி இறையே காப்பாய்
பொன்மா மலையிற் புனிதா காப்பாய்
என்மாபிழை நீ எடுத்தே காப்பாய்

சேய்தான் பிழைசெய் திடினே அத்தா
தாய்தான் முனியிற் றலைவா பின்னர்
ஆய்கோ வெனவே யழுமேல் அன்னை
பாய் பேரருளிற் ப்ரியாள் கொல்லோ

என்றின்னணம் துதித்து வணங்க எளியற்கிரங்கும் எம்மான் கருணை கூர்ந்து வராகமலையிற் சென்று அங்கு விளங்கும் கன்னிகாரவனம் சென்று பூசிப்பாயாகவென்றருள அவ்வாறே சென்று நாற்பத்தைந்து தினம் பூசித்து வல்வினையினின்றும் நீங்கி தென்றிசையுற்றார். அக்கினியாற் பூசிக்கப்பட்ட சிவலிங்கத்திற்கு வன்னிநாதன் எனப்பெயர் ஏற்பட்டது அத்தலமும் வன்னிபுரமெனப்பேரும் பெற்றது.

ஆதிசேடன் பூசித்த காரணமும் எய்திய பேறும் சொல்கின்றேன் கேளுங்கள் என்று சொல்கின்றார்.

நாரத முனிவரின் கலகத்தால் சினங்கொண்டு மேரு மலையின் கொடுமுடிகளை மறைத்த ஆதிசேடன் படங்களை வாயு பகை கொண்டு ஆற்றலை அழிக்க, அதனால் வெட்கமுற்று, பூமியில் நின்று நெடுநாள் பொறிகளையடக்கி, உணவை விட்டு, யோகநித்திரையில் இருக்கும் பொழுது, நாரதர் மகதி வீணையினின்றும் இசை எழுப்பி இறைவர் புகழை மனங்கரையும்படி பாடினார். நன்பன அறிவால், தெள்ளிதிற் கேட்டு, நாரதரை நேரில் போய் வணங்கி நிற்க, அவர்

சேடனை இந்த தவத்தைச் செய்வது எதற்காக என்று கேட்கச் சேடன் வாயுவை வெல்லவென்று சொல்லினன். அதற்கு நாரதர் நீ வராக மலையிலுள்ள கன்னிகார வனக்கரைக்குச்சென்று தவஞ்செய்தால் நீ விரும்பியது கைகூடுமென்றுரைக்க அவ்வண்ணமே சேடனும் சென்று பக்திவினயத்துடன் நாற்பத்தெட்டுகோள் தவஞ்செய்தபொழுது சிவபெருமான் இடபாரூடராய்க்காட்சி கொடுத்தருளி தவஞ்செய்யுங் கருத்தை வினவ அப்போழ்து சேடனும்

சங்கரா போற்றி வேதத் தலைவனே போற்றி போற்றி
பொங்கரா வேணிபோற்றி புலிபதனுடையாய்போற்றி
அங்கை மானேந்தி போற்றி அருட்பெருஞ்சுடரேபோற்றி
மங்கையோர் கூறுய்போற்றி பலைபெருவில்லாய்போற்றி.

அடியனேக்காப்பேய்போற்றி யழிவிலாச்சோதிபோற்றி
படிமிசையன்றுசந்து பரவைபாற்சென்றாய்போற்றி
கடி மதக்கொன்றைசூடுங் கருணைமாவெற்பேபோற்றி
பொடியணிமெய்யாபோற்றி புகழளித்தாள்வாய்போற்றி.

எனப்பலவாறு தன் ஈராயிரம் நாவாலுந் துதிக்க மனமிரங்கிய மழுவேந்திய மாதவன் சேடனுக்குக் காட்சி கொடுத்து யா வேண்டினை என்று கேட்க, சேடன் ஆபத்பாந்தவே! அநாதரக்ஷகா! அடியேன் எப்பொழுதும் நின்னடிக்குத் தொண்டு செய்யவும் வாயுவை வெல்லவும் அருள் செய்யவும் வேண்டுமென்று பணிந்து கேட்க ஐயன் நீ இன்றையத்தினமுதல் அருச்சனை செய்திருப்பாயாகில் இற்றைபதினமுதல் எமக்குப்பூணாகவும் எம்பொன் வில்லின் நாணாகவும் எம்பால் நீங்காதடையப்பெறுவாய் இன்னும் நினக்குப் பகையாகிய வாயுவையும் ஆகாரமாக உண்பாய் எனத்திருவாய் மலர்ந்தருளிச் சிவலிங்கத்தே திருவுருக்கரந்தருளினார். அது முதல் அம்மூர்த்திக்கு நாகாபரணனென்றும், அத்தானத்திற்கு புயங்கபுரமெனவும் வழங்கியது என்றுசொல்லி கௌசலசேரன் சிவபெருமானைப் பூசித்த மகத்துவத்தைச் சொல்லத்தொடங்கினர். நைமிசா

ரண்ய முனிகளும் அதியாவலுடன் செவிசாய்த்துக் கேட்பாராயி னார்.

——:(o):——

பத்தாவது

கௌசலசேரன்
அருச்சவினச் சருக்கம்.

வெண்பா.

நற்கௌ கூலசேரன் நாயகனைக் கண்டப்பால்
விற்புருவ வெற்பரையன் மின்னணங்கை—பொற்புதிகழ்
ஔவையெனக் கண்ட வணிதலத்தைப் பழ்மனமே
கௌவையறக்கற்பாய் களித்து.

திருமகளும், சரசுவதியும், தனலட்சுமியும், தைரியலட்சுமியும், தருமலட்சுமியும், எந்நாளும் குடிகொண்டு விளங்கப்பெற்றதும் உலகங்கள் எல்லாவற்றிற்கும் ஓராபரணம்போல் விளங்குவதாய் எந்நாட்டினும் தன்புகழாகிய ஒலிசெல்லப்பெற்றதுமான அத்திரகிரி என்னும் ஒரு பழைய ஊரொன்றுளது. அதற்கு அங்குசத்தசன் என்பவன் அரசனாயிருந்தான். கல்வி, ஆண்மை, குணம், ஒழுக்கம் முதலியவற்றால் எவரும் புகழுந்தன்மையுடையவன், கற்றவர்க்கருளுந் தண்ணளியன், ஆண்சிங்கம்போன்ற திண்ணியன், ஏழைகளுக்குயிரிறைவன் போர்க்கஞ்சாப்புயதீரன், குளிர்மதி முகத்தன், சிவபெருமான் மலர்ப்பதம் மறவாது எப்பொழுதுந் துதிக்குஞ்சிலன். இவனுக்கு அருந்தவப்பயனால் ஒருபுத்திரன் பிறந்தான். அவன் பிறையென நாளுளும் வளர்ந்து வாலிபப்பருவம் அடைந்தான்.

மன்மதனை ஒத்த அழகன், கல்வி கேள்விகளிலும் வீரதீரச் செயல்களிலும் தெய்வபக்தி தான தருமங்களிலும் தந்தையினும் பல்லாயிரமடங்கு சிறப்புடையவன், என்று உலகமெலாம் புகழப்பட்டவன், அவன் பெயர் கௌசலன் இவன் சிவபெருமானிடத்தில் இடையறா அன்பும் தொண்டும் பூண்டு உயிர்களினிடர் தீர்த்தருள்காட்டுந் தன்மையுடையவனாய் இருந்ததனால் தந்தையும் தாயும் மந்திரியும் மற்றவருங்கண்டு அவனிடத்து அதிகப்பிரியமும் மதிப்பும் பக்தியும்வைத்து வந்தனர். உலகம் பெரிதும் அவனையே விரும்பிற்று தகப்பன தன் அரசாக்ஷியை அவனுக்களித்து வதுவையும் (கல்யாணமும்) முடித்து வைத்தான்.

தமது அருமைத்தவப்புதல்வன் நீதி கோடாது (கோணாது) செங்கோல் செலுத்துதலைக்கண்டு மனமகிழ்ந்து தாதை தவத்தைத நோக்கி வனம்புக்கான் (புகுந்தான்) கௌசலன் மன்னுயிர்களெல்லாந் தன்னுயிர் போற்காத்துக்குடிகளுக்கு எந்தவித பயமுமகற்றி அறம்பிறழாது அரசு செய்துவந்தான். இவ்விதமாக அரசு செய்து கொண்டுவரும் நாட்களில் சிவபெருமான் எழுந்தருளியிருக்குந்திவ்விய தலங்கள் பலவும் தரிசிக்கவேண்டுமென்னுங் கரைகடந்த ஆர்வத்தால் கன்னியாகுமரி, சேதுமுதல் இமையமலை முடியவுள்ள தலங்களைப்போய்த்தரிசிக்கவேண்டுமென நிட்சயித்து தனது அரசபாரத்தை மந்திரிகள் வகிக்குமாறு உத்தரவுசெய்து பெருஞ்சேனையுடனும் அரசர்களுடனும் உடனே தலயாத்திரைக்குப் புறப்பட்டு காசி, காளத்திரி திருக்கேதாரம், திருவண்ணாமலை, விருத்தாசலம், கனகசபை, திரு ஆலவாய், குமரி, சேரநாட்டினுள் ஏழு பெருந்தலங்கள் முதலியவைகளில் சிலநாள் வசித்தும், மலர்கொண்டு அர்ச்சித்தும், எனைத்தலங்களைத்தரிசித்து வணங்கியும் கொங்கு தேயத்தின்கணுள்ள ஒருமலைப்பக்கம் சென்றனன். அவ்விடத்தே பலகொடிய துஷ்ட மிருகங்களாகிய புலி, சிங்கம், கரடி, யானை, பன்றிமுதலிய இருப்பதையுணர்ந்து அதன் ஆரவார முழக்கத்தையுங்கேட்டு அவற்றை வேட்டையாட விரும்பி, வேட்டுவர்களையழைத்து, வேட்

டைக்குச்சென்றான். அவ்வேடர்கள் கருத்த மேனியர், வெடித்த குரலர், தடித்த மேனியர், கடுகடுத்த சினத்தர், கனற்பொறி பறக்கும் கண்ணினர், யமனினுங்கொடியவர், கச்சினையுடையவர், வீரக்கழல் பூண்டவர், வாகைமாலையையுடையவர், ஆயுதப் பயிற்சியில் இணையற்றவர். குறிஞ்சிநிலக்கடவுளாகிய கந்தன் பதங்களிலேயே சிந்தனையை வைக்கும் பெருமையர். அரசனை வணங்கிக் குறிஞ்சிப்பறை முழக்கி, வார்பூட்டி, வலைகட்டி, மிருகங்களைக் கலைத்துத் துரத்தி தொகை தொகையாகப்புலிகளையும் சிங்கங்களையும், யானைகளையும், பன்றிகளையும் மற்றும் கொடியவிலங்குகளையும் கொன்று குவித்தனர். இவர்கள் இவ்வாறு வேட்டையாடிக்கொண்டிருக்கையில் முற்றவப்பயனாலோ சிவபெருமானின் அருளாலோ ? விந்தையான ஓர் பொன்னிறமான் அரசன் சேனைமுன் தோன்ற, அதனைப் பிடிக்கத்தொடர்ந்தும் அது அவர்கள் கைக்கு அகப்படாமல் போகவே சேனைகள் திரும்பி வந்தரசனிடம் இவ்வாச்சரியத்தைச் சொல்ல அரசன் அதனைத் தேடிச்சென்று கண்டு அதனைத்தொடர்ந்தான். காற்றினும், மனத்தினுங்கடிய வேகத்தையுடைய மான் வராகமலையின்கணுள்ள கன்னிகாரவனத்தில் அரசனையும், சேனைகளையும் விடுத்து, சிவபெருமானின் தரிசனத்தால் அரசனுக்கு இருவினைகளும், மாயையும் மறையப்போவதற்கறிகுறி காட்டுவதுபோல மறைந்தது. பின்னர் அரசன் மானைக்காணாது வருந்தி அருகிலுள்ள சோலையிற்புகுந்தான். ஏனைய அரசரும் சேனைகளும், வேடர்களுங்கூடிவந்து தங்கினர். பணியாட்களை (வேலையாட்களை) நோக்கி நீர், நீர்நிலையிற்சென்று அருந்துபுனல் கொணர்கவெனக் கட்டளையிட அவர்கள் அவ்வாறே சென்று நீர் கொண்டுவரப் பொழுதும் போய்விட்டது. மாலைப்போதுற்றது. சந்திரனும் உதயமானான். உடனே அரசன் தேவிபங்கரைத்தரிசியாமல் யாம் எதுவும் உண்ணேம், அருந்தேம், ஆதலால் கொண்டுவந்த நீரை என் சொல தவறாது நீரே அருந்துமென்றானவரும் அவ்வாறே செய்தனர். பொழுது விடிதற்குமுன் ஐந்து நாழிகைக்கு முன்னரே அரசன் எழுந்து

நித்திய கடன்களை முடித்துக்கொண்டு பொழுதுவிடிந்ததும் இவ்விடத்தில் ஏதேனும் பெருமானார் கோவில் இருக்கிறதாவென்று பார்த்து வாருங்களென்று தம்மாட்களை அனுப்பினான் தன் மனத்தே அவ்வனத்தை விட்டு நீங்காதபடி மனந்தடைபட்டு ஒருவித ஏக்கம் மனத்திற்றோன்றுவதை நோக்கி அரசனும் பயனை அறிய முடியாதவனாய் இருந்தான். கோயில் தேடிச்சென்றோர் கோயில் காணமுடியாராய்த் திரும்பி வந்தனர். சிவபெருமான் தரிசனங்கிடைக்கப்பெறாமையால், அரசனும் நீர் தானும் அருந்தாதிருந்துவிட்டான். அதுகண்டு சகியாதவன் போற் சூரியனும் குடகடல் போய் விழுந்தான். தங்குலத்தரசன் சந்திரமவுலியைத் தேடிக்காணாது தயங்குதல் கண்டு, அன்பு கொண்டு, தேற்றவருபவன்போல் குளிர்நிலவோடு சந்திரனும் வந்து குணபால் எழுந்தான். அன்றிரவு அரசனும் ஈதெல்லாம் எம்மிறைவர் அருள்விளையாட்டென்று எண்ணி, அவரையே துதித்துக்கொண்டிருந்தான். பொழுதும் விடிந்தது மூன்றாம்நாள் காலை அருந்தவ அதிசய வேதியன் ஒருவன் நறுமணங்கமழும் மணிமலர் எடுப்பது கண்டு அவனை வணங்கித்தன்னூர் பெயர் முதலியவைகளையும் தான் வந்த காரணத்தையும் முறையே சொல்லி கோயிலிருக்குமிடம் சொல்லியருள வேண்டுமென்று அதி வேட்கையோடு (பிரியத்தோடு) கேட்க, வேதங்களில் வல்ல பிராமணன் தன் மனத்தில் ஆராய்ந்து திருப்பணி செய்வதற்காகத் தேவாதிபரான சிவபெருமானது திருவருளில் வந்த அரசனாகும் என்று தம்மனத்துள் நினைத்து ஞான பூமி என்று சொல்லப்படும் கன்னிகாரவனத்தில் அரியயனறியாப்பரப்பிரமமாகிய சிவம் இலிங்க வடிவாய் வளர்ந்து நிற்கின்ற மகிமையைச் சொல்லித் தீர்த்த விசேட முதலிய மற்றைய அதன் மகத்துவங்களையுங்கூறி அங்குச் சென்று தரிசிக்குமாறு விடுத்தார். அவ்விதமே அரசன் தீர்த்தமாடி எம்பெருமானை உள்ள உணர்வுடன் தரிசித்து ஞானானந்தவின்பம்பெற்று, நானென்னும் அகங்காரம் அற்று, ஆநந்தக்கண்ணீர் சோர பிறைசூடிய பித்தரைத் துதித்துப் போற்றி நின்றான். அப்போழ்து தற்போதம் நீங்கி நின்ற அரசன் முன் சிவபெருமான்

இடபாரூடராய் எழுந்தருளிக் காட்சி கொடுத்தார். அப்பொழுது,

காலனையுதைத்த காலா! காமனை எரித்த கண்ணா!
பாலனையுண்ட சித்தா! பாவியேற்கருளும் அத்தா!
வேலனைத்தந்த அப்பா! வெள்விடைதனிலூர் தேவே!
சிலநின் கழல்கள் தந்தே! சேயெனைப் புரப்பாய் நீயே!

என்றிவ்வாறு பலவிதந்துதித்து, அடைதற்கரிய பலவரங்கள் பெற்றான். நல்லோருள்ளத்தே நவமணி விளக்காய் நிற்கும் பெருமான் கௌசலனுக்கு வேண்டும் வரங்களீந்து சிவலிங்கத்துள் மறைந்தருளினார். பின்னர் உலகமாதாவாகிய இறைவர் பாகத்துறையும் இளம்பிடியாகிய மலையரசன் பெற்ற தாயை தரிசிக்கவேண்டி வேதியரை வணங்கி என்னை உய்வித்த குலகுருவே! என் தவப்பயனே! மலைவில்லியின் வாமபாகங்கொண்ட மரகதக்கொடிபோலும் எமதம்மை வீற்றிருக்கும் தானத்தை யடியேற்குக் காட்டியருளவேண்டுமென்று வேண்ட வேதியர் சொல்கின்றார். நல்வினையையுடைய புண்ணிய அரசே! முனிவர்க்குத் தலைவராகிய துருவாசர் காமதேனு குற்றேவல் செய்யச் சிவபெருமானை வழிபாடு செய்து கொண்டு வரும் நாளில் ஒரு நாள் பூஜா காலத்தில் வரும் காமதேனு ஒரு நாழிகை தாமதித்து வந்ததென்று துருவாச முனிவர் கோபித்து நீ சிவபூசைக்கு இடையூற்றைச் செய்தபடியால் நீ கொடியை; ஆதலால் நீ என் முன் வராதே என்று கூற, காமதேனு துருவாசர் பதங்களில் விழுந்து அடியேன் பிழையைப் பொறுத்தருளவேண்டுமென்றும், இப்பாவந்தொலைய ஒவ்விய வழியொன்று புகலவேண்டுமென்றும், இரந்து கேட்கத் துருவாசர் சிறிது சினமாறி, வராகமலையில்கன்னிகாரவனத்தையடைந்து பூசிப்பாயாகவென, காமதேனு அவ்வாறே சென்று கிழக்குத் திசையில், தடாகம் உண்டாக்கி நீராடி தவத்தைச் செய்தது. சிவபெருமான் காட்சிகொடுத்தருளி சுவர்க்கம் புகுவித்தார். அத்தடாகம், தேனு தீர்த்தமென்று சொல்லப்படும். அத்தேனு தீர்த்தத்திற்குத் தெற்குக் கரையில் வில்வ

வனத்தில் உலகத்தைத் தாங்கும் பார்வதி தேவியார் அருந்தவஞ் செய்தனர். ஆதலால் அவ்விடத்தைத் திருக்காமக்கோட்டம் என்னும் பெயரால் வேதங்கள் துதிக்கும், இது இரகசியம் எவர்களும் அடைதற்கரியது என்று சொல்ல அரசன் தூய வேதியரை வணங்கி அப்படிப்பட்ட தலத்தில் உமை அம்மையாரை வணங்கி நான் உய்ய வகையருள வேண்டுமென்று பணிந்து கேட்க முனிவர் சொல்கின்றார்.

பொருந்திய மகா கோஷமே சக்தி காமம், சக்கரம் புவனையாகும், ஆகாயம் சக்தியாகும், கொள்ளப்பட்ட காமம் சகளமாகும், புவனைசக்திகோடம், மாதங்கோடம், புவனைசுவரிசக்கரம் கந்தக் கடவுள் சொல்லும்படி விளங்காநின்ற வித்தியாமந்திரமாகும். இவற்றைச் சுத்தமாகிய தேனுதீர்த்தத்தின் கரையினிடத்திருந்து செபிக்கில் உன்னிடத்தில் உமையம்மை நாற்பது நாளைக்குள்தோன்றி நீ நினைத்தவரத்தைக் கொடுப்பர் என்றார். ஆதி சைவ வேதியர் சொல்லியபடியே அவ்விடஞ்சென்று அவ்வாறு செய்ய உலகமாதாவாகிய உமை அம்மையார் கிழப்பிராமணப்பெண் வடிவங்கொண்டு தண்டூன்றிக்கொண்டு அரசன் முன்வந்து யாரைநோக்கி இத்தவஞ் செய்கிறாய் என்று கேட்டனர். உலகமெலாம்பெற்ற பரமேஸ்வரியை நினைத்துச்செய்கின்றேன் என்று அரசன் சொன்னான். அதற்கு அம்மையார் ஓ அரசனே! உன் வருகையும் தவமும் நன்றாயிருக்கிறது. நீ யாரை நோக்கி தவஞ்செய்கின்றாயோ அந்த அம்மை தனது நாயகனைச் சேரும்படித் தவஞ்செய்கின்றாள். உன்னிடம் இன்று வெளிவருவதற்கு அரியள். அன்புடையாய்! இனிமேல் திருமணக்கோலத்தைக் காண்பாயாக வென்று சொல்லி மறைந்தனள். அரசன் அன்னையே எழுந்தருளினர் என்று ஆநந்த பரவசமும் தன்னையறியும் அறிவும் பெற்று கண்களினின்றும் நீர் சொரிய என்னையும் அடிமைக்கொண்டனள் நாமேற்கும் இனி ஆசனமும் இதுவென்னறு முற்பட்ட திருமணக்கோலத்தைத் தரிசிக்க இச்சிப்பேனென்று அரசன் தவத்தைச்செய்தான். சிலநாட்செல்லுங்

காலத்தில் மகதி வீணையையுடைய நாரதர் முதலாய முனிவர்கள் கோங்குவனத்தை யடைந்து சிவபெருமானது திருப்பாதங்களை பழய பிறவிகள் நீங்க வணங்கினர். அவருட்சிலர் காயும் மலரும் கொய்யும்படியாக வில்வவனத்தினுள்ளே தேனுதீர்த்தத்தின் கனியை அடைந்தனர். மலர்கொய்யும் முனிவர்கள் கன்னியர் பலர் இருக்கும் இடங்களையும் வேலாயுதத்தைத் தாங்கிய கந்தக்கடவுள் தவத்தைச்செய்வதையும்பார்த்து அதிசயவிம்மிதராய்த்தென்றிசையும் பார்த்தனர். அங்கே அமிர்தமாகிய குளிர்ந்த அழகிய நிலாக்கூட்டம் ஒருங்கு சேர்ந்தாற்போல மிக்க ஒளிவிளங்கும் அழகைக் கண்டு பயந்தனர். செவந்த அழகிய ஒளியைச்செய்கின்ற செங்கதிர்க்கடவுளர் கோடியின் மிகுந்த ஒளியைக்கொண்டு வெள்ளிய பிடரிரோமத்தையுடைய சிங்கத்தின் முதுகில் ஒப்பற்ற உபரிடத ஆசனத்தில் இணையற்றொளிரும் ஞானதீபமாகிய பிரணவத்தின் ஒளி விளங்குகின்ற விமானத்தில் அருளே உருவமாகக்கொண்ட கன்னிப்பருவத்தையுடைய உமாதேவியார் தோன்றுவதைக் கண்டார்கள். தவஞ்செய்திருந்தவர்கள் உலகமாதா வந்தாளென்று பயமுற்றுத் தூரத்தில் நின்று யாம் உய்ந்தோம், உய்ந்தோமென்று வணங்கி, மகிழ்ச்சி கொண்டவராய்த் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள்பாற் சென்று மனங்குளிர விருப்பித் துதித்துப் புகன்றனர். சிவபெருமான் திருமணக்கோலத்தை இவருடைய மனதிற் பதிப்போமென்று அங்கு நின்றார்க்கு அறிவித்தனர். தேவர்களாற்றுதிக்கப்படும் பெரியாவுடைய நாயகரென்னும் திருநாமத்தையுடைய சிவபெருமான் மனமகிழ்ந்து திருமணக்கோலம் இந்நாளிற் காட்டுவோமென்று திருவாய் மலர்ந்த தன்மை கண்டு, அந்நாளைப் பேராசையோடு எதிர்நோக்கி அங்கிருந்து தவஞ்செய்து கொண்டிருந்தார்கள், என்று சூத முனிவர் கூறி சிவபெருமான் திருமணஞ்செய்த திரு அருள் விளையாட்டையுஞ் சொல்கின்றேனென்று சொல்கின்றார்.

அணுமுதலா அண்டங்கள் அவற்றிலுறு சராசரங்கள்
எணுமரியே முதலான விமையோரும் உதித்திருந்து
அணுமுறையுந் தவறாது அவர்தொழில்செய் தடங்குதலும்
பணுமுறைசேர் பரைபரமன் பாதியுறை பயன்ன்றே.

மணிவயிற்றில் உலகமெலாம் வைத்தீன்றுந் தளராத
திணிகொண்ட முலையுமையாள் சிவசத்தி மணிநாக
அணிகொண்ட பரசிவத்தை ஆட்டுவித்து தொழில்நடத்தும்
தணிவிலருஞ் செயலறியுந் தரம்பெறுவா ராரம்மா.

——(:o:)——

பதினொன்றாவது

திருமணச்சருக்கம்.

வெண்பா.

பொய்யுலகை மெய்யென்று புத்தியிலா தேயலைந்து
வெய்யவினைக் கேயலையும் வெள்ளநீயே—செய்யமணக்
கோலங் கௌசலற்குக் காட்டுகல்லனி காரவண
பாலன் வரையை நிதம் பாடு.

விண்முதலாக மண்ணீறாகவுள்ள பெரும் பூதங்களையும், பௌதிகங்களையும் பெற்றருளிய பராசத்தியாகிய உமாதேவியார்க்கும், விஷ்ணு பிரமர் முதலாயினோர் பிறக்க, ஆதிமத்தியாந்தரகிதரான சிவபெருமானுக்குந் திருமணம் நடக்குமென்று மணமுரசானது திரிலோகத்திலும் எழுந்து அதிர்ந்து குமுறினது.

மான் மழுதாங்கிய மதிநதி யணிந்த வேணிப்பெம்மான் மேவிய கூவிள வனத்திலே விண்ணுலகரும் மற்றையரும் வந்தார்கள்.

என் அப்பனை அம்பலத்தே ஆட்டுவித்து ஐந்தொழில்கள் நடைபெறும்படிச்செய்த எனதன்னையாகிய உமையம்மையார் வசிக்கப்பெற்ற கன்னிகாரவனத்தின் கண்ணே தேவதாஸ்திரீகள் முதலிய பெண்களும் வந்து கூடினார்கள் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் வனங் கைலைபோலவும் எமதன்னை மேவிய வனம் இமயமலைபோலவும் விளங்கியது. இந்திரன் தன் பொன்னுலகோவென்றும், குபேரன் தன் அளகாபுரியோவெனச் சந்தேகமுறும்படிக்கும் இமையாக்கண் உடைய தேவர்கள் கண்டு முடியாத பேரழகுறும்படிக்கும், தேவதச்சனாகிய விச்சுவகர்மாவினாலும் விட்டுணு பிரமர்களாலும், அலங்கரிக்கப்பட்டதென்றால் ஈராயிரம் நாவுடைய சேடனும் புகழை வர்ணிக்கப்பின்னிடுவானென்றால், அதன்பெருமை என்னாற்சொல்லுந்தர முடையதாகுமோ. பஞ்சதருக்களைந்தும், பந்தலாய், புட்பக்கொத்துகளால் நிழலைச்செய்தது. வாயு இளமையாகிய தன் மந்தமாருதத்தை வீசி இன்புறுத்தினன். வருணன் குளிர்ந்த தன் மழைத்துளிகளால் இன்பமுற பனிநீர் தெளிப்பதுபோலத்தெளித்து மகிழ்ச்சியுண்டாக்கினன். அக்கினி மிருதுவான தாளிதப்புகைகளை நறுமணங்கமழ எங்கும் பரவச்செய்து ஆகாயவெளி விளங்க சுவாலையை விட்டு ஓங்கி நின்றான். ஆதிசேடன் முதலிய தேவநாகங்கள் எம்பெருமான் மணவறையில் மணிவிளக்கேந்தியமுதகலசந்தாங்கி நின்றனன். காமதேனுவின் கூட்டங்கள் சொற்பணி கேட்டு நடந்தன. சங்கநிதி பதுமநிதி இருபுடையும் விளக்கமுற்றிருந்தன. உப்புக்கடலும், சுராக்கடலும் ஆகிய இரண்டும் நீங்க மற்றை ஐந்து கடல்களும் அவ்விடத்தே வந்திருந்தன. மேலுலகங் கீழுலக மென்னு மிவற்றில் வசிப்பவர் வந்து நெருங்கினார்கள். சிவபெருமான் உமாதேவியாரைத் திருமணஞ்செய்ய உள்ளத்தார்வங் கொண்டவராய்ச் சோதிலிங்கத்தினின்றுஞ் சடை முதலிய உறுப்புகள் விளங்கத்தோன்றி உன்னதமான ஆசனத்தில் வீற்றிருந்தார். அவர் வீற்றிருந்த திருக்கருத்துணர்ந்த குபேரன் கோடிசூரியப்பிரகாசமும், இயற்கையே அழகுவடிவாயிருப்பவரும், எவற்றிற்கும் அழகு செய்பவராயும் அழகிற்கே அழகாயிருப்ப

வருமாகிய அவர்க்கு அருந்திருப்பெருமை வாய்ந்த மணமங்கல ஆபரணங்கள் பூட்டிக்கல்யாணக்கோல நலந்திகழ்ச்செய்தான். திருமணக்கோலம் பூண்ட பெம்மான், தருமமே வடிவெடுத்த இடபமிதூ குறுந்தாட் பூதங்கள் குடைபிடிக்கத்தங்கணங்களும், தேவர்களும், புடைசூழத்துந்துமி முதலிய தேவமங்கள வாத்தியங்கள் முழங்க பிடியைத்தேடி வருங்களிறே போலவும், பசுவைத் தேடிவருங்காளை போலவும், பள்ளத்தை நாடிவரும் பெரும்வெள்ளம் போலவும், காதல்கரைக்கடப்பப்பேரன்பு கொண்டு கூவி இளவனத்தை விட்டுப் பரமசத்தியாகிய உமாதேவியார் மேவியிருக்கும் கன்னிகாரவனத்தைச்சார்ந்து தேவமாதர்கள் பூவுஞ் சுண்ணமூந்தூவ மடங்கலாசனத்தேறி வீற்றிருந்தார்.

நாரதர் முதலியர் மகதியாழ்பாடினர், தேவமாதராடினர், சங்குமுதலிய மங்கல வாச்சிய முழங்கின. திருமால் கீழேயிருந்து ஏவல் செய்வோரை ஏவி எம்பெருமானுர்க்குத் திருமணத்திற்கு வேண்டியன சித்தஞ்செய்யும்படி செலுத்தி நின்றனன். பல பல அண்டமும் பெற்ற கன்னியாகிய ஈறிலா அன்னையாகிய உமாதேவியாரை மலர்தூவி சோபனங் கூறுமங்கல வபிடேபிகஞ் செய்வித்து அணிவனவற்றையணிந்தனர். சூட்டுவனவற்றைச் சூட்டினர். பூசுவனவற்றைப்பூசினர். உடுப்பனவற்றை உடுத்தனர். அழகிற்கெல்லாம் தாரகமாகயிருக்கும் வடிவுடை அம்மையார்க்கு அழகுசெய்பவர்போல் அழகை மறைத்தனர். இதுவும் இறைவர் கண்திருட்டி படாதிருப்பதற் கென்று போலும்,

திரிபுரத்தை மாரனுயர் உடலதனைத்
    தடாதகையார் திகழும் பொம்மென்
அரியதிருமுலை யொன்றைத் தமிழ்க்கிரன்
    மெய்யழகை யழித்த பொல்லா
எரிமருவுகித் திட்டிபுடையபிரான்
    கணவனென வெணியோ அந்த

வரிதிகழுங் கயற்கணுமை வடிவனைத்தும்
மணியணியால் மறைத்தாரம்மா.

இந்த விதமாக அழகு செய்த தேவப்பெண்களும் மற்றை மாதருஞ் சூழவரப் பல்லாயிரங்கோடிச்சங்கின் கூட்டத்தில் ஒருவலம்புரிச்சங்கு போலவும், பல்லாயிரந்தாரகா கணத்தில் ஒரு சந்திரன் போலவும் விளங்கித் திருமகளுஞ் சரசுவதியும் இருபுடையுந்தோழிகளாக நடந்து வரச்சென்று ஐயன் சமீபத்திற் சென்று வீற்றிருந்தாள். வேதன் திருக்கல்யாணச் சடங்குகள் செய்யவும் திருமால் தாரைவார்த்துக் கொடுக்கவும் வேத கீதங்கள் மணமுரசு முதலியன ஒலிக்கவும் தேவர் பூமாரி பெய்யவும் சிவபெருமானுர் திருமணஞ்செய்து கொண்டார். நெடுநாளாகத் தவஞ்செய்து திருமணக்கோலங்காண விரும்பிய தேவர் முனிவர் முதலியவர்களுக்கும் அன்பு வாய்ந்த கௌசல சேரனுக்குங் காட்சி கொடுத்தருளினர்.

——(:o:)——

பன்னிரண்டாவது

நகர் செய் சருக்கம்.

வெண்பா.

எப்பிணியும் போமே இருநிதியஞ் சாருமே
ஒப்புயர்வில் உத்தமனுர் உத்தரவால்—செப்பரிய
சீரார் கௌசலநற் சேரன்செய் நன்னகரை
நேராகப் போய்த்தொழுதால் நேர்.

அகிலமனைத்தும் ஈன்றுகாத்து அளித்தருளும் அங்கயற்கண் அம்மையாரைத் திருக்கல்யாணங்கொண்டருளிய திருமணப்பெரு

மான் திருமால் முதலிய தேவர்களுக்கு வேண்டும் வரங்களைத் தந்தருளி உலகங்காக்குங்காவலனுகிய கௌசலசேரன் அன்பிற்கமலர்ந்து அப்ப! நமக்கு மிக அன்புடையாய் நின் விருப்பம் யாது தெரிவிப்பாயாக என, அரசன்

மாதுபாதி கொண்ட எந்தை
மற்றும் பற்று சற்றிலேன்
கோது நீக்கி என்னை யாளுங்
கூத்த! நின்னை யன்றியான்
ஓது தெய்வம் உள்ள தென்ன
உள்ளல் செய்ய கில்லனுல்
தீது நீக்க நிற்கொர் கோயில்
செய்ய வெற்க ருள்வையே!

எனத்துதித்து தேவரீர் திருமணஞ்செய்து கொண்ட இத்தலத்தை யோர் திவ்ய நகரமாக்குதற்கு அடியேற்குத்தரவு அருள வேண்டுமென்ன அப்படியே செய்வவெனப்புகன்று மேலும் அநேக அருமைத்தவங்களிந்தார். உடனே வல்லாளு யொரு தூதுவனைத் தன்னகருக்கனுப்பி மந்திரி சைனியம் முதலியவர்களை அழைப்பித்துத் திரள் திரளாகப் பொன்னினைப் பொன்மலை போற்குவித்து வல்ல சிற்பிகளைக்கொண்டு சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கன்னிகார வனத்தையும் நீண்ட இருபது குரோச தூரத்திற்குச்செம்மைப்படுத்தி சுவர்க்கம் போலச்செய்வித்தான்.

அவ் அருமைத்திருநகரத்தில் ஆதிசைவப் பிராமணர்கள் வசிக்க நல்ல நூறுகிராமங்களுள் யாகங்கள் செய்யவும் அத்தியயனஞ் செய்வதற்காகவும் பன்னிரண்டு ஊரும் செய்வித்தான்.

எட்டு மங்கலங்களையும் பொன்னுட்டிற்கு மேலாகச் செய்து தாயித்துத் திருவடிகளை வணங்கிவந்தான், கோங்குவனத்தின் கீழ்த்திசையில் ஒருபக்கத்தில் ஒருவனப்பு (அழகு) வாய்ந்த (பொருந்

திய) மலையொன்றுண்டு. பனைமாலைக் கௌசலசேரன் அருச்சித்து வணங்கினமையால் கோதைமங்கலமென்று சொல்லுவர். வராகமலைக்கு வடக்கே சாமந்தியென்னுஞ் சிறந்த தீர்த்தக்கரையின் கண் வெவ்விய அக்கினி தேவனால் பூசிக்கப்பட்ட லிங்க மொன்றுண்டதற்கு ஆக்கினேய லிங்கமென்று பெயர் கூறுவர். இவ்விடத்தே வேதியர்கள் கூட்டங்கூடி வேதங்களை அத்தியயனஞ் செய்கின்ற சிறப்பால் சதுர்வேதமங்கலமெனறு பெயர் கூறுவர். பொருனை நதிக்கு மேற்குப் பக்கத்தில் இருக்கும் சிவலிங்கமானது சூரியர்கள் வந்து பூசிக்கப்பட்டமையால் அவ்வியத்த சோதிலிங்கம் என்னும் பெயரினால் விளங்குப இத்தானம் இரவிமங்கலமெனப் பெயர் வழங்கப்பெறும். உமாபிராட்டி எழுந்தருளியிருக்கின்ற கூவிளவனத்திற்கு மேற்குத்திசையில், வாசனை வீசுகின்ற பால்நதி தீர்த்தத்தின் கரையில் அழகிய அமுதலிங்கம் இருப்பதால் அத்தானத்தை அமுதலிங்கமெனப்பெரியோர் கூறுகின்றார்கள். இப்புண்ணியதலத்தில் எட்டுமங்கல வூர்கள் நிற்றலின் அட்டமங்கலக்ஷேத்திரமென்று கூறப்படுகின்றது. சிவபெருமான் ஆஞ்ஞையால் கௌசல சேரன் செய்தலால் கௌசலமாபுரம் என்றும் காசியை நிகர்த்ததென்றும் பெரியோர்கள் கூறுகின்றார்கள். நாராயண மலையும் பிரமமலையும் சிவமலையும் சத்திமலையும் வராககிரியும் தக்கண கயிலாயமும், சத்தி தீர்த்தமும், சண்முகநதியும் சூழ்ந்திருக்குந்தன்மையால் கௌசலபுரமென்பது சிவபுரமென்பது சத்தியமாகும். இந்நகரத்தில் இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பட்ட கனகமாளிகைகள் எங்கும் விளங்கும் வயிரமணி மாட கூடங்கள் சிறந்து தோன்றும் அழகிய மதில்சள் சூழ்ந்து தோன்றும் அம்மையப்பருக்குத் திருவிழாக்கள் நாளும் முப்போதும் அதி வைபவத்துடன் நடக்கும். இவ்வாறு ஒழுங்குபெற நடக்க நிறுவித்தன்மைந்தர்கள்பால் புவிச்சுமையைக் கொடுத்துக் கௌசல சேரன் அரன்பாதமடைந்து ஆராவின்ப அருவிபடிந்தின்புற்றான், என்று சூதமகாமுனிவர் பின்னுஞ் சொல்லுகின்றார். கேளும் நைமிசாரண்ய வாசிகளாகிய முனிவசிரேட்டர்

களே! வில்வவனம் பெரிய சிவமலை என்பவற்றிற்கு நடுவே எமதுகடவுளாகிய ஆறுமுகப்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருவாவினன்குடியென்று ஒருதலமுளது, அது அதனிடத்து வசித்தவர்களையும் தன் பெயர் கேட்டவர்களையும் அழிவிலா முத்தியின்பத்தில் அமைக்கவல்லது. அதன் அரிய பெரிய இரகசியங்களை எவருமுணர்தலரிது, உணர்ந்தாலுஞ் சொல்லுதல் மிக அருமை அருமை, ஆயினும் யெனக்குத்தெரிந்ததிற்சிறிது சொல்கின்றேனென்று, சூதமுனிவர் சொல்லுகின்றார்.

—:(o):—

பதின்மூன்றுவது

திருவாவினன்குடிச்சருக்கம்.

வெண்பா.

ஒருவாத ஞான வுயர்பொருளாய் மேவுந்
திருவாவி னன்குடிவாழ் செய்ய—முருகன்
திருக்கழலைச் சிந்தித்தே தீமையெலாந் தேய்த்தே
இருக்கலா நல்லசுகத் தே.

சூராமாலையை உடையவனும் எவர்களுக்குந் தெரிவரிய ஞானத்தெளிவையுடையவனும், தன்னாலே சொல்லப்பட்ட வேதங்களையுடையவனும், தெய்வயானையைத் தனக்குத்தாரமாக வுடையவனும் சத்தியளித்த வேலைத்தாங்கியவனும், ஆறு திருமுகங்களை யுடையவனும், சவாமிக்கே ஆசிரியனாய் இருந்தவனும், திருப்பரங்குன்றில் அமர்வெனும் அசுரர் கடல்சுவறவேல் விட்டவனும், கங்கைச்சரவணையில் உற்பவித்தவனும், கார்த்திகைப்பெண்கள் பாலுண்டவனும், கந்

தனெனும் பேருடையோனும், அன்பர் மனக்குகையிலே வாழ்பவனும் என்றும் மாறாத இளமையையுடையவனுமாகிய வெம்பெருமான், குகன், முருகன், சுப்பிரமண்யன் முதலாய்த் திருநாமங்களையுடைய ஐயன் மயில்வாகனன், கோழிக்கொடியோன், அரிபிரமாதி தேவர்கள் துதிக்க வீற்றிருக்கும் பெற்ற பெருமை வாய்ந்ததும், கண்டாலும், நினைத்தாலும், ஒருமுறை உச்சரித்தாலும், ஏழேழு தலைமுறைக்கும் அவர் குலத்தார்களுக்குந் தொன்மை தொட்டே தொடர்ந்து வந்துள பாவங்களை நீக்கிப்புனிதாராக்கிச் சிவபெருமானின் திருவடியில் இன்பு ஆர அமைப்பிக்குந்திருவுடையது. திருவாவினன்குடி பரம்பொருளாகிய சிவமே குமாரவடிவங் கொண்டுளராதலினால் பிரமனைக்குட்டிச் சிறையிலிட்ட பெரியனை, வள்ளிதன் ஆசைமணாளனை சிந்தித்து வழிபடுபவரே சுத்தராய்த்தேவராகவும் அதற்கும் மேலான பதவியை எய்துபவராகவும் பெறுவர் என்று முனிவர்கள் மனப் பரவசமுறக்கூறி மேலுஞ்சொல்லுகின்றார். வந்த கிருதயுகந் தோன்றுங் காலத்திலே வீராகமலையின் மேல்மந்தர சிருங்கத்தின் உச்சியின்மேல் துழாய்மாலைதரித்த நீண்டோனாகிய திருமால் அங்கிருந்த நமது சிவயோகத்தலைவர்களை அடுத்து மலரகிதராகிய சிவபெருமான் திருவடியை அடையுஞ்சாதனங்களைக்கேட்டும் அறிந்தும் கேட்பார்க்குத் தெரியச்சொல்லியும் இருந்துகொண்டிருக்கையில் லட்சுமியும் பூமாதேவியும் துதிசெய்துகொண்டவர்பக்கம் போயினர், அதைத்திருமால் சிறிதுங்கவனித்திலர் சிவனடியார்கள் கேள்விகளுக்கு விடைகொடுத்துக் கொண்டேயிருந்தனர். அப்பொழுது ஸ்ரீதேவியும் பூதேவியும் வருத்தமுற்று ஒருபுறமாகச்சென்று நின்றனர். அப்பொழுது புண்டரீகர் என்னும் பாகவதர் அவர்களைக்கண்டு கைகுவித்து எதிர்சென்று வணங்கித் தாய்மார்களே! நீங்கள் இவ்விடம் வந்தது என்னகாரணம் என்று வினவினன். அதற்கு அவ்விருவரும் நடந்த உண்மைகளைச்சொல்ல, புண்டரீகர் என்னும் பாகவதர் அவற்றின் உண்மைகண்டு சொல்கின்றார்.

தாய்மார்களே பரம்பொருளாகிய சிவபெருமானது சிவந்த திருவடிகளை மனத்தினிறுவும் சிவயோகியரின் வழிநடக்கும் அந்தக் காலத்தில் நீங்கள் சேர்ந்தமையால் திருமால் உங்களை வெறுத்தனர் என்றுசொல்லிய புண்டரீக முனிவரைப்பார்த்து இவ்வாறாகிய குற்றத்தை அறியாமற் செய்தோம் இனிமேல் யாஞ்செய்யுங் காரியம் யாதெனக்கேட்டனர். அதற்கு அவ்விருவர் பாதங்களையும் வணங்கித்தாய்மார்களே! வட திசைக்கண்ணுள்ள சித்த தீர்த்தக்கரையினிடத்தும் வில்வவனத்தின் கிழக்கிலுள்ள நெல்லிவனத்துஞ் சென்று தவத்தைச்செய்தால் திருமால் உங்களைச் சார்வாரெனச் சொல்லிப் போயினர். புண்டரீக முனிவர்சொல்லிய வார்த்தைகளைச் செவ்விதாய்க் கேட்டு ஏற்று பூதேவி சித்ததீர்த்தக்கரையிலும் சிதேவி நெல்லிவனத்தினிலும் இருந்து தவஞ்செய்தார்கள் திரேதாயுகத்தில் விசுவாமித்திரமுனிவர் போர்வலிமையையும் வலியசேனைகளும்போரிலழியச்செய்து அதனால் அகங்காரங்கொண்ட காமதேனுவை மயக்கம் நீங்கிய வசிட்ட முனிவர் முகம்பார்த்து அகங்காரம் உடையவர் உய்யுந்தன்மையில்லை. ஆதலால் தவஞ்செய்தாற்றான் நீயுஞ் சுவர்க்கலோகத்தையடைவாயென்று கூறினார் இவ்வார்த்தைகளைக் கேட்ட காமதேனு அஞ்சி முனிவர் பாதத்தில் விழுந்து தேவரீருடைய சுற்றேவலைவிட்டு எங்கே தவஞ் செய்வேனென்று பணிந்து கூறலும் முனிவர் காமதேனுவே! நினது கலையிலொன்றுகொண்டு எனக்கு குற்றேவல் செய்வாயாக மற்றைக் கலைகளைக்கொண்டு கூவிளவனத்தின் வடக்கேயுள்ள தீர்த்தத்தே தோன்றிச் சிதேவி தவஞ் செய்யவும் நெல்லிவனத்தை அடைந்து அரிய தவநிலைவரும்படிச் செய்து வருங்காலத்து மூன்றும் யுகத்திலே சிவபெருமான் காட்சி கொடுத்துத் திருவருள் செய்வார் என அவ்வாறே காமதேனு அங்கு சென்று அருந்தவஞ்செய்தது. தவஞ்செய்து சிலகாலம்நீங்குதலும் வசிட்ட முனிவர் முற்கூறியபடி மூன்றாவது யுகமாகிய துவாபர யுகம் பிறக்க இந்திர நீலம்போன்ற திருமாலும் பிரமதேவரும் தேவர்களும் சூரியதேவனும் சர்ப்பாபரணராகிய சந்திரமௌலியின்

திருவடிகளை வணங்க விரும்பிக்கயிலைக்கு வந்தனர். அப்பொழுது தேவர் கூட்டங்களுள் சூரியனை நாரதர் பார்த்து நீ எவ்விடத்திலும் நின்று வெயில் செய்யாவிட்டால் உயிர்கள் அழியாதிருக்குமோவெனக் கேட்க வீரமும் அகங்காரமுங் கொண்டவனாய்ச் சூரியன் நாரதமுனிவர் பாதங்களை வணங்கினான். ஐயனாகிய சிவபெருமான் இதனையறிந்து பக்கத்தில் விளங்காநின்ற கண்ணை இமைத்துத்திறந்தார். அச்சமயத்தில் சூரியனுடைய காலம் அளவில்லாதன சென்றன, சூரியனே- இவ்வாறு வந்தாயாக, அதனால் ஒளி குறைய உலகத்து பரர்கள் வருந்துவது பார்த்தாயோ எனறு கேட்டனர், சூரியன் நடுநடுங்கி பாசபந்தத்தால் தீவினைசெய்த நாயேனது அகங்காரத்தை எப்படி நீக்குவேனென்று வணங்கிக் குறையிரந்தான். அப்பொழுது பெம்மான் கோங்கு வனத்திலே தென்கிழக்குத் திசையின்கணுள்ள நெல்லிவனத்தின்கண் லட்சுமியும், காமதேனுவும், தவஞ்செய்யுமிடத்தில் பிராமணனாகயிருந்து தவத்தைச்செய்வையாம். அங்கு வந்து வரங்கொடுப்போமெனச் சிவபெருமான் திருவாய்மலர்ந்தபடியே அவ்விடஞ்சென்று தவத்தைச்செய்துகொண்டிருந்தான். இந்தவிதமாக இலட்சுமியாலும் காமதேனுவாலும் சூரியனாலும் அர்ச்சித்துப்பூசிக்கப்பட்ட சிறப்பினால் தேவர்களும்முனிவர்களும் வசிக்கும் பழநிமலைக்குத் திருவாவினன்குடி எனப் பேர் வந்தது.

திரு (இலட்சுமி) ஆ (காமதேனு) இனன் (சூரியன்) (இம்மூவரும் அகலாது வசித்துப்பூசித்த) குடி (இடம்.) இவ்விடத்தே எந்தநாளும் பரமசிவம் உமாதேவியாரோடும் கூடிவீற்றிருந்தருளுவார். எந்தக்காலத்தும் ஒப்பற்ற வேலாயுதத்தைத்தாங்கிய கந்தக்கடவுள் எழுந்தருளியிருப்பார். இஃதன்றி எண்ணிறந்த தேவர்களும் முனிவர்களும் மேவித்தவஞ்செய்து அழிவில்லாப்பெரும் பேரடைவர். பிரமன், விட்டுணு, உருத்திரன் யென்னும்மும்மூர்த்திகளும் அகலாது எம்பெருமானாகிய பரமசிவத்தையும் பராசத்தியையும் கந்தக்கடவுளையும் அனுதினமும் போற்றிக்கொண்டேயிருக்கும் இப்பழநி

மலையில் எம்பெருமான் குகநாதன் கையிலிருந்து வந்து குடியேறிய காரணமுங் கூறுகின்றேனென்று சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர். பிரமதேவன் சபைக்குச்சென்ற நாரதர் தன்னுடைய மகதி யாழைமீட்டி யின்னிசைகாட்டி யின்பமூட்டிப்பாடினன். அது கேட்ட பிரமன் தலையசைந்து நன்று நன்றென்று பெரிதும் புகழ்ந்து தன் கையிலிருந்த சிறந்த மாதுளம்பழம் (மாம்பழம் என்றும் புலவர்கள் கூறுதலுமுண்டு அதுவுஞ்சரியென அங்கிகரிக்கப்பட்டு வருகின்றது.) ஒன்றைக்கொடுத்தனர். நாரதர் அதனையேற்று இது சிவபிரானுக்கு ஆகும் யென்று கூறினர். பிரமரும் அதுவே நம கருத்தெனக்கூறி மகிழ்ந்தார். உடனே நாரதர் பிரமசபையினின்றும் விடைபெற்றுச்சென்று பார்வதி சமேதராய்க் கயிலையிலிருந்த சிவபெருமானைத் தெரிசித்து தான் கையிற்கொண்டுவந்த நறுங்கனியைக்கையுறையாகக் கொடுத்துத் துதித்துப்புகழ்ந்தார். அப்பொழுது அகமகிழ்ச்சியோடு தங் கையிலேந்தித் தம்மிரு அரும் புத்திரர்களிருவரையுந் திருவருள் சுரக்க நோக்கி நீவிர் இருவரில் எவராயினும் இப்பழத்தின்மேல் விருப்புற்றால் பூமியை ஒரு கணத்தில் வலம் வருவீர்களாயின் இக்கனியைக்கொடுப்போமென்று கூற இளையபிள்ளையாகிய எம்மையாளுடைமுருகர் வர்ணமாமயில் மிசை ஏறிக்கைலையை விட்டிறங்கி பூமியைச் சேர்ந்தார்.

அப்பொழுது ஒற்றையக்கொம்புடைய பெரிய பிள்ளையாகிய விநாயகர் உயிரெலா மளித்த பரமமாதாவாகிய பராசத்தியை வலம் வந்து வணங்கிப்பின் எங்குமாய் யாவுமாய் நின்றருளும் பரசிவமாகிய தந்தையை வணங்கித் தன்னருட்பாதமலர் துதித்துச்சொல்கின்றார், அண்டங்களும், பிரமாண்டங்களும், வெளியண்டங்களும் அப்புறமாய் நான்கு வேதங்களின் முடிவிலே கூறப்பட்ட எப்பொருளும் எவ்வுயிருமாய் இருப்பவர் தேவரீர் அல்லாமல் வேறில்லை என்பது வேதங்கள் முழங்கிக் கூறுகின்றதாதலினால் தங்களையும் உயிர்களுக்கெல்லாந் தாயாகிய தாயையும் வலம் வந்தேன் ஆதலின் கனி எனக்கே கிடைத்தற்கேயுரியதென் றுரைத்தார். அதுகேட்டு

மகிழ்ந்து சிவபெருமான் அம்மாங்கனியை (மா-மாட்சிமை பெற்ற கனியை-பழத்தை) பிரணவப்பெருந்தகை ஐங்கரன்பாற் கொடுத்தருளினார். இதுநிற்க பூமியை நாடிச்சென்ற சுப்பிரமணியர் பூதகணங்களும், நவவீரர்களும் சூழ்ந்துவர ஆயிரங்கோடி சூரியப்பிரகாசத்துடன் சென்றார். எம்பெருமானார் செல்லும்பொழுது சேவற்கொடி சனிமண்டலத்திற்கும் அப்பாற் சென்றது. சாமரைக் கூட்டம் திரைபோல் இரட்டப்பெற்று விளங்கிற்று. நான்கு வேதங்களினின்னிசை கடலொலிபோற்பரவிற்று. தேவர்கள் மலர்மழை சொரிந்து துதித்தனர். தேவகானங்கள் முழக்கப்பட்டது என்றுமாறு விளமையையுடைய முருகக்கடவுள் வலம்வரக் கீழ்த்திசையடைந்தார். அப்பொழுது இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் தேவப்பெண்களும தொழுது சென்னிமிசைக் கைகுவித்து நின்று போற்றி அக்கினித் திசைக்குச் சுவாமிநாதனைத் தொடர்ந்து சூழ்ந்து சென்றனர்கள். அக்கினிதிசைக்குக்குருபரன் சென்றதும் அக்கினி முதலிய தேவர்களும் புகழ்ந்து துதித்துப்போற்றி தென்றிசைசெல்லும் வேற்கரவீரன் பின்னாத்தாமும் சூழ்ந்துபோயினர். அவ்விடஞ்சென்றதும் யமனும் அவன் கணங்களும் எதிர் சென்று கைகுவித்து வணங்கிப்பன்னிருகரத்தண்ணல் பன்னிருசெவியினுங்குளிரும்படித் துதித்து அவர்களெல்லாம் புடைசூழ முருகர் தென்மேற்குத்திசையை யடைந்தார். அவ்விடத்தே வசிக்கும் நிருதி தம்மவர்கள் புடைசூழ எதிர்வந்து நின்று துதித்துப்புகழ்ந்து போற்றிப்பின்றொடர மேற்குத்திசையை யடைந்தார். செவ்வேற்குமரர் இவ்வாறு அடையும்பொழுது வருணன் தம்மினமுந் தன்கணமும் புடைசூழ எதிர்சென்று தலைமிசைகரங்கள்குவித்துப் பதுமமலர்த்தாள்களுக்குத் துதிகூறி ஆனந்தக்கூத்தாடினான். தொடர்ந்துவரும் முன்னைய கூட்டங்களோடு இவர்களுந் தொடர்ந்துவர நீலநிறமயில் மேலுலவுங் கந்தக்கடவுள் வாயுதிசைச் சார்தரும்பொழுது வாயு மிக்க பயபக்தியுடன் வந்து வணங்கித்துதித்துநின்றான் அவனும் அவனினமுந்தொடர்தரக் குபேரனுடைய அளகைக்குச்சென்றனர். செல்லலும் எம்பெருமானின் அரிய திருத்தோழ

னாகிய வடதிசைக்கிழவன் தன் பரிசனந்தொடர்ந்துவர எதிர்சென்று செந்திலுறை சீமான்றிருவடிபணிந்து நின்றான். தேவர்களும் கின்னரர் கிம்புருடர் கருடர் காந்தருவர் முதலாயினோர் தேவகானங்களைப்பாடிக்கொண்டு தொடர்ந்துவரப்பின் வடதிசைக்குச்சென்றனர். தனிமுதற்பொருளாகியவரும், வேதசாரமாகியவரும், மதுரரசம் நிறைந்த பழமாகியவருமாகிய அறுமுகக்கடவுள் அவ்விடத்தே உருத்திரர்களும் அட்டவசுக்களும் சாரணர்களும் எதிர் சென்று எம் பாலசுப்பிரமணியக்கடவுளின் திருவடியைத்தொழுது ஏத்திநின்றனர். பின், எல்லோருந் தொடர்ந்துவர, எவ்வுயிர்க்கும் உயிராய் விளங்கும் பரமநாதன், கணநாதர்களும் அரிபிரமாதியர்களும் சூழ்ந்து இன்னிசை மதுரகானம்பாடிப்போற்ற எனதன்னையாரோடு வீற்றிருக்கும் வெள்ளி வெற்பைச் சார்ந்து இறையை வணங்கினர். இதற்குள் ஒருகணப்போதும் முடிவுபெறாது ஒருகணத்திலும் குறைந்த காலமேயாயிற்று. சிவபெருமானின் திருச்சந்நிதி வந்ததுந்தந்தையாகிய கங்கைச்சடாடவியர் திருக்கரத்திருந்த மாதுளங்கனி அண்ணனாகிய விநாயகர் செங்கரத் திருப்பதைக் கண்டு தெளிவடைந்து கைலையை விட்டுப்புறப்பட்டு தேவகிரியென்னுஞ்சோதி மத்தலத்திற்சென்று அவ்விடத்தேநெடுநாளாகத்தவஞ்செய்துகொண்டிருக்கும் முனிவர்கள் சிவாகமப்படி பூசைபுரிய அவர்களுக்கருள்செய்து பின் சிவபெருமானுக்குந் தாயாருக்குந் தனக்கும் பழமைப்பட்டதும், பராசத்தியும் இலட்சுமியும், சூரியனும், காமதேனுவும், பூசிக்கும் வியத்தானமாகிய வராகமலைச்சாரலிலுள்ள திருவாவினன்குடியைச்சார்ந்தனர். அவ்விடத்தே தன்னை வணங்கிய திருமகள் சூரியன், காமதேனு முதலியவர்களுக்கும் தேவர்களுக்கும் அருள் புரிந்து தன் சத்தி வேலால் ஒரு தீர்த்தமுண்டாக்கி யதில்மூழ்கச்செய்து அவர் மலங்களையறுவித்து இம்மை மறுமைப்பயன்களை அடையும்படிச்செய்தார். இன்னும் அத்தலத்தில் எந்தை இன்குரற்கோழிக்கொடியையுடைய மயில்வாகனப் பெருமான் பிரமனாகவும் விட்டுணுவாகவும், இவரிருவருங்காண முடியா உருத்திரராகவும், அதற்குமேலாம் மகேசுரமூர்த்தியாகவும், இரு

ப்பர். அருவம், உருவம், அருவுருவங்கொண்டு பஞ்ச கிருத்தியங்களையுஞ் செய்வர். பின்னர் ஒப்பில்லாத பலவேறு வடிவங்களைக் கொள்வர். அவரது திருவிளையாட்டு, ஒன்றோ எண்ணிறந்த கோடியாகும்.

இஃதிப்படியிருக்க கயிலையிலுள்ள சிவபெருமான் எமது குடிவாழ்வாகிய முருகனை பிரிந்து செல்வான்? என்று இரங்கி இமயமலையரசன் புத்திரியாராகிய உமாதேவியார் பாகத்திலே விளங்க, மூவுலகத்தும் தேவதுந்துபிகள் ஒலிக்கவும், தேவர்கள் வணங்கவும், பூதக்கூட்டங்கள் நெருங்கவும், பிரம விட்டுணுக்கள் பக்கத்திலே நின்று வணங்கவும், குமாரக்கடவுள் எழுந்தருளியிருக்கின்ற திருவாவினன்குடியில் வந்தருளினார்.

சிவபெருமானாராகிய தந்தை தாயாருடன் வருதலுஞ் சமுத்திரத்துடன் சமுத்திரங் கலப்பதுபோல் பிணக்குற்றிருந்த வேலாயுதக்கடவுள் தங் கணங்கள் புடைசூழக் கணங்களுடன் வந்த சூலாயுதக்கடவுளையும் தாயையும் படிமிசை வீழ்ந்து வணங்க இறைவர் ஆசி கூறி எண்டோளும் புளகிக்கப் பன்னிரு தோளினையெடுத்து, அறுமுகனைப் பறமுகத்தும முத்தாடி உச்சிமோந்து மார்புறப்புல்லி உலகக்காரணியாகிய அன்னை வசங் கொடுத்தருளினார். அன்னை

அப்பா வருக! அமரருயிர் அளித்தாய் வருக! முழுஞான
ஐயா வருக! அணிமதியோன், மதலாய் வருக! எமதின்பச்
செப்பே வருக! சிவந்தழைக்குஞ் சேயேவருக! எமதாவிச்
சேங்வே வருக! திருமுருகச் சேந்தா வருக! அருட்சோதி
வைப்பே வருக! மணிமயிலே றுடையாய் வருக! பிரமற்கு
அன்று தடிலைப் பொருடெரித்த அமலா வருக! பிறைச்சென்னி
அப்பேயுடையார்மணிப்புயத்து அணியேவருக! கதிர்வேற்கை
அத்தா வருக! வலர்முலைப்பா லருந்த வருக! வருகவே!

திருமுலைப்பாலுண்ணுமாறு அழைத்து தமதருமைத் திருக்கரங்களால் எடுத்துப் பின்னருஞ் சிவபெருமான் திருக்கரமிசைக் கொடுத்தருளினர்.

சிவபெருமான் உருக்கங்கொண்டு தனது மடிமேல் வைத்துப் புதல்வரைப் பார்த்து, எக்காலத்தும் இளமைப் பருவத்தையுடைய கந்தா! மேலான ஞான வடிவுடையாய்! நமது உமாதேவியின்கண் மணிபோன்றாய்? நீ சிறுபிள்ளையோ! எல்லாவற்றினும் எல்லாரினும் மிகப் பெரியவனாய்ப் பெரும் பொருளாய் விளங்குபவனல்லவோ? நீ வாசனையையுடைய மாதுளம்பழம் நினக்கு ஒரு பழமாகுமோ? சொல்லற்கரிய வேதங்கள் கூறும் ஞானக்குழந்தையாகும். பழம் நீ என்றார் அது கேட்டு வள்ளிகாதலனாகிய பெருமானார் மனமகிழ்ந்து, தாயையும் தந்தையையும், இன் சொல் கொடு துதித்து பாதங்களையர்ச்சித்து நின்றார் நின்ற குமரக்கடவுளைத் தாயுந் தேவியும் வீற்றிருக்கும் சிங்க ஆசனத்திடையே தழுவி எடுத்து வைத்துக்கொண்டு நினக்கு வேண்டும் வரங்களைக்கேள் அவைகளையளித்தருள்வோம் என்று திருவாய் மலர்ந்தருளினர். ஆதி மத்தியாந்த மற்ற ஞானப் பேரொளிப் பழம்பொருளே! இடைவிடாது உம்மோடு தமியேன் எந்நாளும் யான் இவ்விடத்திலிருத்தலால் இலக்குமி காமதேனு சூரியன் என்னும் இவர்போல் உயர்வு நீங்கப் பெற்றவர் வந்து சேர்ந்தால் அவர் குறைவு நீங்கி யுயர்வு பெற்று நற்கதியடைந்து உய்யுமாறு அருள்செய்ய வேண்டுமென்று பணிந்து வேண்டச் சிவபெருமான் அருள்கூர்ந்து வேலாயுதத்தையுடையாய் உலகத்தவர்கள் இவ்விடம் யாங்களிருக்கும் ஊரென்று தரிசிப்பாராயின் தேவருந்துதிக்க எம்மை அடைந்து முத்தியின்படைவர் எவரேயாயினும் இங்கடைந்ததாந் தங்குறை நீங்கப் புனிதராய்ப் புகழொடு வாழ்வர், எம்மை நீ வழிபட்டுப் பூசித்த இடமாகிய இவ்விடத்தில் வந்தடைந்தவர்கள் சத்தியமாய் முத்தி பெறுவர் மலத்தாற் பந்திக்கப்பட்ட மிகக் கொடிய பாதகராயினும் உன்னை நினைத்தால் அவர்க்கு முத்தியைக் கொடுப்போம் இது

உறுதி, இது சத்தியம், இன்னும் நீ நின் வேலாயுதத்தால் உண்டாக்கிய சரவண தீர்த்தத்தில் மூழ்கும் பரிசுத்தர்கள் நமது சிவகணங்களாவர் கனிந்துருகுவதற்கேதுவான உனது பெயரைச் சொல்லிக் கார்த்திகை மாதம் முழுவதும் உஷத் காலத்தில் நீரில் முழுகினோர் எமது வடிவைப் பெறுவர் இது சத்தியம் இந் நெல்லி வனத்தில் கார்த்திகை மாதம் வந்து தவஞ்செய்வோர் சுவர்க்க லோகத்தில் இந்திர போகத்தில் வீற்றிருப்பர் இந் நெல்லி வனத்திருந்து அநேக விதமான தருமத்தைச் செய்தாலும் விரதமனுட்டித்தாலும் எல்லாப்பதவிகளிலும் மேலான பதவியை யனுபவிப்பார்கள் என்று சொல்லி மேலுஞ் சொல்லுகிறார், இப்பழநிமலை நம் வெள்ளிமலை, நீயே நான், இவ்விடத்திருப்போரே சிவகணங்கள், இங்குள்ள தீர்த்தங்கள் கங்கா தீர்த்தம் இதுவே வேதமுடிவு இதுவே உண்மை இதிற் சிறிதும் ஐயம் வேண்டாமென யாவருங் கேட்கும்படி கூறியருளினர். அங்கிருந்த இலட்சுமி காமதேனு சூரியன் முதலியவர்களுக்குப் பெரிய வரங்களைத் தந்தருளினார்.

விஷ்ணு, சிவபெருமான் ஆஞ்ஞைப்படி பூதேவியையும் சீதேவியையும் விவாகஞ்செய்து பரத்துவாசர் சஞ்சரிக்கும் ஆச்சிரமத்தின் கண் உயர்ந்த மகிழமரத்தின்கீழ்த் தங்கியிருந்தார். காமதேனு பின்னரும் கடவுளையும் கந்தக்கடவுளையும் அர்ச்சித்து வசிட்டரை அடைந்தது. சூரியன் ஆகாயத்தில் வந்து வந்து அருச்சனை செய்து இடையறாது விளங்கும் ஒளியைப் பெற்றான்.

சிவபெருமானும் சிவசத்தியும நேரே வந்து குமரக்கடவுளை ஞானம் என்றும் பேற்றினையுடைய பழம் என்று திருவாய்மலர்ந்தமையால் எமது கடவுளாகிய ஆறுமுகக் கடவுள் எழுந்தருளியிருக்கும் திருவாவினன்குடியென்றும் அருமைத்தலம் பழநித்தலம் என்று திரிலோகங்களும் கூறலுற்றன.

என்று கூறி இத்தலத்திடை தேவர்க்கருளுஞ் சுப்பிரமணியக்கடவுளின் தூயமாமலர்த்தாள் ஏத்தி கிருதயுகத்தில் பிரமேக்

திரன் பூசித்ததைப் பற்றிச் சிறிது சொல்கின்றேன் கேளுங்கள் நைமிசாரணிய வாசிகளே எனச் சூதமுனிவர் கூற; முனிவர்கள் வணங்கித்தாழ்ந்து சிந்தையைச் சிதறவிடாது குகப்பெருமான் பாதார விந்தப் பெருமைகளைச் செவிசாய்த்துக் கேட்பாராயினர்.

—:(o):—

பதினான்காவது

பிரமேந்திரச் சருக்கம்.

வெண்பா.

பிரமேந் திரன்முன்னாள் பேறு பெறவென்றே
வரமேந்தி நின்ற வராககிரி—சென்று தினம்
ஐயன் புகழ்பரவி, ஆறுமுக னைப்போற்றின்
ஐயமற வீடுவரு மால்.

முனிவர்களே! கிருதயுகத்தில் நான்கு வேதங்களிலும் வல்லவரும் மெய்ஞானத்தைப்பெற்றவருமாகிய அங்கார ரிஷியை ஒத்த ஒரு முனிவர் இருந்தார். வேதத்திற்சொல்லிய மூன்றக்கினிகளையும் நன்றாய்ச்செய்துமுடித்தவர், பரிசுத்தமான நிலைகளிலே நின்று ஆன்மவிலக்கணத்தை நன்றாய் அறிந்தவர். அவர் பெயர் பிரம்மேந்திரரென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அவர் காவிவத்திரமும் நூலிற்சொல்லப்பட்ட மூங்கிற்றண்டையும், கமண்டலத்தையும், உடையவர் சகுனசாத்திரத்தில் வல்லவர்.

முனிவர்களும், மாணாக்கர்களும், நெருங்கித்தம் பக்கத்தில் வர மூன்றுவருடம் பூமியை வலஞ்செய்து சிவபெருமானு லாளப்

பட்ட பொருனைநதி, காவிரிநதி, முத்தாநதி, என்னும் இனங்களாற் சூழப்பட்ட பூங்கொத்துகள் மலர்ந்து விளங்கும் சோலையையுடைய திருமுக்கூடற்பதியை யடைந்து இரத்தினலிங்கப் பெருமானை மனத்தாராய்ந்து பூசித்துப்பின சையமென்னும் பெரியமலையில்ஏறி நாற்பது நாளிருந்து பெருமானைப் பூசித்துப்பின் முத்தாநதி விழுகின்ற சேரமலையை அடைந்து அங்குள்ள சிவலிங்கப்பெருமானைத்துதிதுப்பின் சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற முக்கூடற்பதியிற்போய்ச் சிவபெருமானைத்துதித்தார். இன்னும் திருக்கருவூர் திருக்கரையூர் முதலிய திவ்யஸ்தலங்களையும் சென்று வணங்கிப் பின் கோங்கு வனத்துச்சென்று சிவபெருமான் றிருவடிகளைத் துதித்து வில்வவனத்திற்போய் உமாதேவியாரைவணங்கி திருவாவினன்குடி என்னும் பழநித்தலத்தில் வந்து மலர்தூவி சண்முகக்கடவுள் பாதத்தை வணங்கித்துதித்துத் தன் மாணவர்களுக்கும் முனிவர்களுக்கும் பழனித்தல மகிமைகளை எடுத்தோதி அங்கிருந்து சிவபெருமானின் திருச்செவியில் ஓம்பொருள் உபதேசித்த உத்தமன்றண்மேற்காதல் வைத்துபூசித் தவர்பாதம் பெற்று வைகி பேரின்புற்றிருந்தார் என்று மேலுங்கூறுகின்றார்.

பதினைந்தாவது

நித்தியநாதச்சருக்கம்.

(:o:)

வெண்பா.

நித்தியநா தப்பெயரோன் நித்தனடி சாரவொரு
உத்தமமாம் நல்லசிவ யோகத்தை—சித்தமுறப்
போதித் தருளியநற் பூங்கடம்பன் றாளிணையை
ஓதிச் சுகமடைய வுள்

கேளும் முனிவர்களே! சென்றதான இரண்டாவது யுகமான திரேதாயுகத்திலே குற்றமில்லாத சிவயோகஞ் செய்பவர்களுள் சித்திய ஞானத்தையுடையவரும் தலைவராகிய சிவபெருமான் அருளைப்பெற்றவருமான சித்தியநாத முனிவரென்றொருவரிருந்தார். அவர் முக்காலத்தையும் உணர்ந்தமையால் தனக்கு வரப்போகும் இன்னொரு பிறவியை உணர்ந்து, அதில் தனக்கு முத்தியுண்டாம் என்பதைத் தெளிந்து, பெருந் தவத்தைச்செய்து நளமகாராசன் என்பான் ஒருவனுக்கு அவன் தவப்பயனே உருவெடுத்து வந்ததுபோல் அவனுக்கு மகனாகப்பிறந்து இராசராசனென்றும் பெயர்கொண்டு வந்ததும் பூமி பாரத்தைத் தாங்கிக் குறைபற அறம் வளர்த்து வந்தான். சிவபெருமான் திருக்கோயில்களை நியமமாய்த் தரிசித்து வரும் நாட்களில் ஒரு நாள் கோங்கு வனத்தையடைந்து அங்குள்ள சிவபெருமானின் திருக்கோயில்களை எல்லாம் தரிசித்து பழய பரமேஸ்பரியின் சத்தி தீர்த்தக்கரையை யடைந்தான். அவ்விடத்தே தன் பெயரால் அன்பர்தம் களங்கமில்லாத தூய வுள்ளத்தைத் தனக்கு ஆலயமாகக்கொண்ட அமலநாதற்கோர் ஆலயஞ் சமைத்துக்குறைவறப் பூசைநடந்துவரத் திட்டஞ்செய்துபூமியைச் செங்கோல் வழுவாது அரசாட்சி செய்துவரும் நாட்களில் தரும அர்த்த காம மோட்சம் என்னும் உறுதிப் பொருள்களை அடையும் வழியை நினைத்து சிவபெருமானது தாண்மலரையே விரும்பித் துதித்துச் சிவஞானம் உதிக்கப்பெற்று முக்காலங்களையும் உணரப் பெற்று அரசு விட்டுத் துறந்து திருவாவினன்குடியை அடைந்து குருபரனாகிய கந்தக் கடவுளின் இனிய பதமலர்களை எப்போதும் போற்றியருச்சித்துத் துதித்து வந்தான் அதற்குவந்து, அப்பா சாமியென்னுஞ் சிறப்புப் பெயருடைய முருகக்கடவுள் ஞானதேசிக வுருவோடு காட்சி கொடுத்து நினக்கு வேண்டுவதென்னவென்று கேட்டனர்.

ஞானாசிரியத் திருக்கோலத்துடன் வந்தவர் பன்னிரு திருக்கண்களையுடைய ஆறுமுகக்கடவுள் தான் என்பதை நிச்சயித்து

பலவாறு துதித்து சிவயோகம் ஓதியருளவேண்டுமென்று பரனைத் துதித்துக் கேட்க அருள்கூர்ந்து எம்முருகக்கடவுள் சிவதத்துவம், சிவஞானம், சிவயோகம், முதலியவைகளை ஓதியருளி அந்நிலையில் நிற்கச்செய்து ஊமையன் கண்ட கனாப்போல் இருக்கும் சிவயோக ரகசியங்களை அநுபவித்து முத்திப்பேற்றடையும்படி அனுக்கிரகித்து மூன்று உலோகத்துக்கும் சோதித்தம்பமாய் விளங்கும் வேலாயுதத்தைத்தாங்கிய குமாரக்கடவுள் தமதுகோயிலையடைந்தனர் என்று திருவாய்மலர்ந்தருளி இன்னுஞ் சொல்கின்றார்.

——:(o):——

பதினாறாவது

சுவணகுத்தச் சருக்கம்.

——:(o):——

வெண்பா

சொல்லு புகழ்சேர்த்திச் சுகுணகுத்தச் சத்தனுக்கு
எல்லொளிரும் ஆறுமுக எந்தையொரு—மல்லலினஞ்
சேயாகி யேற்ற திருவளித்த மாமயிலோன்
தாயாகிக் காக்கு நமைத்தான்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளே! துவாபர யுகத்தில் ஒரு வணிகன் முத்தியடைந்து பேறு பெற்றனன், அதையும், உங்களுக்குச்சொல்ல விருப்புற்றிருக்கின்றேனென்று கூறிச்சொல்கின்றார்.

யோகாரண்ணியம் என்னும் காட்டில் பழய வணிககுலத்திற் பிறந்த சுவணகுத்தன் என்னும் வணிகன் தன் மனைவியாகிய மகேசை என்பவளோடு இனிது கூடி வாழும் நாட்களில் என்னும் திரு

மாலுக்கு இயற்றிவரும் பூசை முதலிய நியமங்கள் செய்வதில் சிறி
தும் குறைவின்றி நடத்திவந்தான். செல்வத்தாலும், புகழாலும்
நல்லொழுக்கத்தாலும், கல்வியாலும், இன்பவகையாலும், ஏதுங்
குறைவில்லா இவர்களுக்கு நெடுநாளாய் மகப்பேறில்லாப் பெருங்
குறை நேர்ந்ததினால்,

“பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பேறல்ல
பிற” என்னும் ஆன்றோர் வாக்கிற்கிணங்க, இக்குறை ஒன்றாலே
யே மற்றவைகளெல்லாமிருந்தும் இல்லாதவராய் மனம் வருந்தியா
டியும் பதிநாடியும் அறம் பல்புரிந்தும் புத்திரப்பேறில்லாதவராய்த்
தானும் மனைவியுமாக மகாவிட்டுணுவைக் குறித்துத் தவமியற்றிய
பொழுது அவர் பிரசன்னமாகி யாது வேண்டித் தவஞ் செய்கின்றீர்
களென்று கேட்க, இருவரும் பலவாறு துதித்துப் புத்திரப்பேறு
வேண்டுமெனப் பணிந்து இரந்து வேண்ட, நீலவண்ணன் உங்கட்
குப் புத்திரப்பேறு கிடையாது. கிடைப்பினும் நிலையாது எனச்
சொல்ல, அப்படியாயினும் நாங்கள் புத்திரப்பேறு அடையும்படிச்
செய்யவேண்டுமென அவர் விருப்பப்படியே தன் சங்கத்தை ஏவி
அவர்கள்பாற் புத்திரனாகத் தோன்றி ஐந்தாண்டிருந்து எம்பால்
வருக எனவிடுக்க; அது மால் மொழி தப்பாது மகேசுவரியிற்
றுற்பவித்து நாளொரும் வளர்ந்து பக்குவமுற்றிப் பத்துமாதமான
தும் மதலையாய்த்தரணி வந்துற்றது. குழந்தையைக்கண்ட பெற்
றோர் அகமகிழ்ந்து தானதருமங்களைச்செய்து விழாவெடுத்து அவ்
வப்பொழுது செய்யவேண்டியவைகளைச் சிறிதும் தவறாது செய்து
வந்தான். நித்திய தரித்திரன் பெற்ற நிணிதிக்குவியல் போல் பிள்
ளையை மிக அருமையாக வளர்த்துவந்தார்கள். குழந்தையும் தன்
இன்முறுவலாலும் குதலைச்சொல்லாலும் இன்னும் பலவிளையாட்
டாலும் பெற்றோரையும் மற்றையோரையும் மகிழ்வித்துவந்து ஐந்தாம்
ஆண்டு முடிந்ததும் நதிகளிலும் குளங்களிலும் சுனைகளிலும் மலை
களிலும் குன்றுகளிலும் சோலைகளிலும் வனங்களிலும் மற்றைச்
சிறுவர்களுடன்சென்று விளையாடிக்கொண்டிருந்தது. அப்பிள்ளை

ஒருநாள் வில்வவனத்தில் பெரியகாமதேனு தீர்த்தத்தில் நீர் விளையாடுகையில் பழப பேறறிவுவந்து சங்கமாகிச் சாரங்கபாணியின் கையிற்சார்ந்தது. இவ்வாறாகிய தன்மையைக்கண்ட ஏனைச்சிறுவர்கள் பிள்ளை நீரில் வீழ்ந்து இறந்ததென எண்ணிப் பெற்றோர்களுக்குத் தெரிவிக்க அவர்கள் கண்ணீராறாகப்பெருக அழுது துயரக்கடலில் ஆழ்ந்து பிரலாபித்து மடுவை அடைந்து தேடியுங்காணாராய் பின் உயிர் வைத்திருக்கும் விருப்பிலராய்த்தம் பொருளெல்லாம் வேதியர்க்கும் சுற்றத்தார்க்கும் ஏழைகளுக்கும் இரப்போர்க்கும் ஈந்து, சுற்றத்தாரும் நண்பரும் குலமும் ஊரும் நடுங்கியழ வணிகனும் மனைவியும் வன்னியிற்குதித்துப் பொன்னகர் புகுத எண்ணிப் போம்பொழுது எமது பிரான் சுப்பிரமணியன் செட்டியின் பிள்ளை போல் தோன்றுன்ற இறந்ததன் பிள்ளையே யெனக்கண்டு எடுத்து அணைத்து முத்தாடிக்கொண்டாடினர். அப்பொழுது அவ்விருவர்களையுந் தடுத்தாட்கொள்ள விரும்பி, வானவர்கோமானாகிய முருகக்கடவுள், ஆறுமுகத்தோடும் ஆயுதங்களேந்திய பன்னிருகரங்களுடனும் கருணைவிழிகளும் மயில்வாகனமுந் தோன்றக் காட்சி கொடுத்தருளினார். அப்பொழுது தேவர்கள் பூமாரி பெய்தார்கள், தேவவாத்தியங்கள் முழங்கின. தேவர்கள் பலவாறு துதித்துப் போற்ற வணிகனையும் அவன் மனைவியையும் நோக்கி நீவிர் நல்லொழுக்கம் பூண்டமையாலும் யாம் வாழும், இத்தலத்திற்றவம் பல செய்தமையாலும், புத்திரனையிழந்த நமக்குப்புத்திரனாகி முன் வந்தோம் என்று கூறி அவர்களுக்கு வேண்டும் வரங்களீந்து தன்கோயிலில் கரந்துறைந்தார்.

என்று சொல்லி மேலுஞ் சொல்கின்றார்.

——:(o):——

பதினேழாவது

வசுமந்தச் சருக்கம்.

——:(o):——

வெண்பா

அன்பா வசுமந்தன் அன்றுதொழ ஆறுமுகம்
முன்பாய் விளங்க முழுவுருவும்—இன்பாகக்
காட்டியருள் செவ்வேளை காதலொடு நான்பாடி
வீட்டியொழிப் பேனென் வினை.

கேளுங்கள் முனிவர்களே! கலியுகத்திலே வசுமந்தன் என்னும் பெயரையுடைய நான்காம் வருணத்தவன் ஒருவனிருந்தான். இவன் சிவபெருமானிடத்து அதிபக்தியுடையவன் மேற்பாலாம் முக்குலத்தாரிடத்தும் நெறி வழுவாது ஏவல் புரிதலைத் தனக்குக் கடன்மையாகக் கொண்டவன், தருமத்தினின்றும் சிறிதும் வேறுபடாதவன், குற்றமில்லாத கோத்திரத்தையுடையவன், பெருமைக் குணமுடையவன், சிவயோகிகளின் ஏவல் கடவாதவன் சிவன் அடியார்களைச்சிவன் என வணங்குஞ் சீர்த்தியாளன், வராகமலையில் எழுந்தருளியிருக்கும் கந்தக்கடவுளின் திருவிளையாடல்களை ஆவலுற முனிவர்கள்பால் கேட்டு, ஒரு நாள் வராகமலைக்குப் பக்கத்திலுள்ள நெல்லி வனத்தையடைந்து முனிவர் கூட்டத்தைப் பார்த்து, அவர்கள் செய்யுந் தவநெறியைக் கண்டு, அருள் அரும்பி, மனங்குவிந்து, புட்பங்களைச் சொரிந்து, வணங்கி ஒரு வழிபட்டு நின்றான், இதுகண்ட முனிவர்கள் இவன் தீவிரதரனாயிருக்கின்றான், அருள்வடிவானான், ஒத்தமனத்தையுடையவன் ஆயினன் என்று நினைத்து, மகிழ்ந்தனர். வசுமந்தனையழைத்து வசுமந்தனே! இங்கே வா, இலட்சுமி முதலானவர்களும் தேவர்களும் பூசித்துப் பேறுபெற்றதானம். இதுவே முத்தி தலமாகும், அறுமுகக்

கடவுள் முதற்பொருளாயுள்ளவன், நானே, ஆகலால் யாவரும் வாருங்கள், வணங்குங்கள், உயர்ந்துபோதிர் என்று நின்றனர்; வைகாசி மாதத்திலே விசாக நட்சத்திரமும் பௌர்ணிமைத்திதியும் வருங்காலத்தில் காட்சிகொடுத்தருளுவர், அந்நாள் வரை அரிய பெரிய தவத்தைச் செய்யக்கடவாய் என்று கூறினார்கள். அப்பால் சொல்லுதற்கரிய முனிவர்கள் சொற்படி அத்தவத்தை அவ்வேளாளகுலதீபன் செய்தான். அப்படிச்செய்கின்ற நாளில் முனிவர் சொல்லிய அந்த விசாகத்தில் நீலம் பொருந்திய மயில் வாகனத்தின் மீது ஒளிகொண்ட வேலாயுதத்தையுடைய குமரவேள் வில்வவனத்தின் பக்கத்திற் திருமால் இருக்கின்ற கோயிலின் பக்கத்தின் கீழ்பாற் சண்முகக்கரையில் ஒரு மணிமண்டபத்திற் கோடிசூரியப்பிரகாசராய்ச் செம்பொனாற்செய்த நவமணிஆசனத்திருந்தார். தேவப்பெண்கள் ஆலவட்ட மிரட்டவும் தேவர்கள் சாமரம் வீசவும், தேவர்கள் கற்பகமலர் சொரிந்து போற்றவும், தெவவாத்தியங்கள் முழங்கவும், வீற்றிருந்தருளினார் எம்பெருமான். வீற்றிருந்தருளும் வனப்பு எறிலா வேதங்களாலும் புகலுதற்கு மிக அருமையுடையதென்றால் சிற்றறிவுஞ் சிறிது வாழ்நாளும் ஊன் கண்ணுமுடைய நாமோ கண்டு அளவிடும் பான்மையது. ஆறு திருமுகங்களும் ஒவ்வொன்று கோடி சூரியப்ரகாசமாய் விளங்கவும் பன்னிரு திருப்புயங்களும் பொன் மலைகள் போலவும் பொற்றூண்கள் போலவும் விளங்க கண், வாய், கரம், பாதம் பதுமங்கள் போலவும் ஒளி செய்ய வீற்றிருந்தனர்.

முனிவர்களும் தேவர்கள் வசுமந்தனும் சரவண தீர்த்தத்தில் நீராடி சன்னதியில் நின்று ஆனந்தக்கூத்தாடி நின்று பலவாறு துதித்துப்பாட அருள்செய்து வராகமலையைத் திருநோக்கஞ் செய்தார் அப்பொழுது எம்பெருமானின் லீலா விசேடத்தால் ஆறு திருநதிகள் தோன்றி எழுந்தன. தோன்றிய ஆறு நதிகளும் மேற்பட்டெழுந்து சண்முக தீர்த்தத்தைக் கைக்கொண்டு தேனு தீர்த்தத்திற் சென்று சூத தீர்த்தத்தையடைந்து, காவிரியாற்றைக்

கஸ்த்தி. தேவர்களும், முனிவர்களும் வசுமந்தனும் வணங்கிப் போற்றித் துதிக்க வீற்றிருந்தருளுங் குமரக்கடவுள் பாதத்தே வந்து பணிந்து போற்றியது. சுப்பிரமணியக்கடவுள் எல்லோர்க்கும் அருள்செய்து திருவாவினன்குடியை அடைந்தார்.

வேலாயுதக் கடவுளைத் தரிசித்தமையால் திரிகாலங்களையும் உணர்ந்த வசுமந்தன் இருடிகளைப் பார்த்துத் தானுணர்ந்ததன்முன் வரலாற்றைச்சொல்லலுற்றான். அறவீர்! நான் முன்னம் பரிசுத்தமுடைய காசிபகோத்திரத்தற் பிறந்தேன். ஆறுதொழில்களையுஞ் செய்வேனன்றி வேறு சிறுமை கொண்ட தொழில்களைச்செய்யேன் அதற்கு முற்பிறப்பிற் செய்த தீவினையினால் அத்தொழில்களை விடுத்து ஒரு கடிகைப்பொழுது வேளாளர்க்குரிய தொழிலைச் செய்தேன். அதனால் அப்பிறவி முடிய இவ்வேளாள குலத்திற்பிறந்தேன். இப்பொழுது உங்களையும் விசாக மூர்த்தியையும் பூசித்து வினைகளெல்லாம் ஒழித்தேன். இத்தலத்தில் ஒருவருடம் யோகம் செய்து முத்தியை அடைவேனென்று சொல்லி முடித்தான் என்று சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குச்சொல்லிமுடித்துப் பின்னுஞ் சொல்கின்றார்

——:(o):——

பதினெட்டாவது

சண்முகநதிச் சருக்கம்.

வெண்பா

எந்தை முருகவேள் இன்னினிய ஆறுமுகம்
முந்தியருள் நற்சண் முகநதியை— வந்தொருகால்
ஆடினால் அன்புடையீர் ஆயசகம் அத்தனையும்
ஓடிவரும் ஆங்கே உமக்கு.

தருமவடிவினராய் சூதமுனிவரைநோக்கி பிறவியாகிய அணுகுதற்குஅரிய கொடிய நெருப்பை அறிவென்னும் நீரை வார்த்துத் தணிக்கும் பெருமை வாய்ந்த முனிவர்கள் பெருமானே! சண்முக நதியின் மகத்துவத்தை அடியேங்களுக்குரைத்தருள வேண்டுமெனறுபணிந்துபோற்றிக் கேட்க சூதமுனிவர் மனமகிழ்ச்சியோடு நைமிசாரணிய வாசிகளை நோக்கிக்கூறுகின்றார் கேளுங்கள் நைமிசாரணிய வாசிகளே!

புட்பங்கள் நிறைந்துள்ள சண்முகை தீர்த்தத்தின் கரையில் வேலாயுதப்பெருமான் உலகுய்யும்படி வீற்றிருந்து வராக மலையின் கொடிமுடியைப்பார்த்தருளிய பூரணசந்திரனைப்போன்ற ஆறு திருமுகங்களேோறும் பெரியதிருவருள் மிக்க ஆறுநதிகள் தோன்றி நதியாகவிளங்கிற்று.. சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடன், ஈசானம் என்னும் ஐந்துமுகங்களினின்றும் முறையே கொன்றைநதி, சாமதீர்த்தம், சுத்தநதி, மாயார்த்தம், ஞானநதி, என்னும்ஐந்துநதிகளுந்தோன்றியும், மூலமுகத்தினின்றும் பசிய மயூரநதியுற்பவித்தும் கங்காநதியை ஒத்த சண்முகதீர்த்தத்திற் சேர்ந்து ஒன்றாய்க்கலந்து தேடிவந்து முருகன் பாதத்தை வணங்கிய சண்முக நதியைக் கதிர்வேற்பெருமான் கண்டு பதினென்கு பெரும்புவனங்களினுள்ளிருக்கும் அறுபத்தாறுகோடிக்கு மேலான தீர்த்தங்களின் வடிவுகொண்டு விளங்கும் பெருமையையும் எத்தகையபாதகங்கள் செய்த எவராலும் அதினிடைமூழ்கினல் முத்தி பெறுவிக்கும் மேன்மையையும் இன்னும் எண்ணரும் பலவரங்களையுமீந்து சண்முகமென்னுந் திருநாமமும் தந்தருளினர். இவ்வகையான சிறப்புகளை எல்லாம்பெற்ற அந்தத்திருநதி கோகுவனத்தேயுள்ள தேனுதீர்த்தத்தை யடைந்து ஆங்குவீற்றிருந்தருளும் சிவபெருமானது திருவடிகளைத்துதித்துப் பெருக்குமுள்ள பாலாருகிச் சூதநதியிற்பெயர்ந்தோடிற்று.

அந்நதியில் ஒரு நாள் படிந்தால் திரிகரணங்களாலுஞ் செய்த

பாவம் அத்தனையும் ஒழியப்பெற்றுப் புனிதர்கள் ஆவார்கள். பழ வினையும் நீங்கும், முத்தி வீடு தட்டாது கிடைக்கும், இஃதிவ்வாறுயின் அந்நதியிலாடி எம்பெருமான் இணையடியை அர்ச்சிப்பவர்க்குண்டாகும் பிரயோசனத்தை சொல்லவும் அளவுபடுமோ? அந்தத் திருநதியின் நீர் சிவசத்தி வடிவாக விளங்கும் அதன் கணுள்ள நுண்ணிய மணல்களின் தொகுதி சிவலிங்கமாகும். அதைச் சூழ்ந்துள்ள தருக்கள் கொடிகள் முதலியன தேவகணங்களும் தேவமாதர்களுமாகும். கிளி நாகணவாய்ப் பறவைகள் கூறுவன வேதங்களாகும், என்றால், அந்த நதியின் பெருமையை யார் கூறுவார்.

குகதலங்களில் சிறந்தது திருவாவினன்குடி என்னும் பழநிப் பதியே யாகும். தண்ணிய நதிகளிற் சிறந்தது சண்முக நதியாகும் தேவர்களில் உயர்ந்த தவம் எம்மையாண்டருளும் ஒளிவேற்காளையாகிய முருகக்கடவுளேயாகும் ஆதலால் அத்தலஞ்சென்று தீர்த்தமாடி எங்கள் குலத்தை என்றென்றுங் காத்தருளும் வேதப்பழம் பழமாய் கனிந்து விளங்கும் பழநி ஆண்டவனைத் தியானித்தால் சீவன் முத்தராவர் என்று சொல்லி பின்னுஞ் சொல்லுகிறார்.

கந்தக்கடவுளின் படை வீடாகவும் ஆதார தலங்களாகவும் விளங்குவது:—

1.	மூலாதாரத்தலம்	1.	திருப்பரங்குன்றம்.
2.	சுவாதிட்டானத்தலம்	2.	திருச்செந்தூர்.
3.	மணிபூரகத்தலம்	3.	திருவாவினன்குடி.
4.	அநாகதத்தலம்	4.	திருவேரகம்.
5.	விசுத்தித்தலம்	5.	பழமுதிர்சோலை.
6.	ஆக்கினைத்தலம்	6.	குன்றுதோறாடல்.

இவைகளைக் கொண்டு படை முதல் வீற்றிருப்பதாக வேதங்கள் கூறுகின்றன எங்கும் எதனுளளும் எல்லாமாயும் விளங்குபவர் இவ்வாறிடங்களையும் விட்டு நீங்கார். அதிலும் இத்திருவாவினன்குடியில் பெருமானுர் பலரும் புகழுகின்ற சிவகிரியின் கண் மேலான ஜோதி வடிவாய் ஒருகணமேனும் நீங்காது எழுந்தருளியிருப்பர் என்று கூறி முடித்தார்.

பத்தொன்பதாவது

சிவகிரி சத்திகிரிச் சருக்கம்.

——(:o:)——

வெண்பா.

மாமுதலுஞ் சத்தியுமே மாமலையாய்க் கும்பன்கை
தாமுறுமித் தன்மைதான் சாற்றிடினே—யாமும்
அரனைத் தினந்துதித்தால் ஆயகல மெல்லாம்
வரப்பெறுவம் நெஞ்சேமதி.

*நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவரைப் பார்த்துப் பாவமென்கின்ற வருத்தஞ்செய்யும் பெரிய கிரவுஞ்சமலை பிளக்கும்படி வேல்விடுத்த முருகக்கடவுளின் ஒன்பது பெரும் மலைகளுள் சத்திகிரி சிவகிரி என்னும் இருமலைகளின் சரித்திரத்தையுங்கூறியருளவேண்டுமென்று பிரார்த்தித்துக்கேட்க சூதமுனிவர் சொல்வாராயினர்.

பெரிய தவத்தையுடைய முனிவர்களே! பராசர புத்திரராகிய வியாசமுனிவர் முன்னர் பதினெண்புராணங்களையும் எனக்கு உபதேசித்தகாலத்தில் சிவபெருமான் வடிவத்தையும், சிவசத்தியினது வடிவத்தையுங் கொண்டிருக்கும் இம்மலைகளின் மான்மியத்தை நீ பிறர்க்குச்சொல்லுதல் ஒழிவாயாக அது மிகவும் இரகசியமே! இரகசியமே! என்றுசொல்லினர். அப்பொழுதுயான் அவரைத் தேவரீர் பிறர்க்கு மகிமையைக்கூற வேண்டாம் என்ற மலைகளின் மகத்துவமே தெரியாது வணங்கின் பொன்னுலகுற்றின்பமுறும். முத்திகூடும் என்றால் அம்மலைகளினுடைய மான்மியம் முழுதுந் தங்காதினிறைத்த கேள்வியையுடையவரது பெரும்பயனை யாவர் வரையறுத்துக்கூறுவர் என்றேன், அதற்கு அவர் பழகிப்பதிபிலே கிள்ங.

குகின்ற சிவகிரி சத்திகிரி என்னும் இரண்டு மலைகளையும் தூரத்திருந்து கருத்தொன்றிக்கண்டாலும் பிரதட்சணஞ்செய்தாலும் அதின் சாத்திரத்தைப் பொருள் தெரியாது கேட்டாலும், சொன்னாலும் அம்மலைகளில் வசித்தாலும், முத்தியிற்சேர்ப்பது சரதம்! சரதம்!! என்றனர். இன்னும் உனக்கே இதனைக்கூறினேம் என்று சொல்லினார். அதனை யான் மனத்திற்றெளிந்து அவர் செந்தாமரைப்பாதங்களைத்துதித்து திருவருளையுடைய தெய்வத்தின் உட்கருத்தை இந்தன்மைத்தென்று சிறியேன் அறியுந்தரமுடையேனல்லன்; தேவரீரது கருத்து என்னவோ சொல்லியருள வேண்டுமென்று கேட்டேன், அதற்கு வியாசபகவான் புழுப்போன்ற கேவலனாகிய எனக்குச்சொல்லி யருளினார்; அன்புருவாகிய பெரியவரே இதனைப் பிறர்க்குச் சொல்லமாட்டேனென்று உரைத்தேன். பின்னர் தவஞ்செய்யும் முனிவர்களுக்குக் கூறுதற்கு உத்தரவு பெற்றுக்கொண்டேன், நீங்கள் எல்லோரும் ஐம்பொறிகளையடக்கி, நல்வழியினின்ற தபோதனர் ஆதலின், உங்களுக்குச் சொல்வது புண்ணியமெனச் சந்தேகமறத்தெளிந்து சொல்கின்றேன் என்று சொல்கின்றார். கொடிய சூரபன்மனாகிய பகைவன் அழியவும், விண்ணவர் வாழவும், எமது கருணையங்கடலாகிய சிவபெருமானது நெற்றிக்கண்ணினின்றுந்தோன்றி ஆறு கூறாகி எம்பெருமானின் வரம் பெற்றவர்களாகிய வாயுவும், அக்கினியும் தாங்கிச்சென்றுகங்கையில்விட; அழகியகங்கையானவள் வெப்பமாற்றாது சரவணப்பொய்கையில்விட; அங்கு குழவிகளாய்த்தோன்றி, கார்த்திகைப்பெண்கள் அறுவரது முலைப்பாலுண்டு வளர்ந்து, உமாதேவியாரால் தாலாட்டித்தழுவி யெடுக்க ஒருவுருவுற்று, ஆறு திருமுகங்களும், பன்னிரு திருப்புயங்களும், விளங்கத்தோன்றினார். எமது ஞானமூர்த்தியாகிய குமரக்கடவுள் இவர் பாலராயிருக்கும்பொழுது புரிந்தன திருவிளையாட்டுக்களோ அளவிறந்தன. அதனை ஆங்காங்கு சமயம் வந்துழி நான் எம்மாசானிடத்தில் கேட்டமட்டுஞ்சொல்கின்றேனெனச் சூதமுனிவர் கூறிப் பின்னுங் கூறுகின்றார். கயிலையின் பக்கத்தில் கந்தமலையில் எம் இறைவீற்றிருந்தருளும் தேவர்கள் வந்து தொழுங்காலங்களில்

தாயுந்தந்தையும் சிவபெருமானும் உமாதேவியாரும் வசிக்கும் கைலையிலிருப்பார். இப்படியிருக்கும்பொழுது நாரதர் யாகத்தினின்று தோன்றிய ஆட்டுக்கடா தேவர்கள் அஞ்ச வெளித்தோன்றி அவர்களுக்குத் துன்பஞ்செய்யத் தேவர்கள் மருண்டு ஓடோடி வந்தும் எம்பெருமான் முருகனிடத்திற் சரணம் புகுந்தடைந்து துன்பத்தைச்சொல்ல முருகேசர் நவவீரர்களையனுப்பி அதனைப்பிடித்து வரச்செய்து, அதன்மேல் ஏறி வாகனமாக ஊர்ந்து தேவரைக்காத்துத் தாதையார் கோயிலின் வாயிலில் வீற்றிருந்து திருவிளையாடல்களைச்செய்துகொண்டிருப்பார். இப்படியிருக்கும் நாட்களில் ஒரு நாள் அரிபிரமாதிய தேவர்கள் எந்தை சிவபெருமானாரைத் தெரிசிக்கச் செல்லுகையில் ஏனைய தேவர்கள் எல்லாம் வழியிலிருந்த சுந்தரவேல்தாங்கும் கந்தக்கடவுளை வணங்கி விடைகொண்டு சென்றார்கள்.

பிரமனோ சுந்தரத்தோகையூர் கந்தக்கடவுளைச் சிறுபிள்ளையென நினைத்துத் தான் படைக்குங் கடவுள் என்னும் அகங்காரத்தோடு சென்றான். அஃதறிந்த முற்றுணர் வேத வேதியனாய முருகக்கடவுள் முறுவலித்து, பிரமனை அழைத்தார், அவன் வந்து வணங்கி நின்றான். அவர்க்கு ஓராசனமளித்து இருக்கச்செய்து பிரமனை நோக்கி நீ செய்யும் தொழில் என்ன என்று கேட்டார். அதற்குப் பிரமன் எனக்குப் படைத்தற்றொழிலென்றான். கந்தக்கடவுள் வேதம் அறிவையோவென? அறிவேனென்றான். அவ்வாறாயின் வேதத்தின் முதலெழுத்திற்கு பொருள் சொல்க என்று வேதப்பொருளையான் குகப்பெருமான் கூறினர். அதற்குப்பொருள் சொல்லறியானாய் விழித்தமைகண்டு நான்கு தலைகளிலுங் குட்டிக் காலாற்றள்ளி வேதத்தின் முதலெழுத்தின் பொருளறியா நீ எவ்வாறு படைத்தற்றொழிற்கு உரியனாவாய் என்று கந்த வெற்பில் சிவசிருங்கத்தில் சிறைப்படுத்தித் தானே படைத்தற்றொழிலைச் செய்து வந்தார். இதனை, அரிமுதலிய தேவர்கள் சிவபெருமானிடஞ் சென்று பிரமனுக்கு நேர்ந்ததைப் புகன்று படைத்தற்றொழிலைப்

பாலசுப்பிரமணியக் கடவுளியற்றுவதையுஞ் சொல்லினர், கருணையங்கடலாகிய கருமிடற்றை தன் கணநாதராகிய நந்திதேவரை நோக்கிப் பிரமனை விடுவிக்கும்படிச் சொல்லியனுப்ப, அதுகேட்ட கார்த்திகேயர், "இவ்விடம் விட்டகல்கின்றையோ? நீயும் சிறையில் பிரமனுடன் உறைகின்றையோ" வென வெகுண்டு கேட்க, உய்ந்தேனென அஞ்சி ஓடி அரனிடம் உரைத்தார். அது கேட்டுச் சிவபெருமானர் தாமே வர, வேலாயுதக்கடவுள் எதிர்சென்று வணங்கிப்போற்ற ஆனந்தங்கொண்ட தந்தையார் இளையபிள்ளையைத் தூக்கி மடியில் வைத்து, உச்சிமோந்து, உடலத்தை வந்து (தடவி) பிரமனைச் சிறைவிடுக்கும்படி வேண்டினர். தாதை மொழிப்படியே பிரமனைச் சிறைவிடுக்கக் கட்டளையிட்டருளி நடந்த விடயங்களைத்தெரிவித்து நின்றார் சிறைவிடுக்கப்பட்ட பிரமன் எம்பெருமான் சன்னிதியில் தலைகவிழ்ந்த முகத்துடன் வந்து பெருமானையும் கந்தக்கடவுளையும் வணங்கிப் பேதமையால் யான் கொண்ட அகங்காரம் நீங்கப் பெற்றேன் என்று சொல்லித் துதித்தான்.

சிவபெருமான் முன்போல் நின் படைத்தற்றொழிலை நடத்துகவென விடை தந்தனுப்பிப் பின்கந்தக்கடவுளைத்தழுவி முத்தமிட்டு ஐய! பிரமனைக்கேட்ட அவ்வெழுத்தின் பொருள் நீ சொல்லென, எம சுவாமிநாதன் சுவாமியை நோக்கி அது வெளிப்படையோ இரகசியமோ சொல்வீர்களாகவென வணங்கிக்கேட்க சிவபெருமான் தன் செவியைத்தாழ்த்தி நின்றார். குமரக்கடவுளும் அதன் பொருளை யுரைத்தார். அதுகேட்டு ஆனந்தித்துக் குமரனே! இதன் பொருளை நீ எவ்வாறு அறிந்தாய் எனச் சிவபெருமான் கேட்க, உலகமாதாவாகிய என் தாயாருக்கு உபதேசிக்கும்போது அடியேனும் உணர்ந்தேன் என்று மறுமொழி கூறினர். அதற்குச் சிவபெருமான் எவர்களுக்கும் உயர்ந்ததும், ஒப்புயர்வற்றதும், முதற்பொருளும் எந்தப் பொருளோ அந்தப்பொருள் நீயாகுமென்று கூறித்தேவர்களும் முனிவர்களும் அரிபிரமர்களும் பின்றொடரக்கயிலையை யடைந்தார். குமரக்கடவுள் கந்தமலையிலேயே வீற்றிருந்தார்.

அகத்திய மகாமுனிவர் விரும்பிய மகாமந்திரங்களையும், பிரணவத்தின் உண்மைப் பொருட்டுணிபையுஞ் சிவசிருங்கத்தின் பெருமையையும் சத்திகிரியின் வலிமையையும் உபதேசித்து வெள்ளிமலையின் உச்சியில் தவத்தைச்செய்த அமுதவல்லி, சுந்தரவல்லி என்னும் இருவருக்கும் அருள்செய்து கைலைசென்று அம்மையாருக்கும் சிவபெருமானுக்கும் மத்தியில் தேவர்கள் வணங்க வீற்றிருந்தருளினர்.

பிதாவாகிய சிவபெருமானும் உமாதேவியாரும் ஆஞ்ஞாபிக்க, அவ்வாறே தாருகாசுரனைக் கொன்று, மாயையினைச் செய்கின்ற கிரவுஞ்ச மலையைப் பொடி படுத்தித் திருச்செந்தூர்க்கெழுந்தருளிச் சமுத்திரத்தைக் கடந்து மகேந்திரபுரியையடுத்து மிக்க பலத்தையுடைய அசுரர்களை வேரோடும் அழித்து, சிங்கமுகாசுரனை வதைத்துச் சமுத்திரத்தில் விழுந்த வரபலத்தையுடைய சூரபன்மனாகிய மாயாவடிவத்தைக் கிழித்து, அதில் கோழியாய் எழுந்த ஒரு கூறை கொடியாகப் பிடித்தும் மயிலாய் எழுந்த மற்றொரு கூறை வாகனமாகக் கொண்டும் தேவர்கள் சிறையை நீக்கித் தெற்கேயுள்ள திருப்பரங்குன்றிற் பொருந்திய தெய்வயானையம்மையாரைத் திருமணஞ்செய்து கொண்டு, இந்திரனைச் சுவர்க்கலோகத்திற்குக் குடியாக வைத்துக் கைலாயத்தை அடைந்து சிவபெருமானோடு பழமைபோல் மேவியிருந்தார். பின்னர் சிலகாலஞ் சென்றபின் ஒருநாள் சிவபெருமானை வணங்கும்படி கைலாயமலையின்கண் சென்ற அகத்தியரை, அவ்விடத்திருந்தவர்களுள் அங்கிராமுனிவர் என்பவர் பலவாறு இகழ்ந்து குள்ளன் என்று சொல்லிப் பரிகாசித்தான். அதற்கு அகத்தியர் அவனை நீ அறிவிற் குள்ளன் என்றுக்கோபித்துக் கூறிவிட்டுத் தன் காரியங்களை முடித்துக்கொண்டு அவ்விடம் விட்டு நீங்கி வேறோரிடத்திலிருந்து சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தார். அப்பொழுது மணக்கோலத்தையுடைய சிவபெருமான் இடபாரூடராய் காட்சி தந்து யாது வேண்டினை வேண்டியவற்றைக்கேள் கொடுப்பேமெனச் சொல்ல,

கும்பமுனிவர் அடிகளே! தேவரீரும் எமது தாயாராகிய உமாபிராட்டியாரும் தேவர்கள் வணங்கும்படி இரண்டு மலையாக ஒன்று சேர்ந்து நிற்றல் எவ்விடத்திருக்கிறது அதனைத் திருவாய் மலர்ந்தருள வேண்டும் புழுத்த நாயினுங் கடையேனாகிய யான் பூசித்தற்கும் அனுமதி செய்யவேண்டும் என்று கைகுவித்து வணங்கிக் கேட்க சிவபெருமான் சொல்கின்றார், முனிவனே! கந்தமலையினிடத்தில் காணப்படும் கொடிமுடிகள் சிவம் சத்தி என்னும் அருமையான நல்ல பெயரைப்பெற்ற சிகரங்கள் இரண்டாகி யாமும் உமையும் இருப்பேம், அவ்விடத்துத் தேவர்களும் மற்றையரும் வழிபட்டு வணங்கி வருவார்கள்என்று கூறியருளினார். உடனே கலை முனிவர் அவ்விடஞ்சென்று தரிசித்து வணங்கி பரவசப்பட்டுச் சத்தியுஞ் சிவமும் மலையுருவாய் நிற்கும் திருவிளையாட்டைச் நினைந்து ஆனந்தக் கண்ணீர் ஆறுகப்பெருகப் போற்றிப் பணிந்தார். அவ்விடத்தே வேலைத்தாங்கிய வேலாயுதக்கடவுள் உலவுவதையுங் கண்டார். தேவர்களும் முனிவர்களும் பக்கத்திற் றவஞ்செய்வதையுங் கண்டார். கண்டு வுடன் நீங்காப்பேரன்புடையவராகவும் பெருமானையும் அம்மையாரையும் துதித்துப்போற்ற மூவரும் பின்னும் ஒரு முறை காட்சிதந்தருளினர். அது கண்டு கடலுண்ட குறுமுனிவர், கூத்தாடினார், வேதகீதங்களைப் பாடினார் பல பல சொல்லித் துதித்து நிற்கும் தமிழ்முனியைத் தனிப்பெருமான் பார்த்து நீ செய்த பூசைக்கு மனமுவந்தோம் வேண்டும் வரங்கள் கொடுப்போம் சொல்லக்கடவாய் என, ஐயனே! இச்சிகரங்கள் இரண்டும் தென்றிசையிற் சேர்த்துப் பூசை செய்யும் வரத்தைத் தந்தருள்கவென்று வேண்டினர். அப்படியே தந்தோமென்று கூறித் திருவுருக்கரந்தருளினார் குமரக்கடவுள் போதித்த உண்மைப் பொருளைத் தெரிந்த அகத்திய முனிவர் ஆகாயமளவாக வளரும்படி நீட்டிய கைகளினிடத்தே அச்சிருங்கங்கள் இரண்டும் வந்து சேர்ந்தன. தவத்தின் பெருமையைப் பார்க்கினும் வலியதாய் வலி வேறுமொன்றுண்டோ? அகத்திய முனிவர் கரங்களுக்கு செந்தாமரைப்போதையும் கருங்குவளை மலரையும் ஒத்திருந்தது.

இரண்டு கிரிகளையும் ஏந்திக்கொண்டு கந்தமலையினின்றும் திருக்கேதாரத்தின் வழியாகச்சென்று சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற பூர்ச்சவனஞ்சென்று அவ்விடத்தே வடகிழக்குத்திக்கில் மலையை வைத்துப்பூசை செய்தார்.

சிவபெருமான் அருட்செயலோ ஏதோ அவ்விடத்தே இரண்டு மலையும் அவ்விடத்தே இருக்குமாறு வைத்துவிட்டு காசி சென்று பெருமானை வணங்கித் தன்பொதியமலை போய்ச் சேர்ந்தார், என்று கூறிச்சூதமுனிவர் முனிவர்களே! இன்னுங்கேண்மின் என்று பின்னுஞ்சொல்லுகின்றார்.

——:(o):——

இருபதாவது

மலைகள் பழநியடைந்த சருக்கம்.

——:(o):——

வெண்பா.

சத்தியுமை தன்னோர் சதாசிவமாம் வெற்புகளை
பத்தி பெறுமிடும்பன், பண்பினொடு—முத்திதரு
துங்க வராககிரி தொல்பழநியிற் கொண்டுவந்த
புங்கச் செயலை நிதம் போற்று.

பெரிய சமுத்திரத்தின் நடுவிலே நகர் உண்டாக்கி அதிலிருந்து கொண்டு கொடுந்தொழிலைச்செய்து வந்த சூரபன்மன் முதலிய அசுரர்களுக்கு எப்போதும் ஆயுத வித்தையைப் பழக்குகின்ற வலிய பெருமை கொண்ட குருவாகிய இடும்பன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் அரச நீதியிற் குறைபாதவன் குமாரக்கடவுள் சூரனுயிரை அழித்த நாளில் பயந்து அவ்விடம் விட்டு நீங்கித்தன் மனைவியோடும் வேறோர் உருவங்கொண்டு காட்டுக்குச் சென்றான்.

அங்கு தானுந் தன்மனைவியுமாக அரியதவங்களைச்செய்து பொதியமலைச்சாரலில் அங்குள்ள முனிவர்களோடு வசித்துக்கொண்டிருந்தான். அச்சமயத்தில் முனிவர் கூட்டங்கள் சூழ அகத்தியமுனிவர் பரிசுத்தமான சிவசத்தி மலைகளிரண்டினுங்கொண்டுவருமேவினென்று குறும்பலாவுருவத்தைக்கொண்டு சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றாலத்தின் ஓரிடத்தை அடைந்தார். அப்பொழுது இடும்பாசுரன் என்பவன் கண்டு வணங்கினான். தன் பழய முன்னுருவம் தோன்றும்படி வணங்கிய அவனை நோக்கி, அக்கினிபோன்ற சிவந்த கண்களையுடைய திருதியே! நீ இப்பூமியினிடத்தே வந்ததற்குக்காரணம் யாது? கூறுவாயாகவெனச் சொல்கின்றான். முனிவரே! கொடிய சூரபன்மன் முதலிய அசுரர்கள் யாவருக்கும் அத்திர சத்திர வித்தைகளைப் பழக்குவேன், எனதுபெயர் இடும்பன் சூரபன்மனது புத்திரனாகிய இரணியன் என்பவன் போர் செய்து வீரவாகு தேவருக்கு முன்னிற்க முடியாமல் தன்னைப் பெற்றோர்களுக்குப் பிதிர்க்கடன் செய்ய நினைத்துக் கருங்கடலிற்போய் ஒளித்தான். நாங்கள் செய்யுந்தொழில் வேறு இல்லாமல் காட்டில் வந்தோம். குமரக்கடவுளின் வேலாயுதத்தால் தாருகன் சிங்கமுகன் முதலிய அசுரர்கள் யாவரும் மேலுலகத்தை அடைந்தனர். சூரபன்மன் கோழிக்கொடியாகவும் மயில்வாகனமாகவும் அவரையே அடைந்தான். கொடிபேய் இறவாது உழன்றுகொண்டிருக்கின்றேன் அடியேனைத் தேவரீரே காக்கவேண்டுமென்று பலவாறு துதித்து வேண்ட; இடும்பாசூரன் மனம் பரிசுத்தமுடையதென்பதை அகத்திய முனிவர் அறிந்து உன் கொடிய துன்பமெலாம் போக்குவேன் அஞ்சலென அபயங்கொடுத்து நீ வடதிசையிற்சென்று பூர்ச்சவனத்தை அடைந்து தேவர்கள் அதிக்குஞ் சத்தியுஞ் சிவமும் பொருந்திய மலைச்சிகரங்கள் இரண்டையும் இவ்விடத்துக்குக்கொண்டுவந்தால், இம்மை மறுமை வீடெனும் இம்மூன்றும் வருமென்று சொல்லி, அதன் பெருமைகளையும் விருத்தாந்தங்களையும் தான் அவ்விடத்து வைத்திருந்தவுள்ள எல்லாம் முடியக்கூறி அங்குசெல்லுதற்கு வழியுஞ்சொல்லுகின்றார். இவ்விடம் விட்டுப்புறப்பட்டுப்

பொதியமலைச்சாரலிலுள்ள பிரமமலையை அடைந்து அங்குள்ள சுப்பிரமணியக்கடவுளைத் துதித்துக்கொண்டு அதன் வடமேற்குத் திசையில் சென்று அங்குள்ள பசுமலையில் தங்கி அங்குள்ள அதிசயங்களைப்பார்த்துக்கொண்டு அங்கிருந்து வராகமலையை அடைந்து அங்கிருந்து குடகநாட்டையடைந்துகொங்குமலையையுடைய குடகமலையின் சாரல்வழியாய் நடந்து சென்று சுப்பிரமண்யம் என்னும் தலத்தையடைந்து அங்குள்ள சிவபெருமானையும் முருகக்கடவுளையும் வணங்கி அங்கிருந்து அரியும்தாமு மோருருவு கொண்டிருக்கின்ற சிவபெருமானின் தலமாகிய சங்கரநாராயணர் தலத்திற் சென்று அவரை வணங்கிக்கொண்டு ஈச்சுவரியையும் ஈச்சுவரனையும் வழிபட்டு வணங்கிய கொல்லாபுரியை அடைந்து, அங்கிருந்துமலைகளையெல்லாங் கடந்து, அதற்கப்பாலுள்ள நெருப்புக்காடுகளும் காளிவசிக்கும் இடங்களையும், விட்டுணு வீற்றிருக்கும் இடங்களையுங் கடந்து, பலநாடு நகரங்களை எல்லாங்கடந்து, காசியை அடைந்து, அங்கிருந்து ஆறுமாதம் காசி விசுவநாதப்பெருமானை அர்ச்சித்து, அதைவிட்டு மலை, காடு, நதி, நகர் முதலிய கடந்து திருக்கேதார மலையைச் சென்று வணங்கி அவ்விடத்திற்கு வடகீழ்த்திசையில் ஒற்றைக்காலையுடைய மனிதக்கூட்டங்கள் இருக்கின்ற இடத்தையும் மற்றைய மலைகளையும் வனங்களையும் விட்டு நீங்கிப்பூர்ச்சவனம் சென்று அங்குள்ள இலிங்கத்தை வணங்கிக்கொண்டு அம்மலைகள் இரண்டும் இருக்கும் இடத்தை அறிந்து அவ்விரண்டு பழயமலைகளைக் கொண்டு வந்து இவ்விடத்திலிருத்தக் கடவாய் என்று இன்னும் வேண்டிய விஷயங்களைக்கூறி பிரணவமந்திரத்தையும் உபதேசித்து அனுப்பினார். அவனும் அவ்வாறே சென்று சிவலிங்கம் இன்பம் பொருந்த இருந்த தலத்தை அடைந்து பூசித்து மனம் பரிசுத்தமுடையவனானான். முனிவர்கள் துதிக்கும் சிவசக்தி மலைகளைக்கண்டான். கீழே விழுந்து வணங்கினான். அகத்திய முனிவரின் திருவருளால் தனக்குண்டான பேறுகளை நினைந்து நினைந்து ஆனந்தித்துத்தானுந் தன்மனைவியுமாகப் பூசிட்டருச்சித்து ஒரு

வருடம்வரை அவ்விடத்தே இருந்து பஞ்சாக்கிரத்தைத் தன்னுள்ளத்திற் பதித்து வைத்து அகத்தியர் மொழிப்படி தவஞ்செய்தான். அப்பொழுது புயதண்டமென்று சொல்லும்படியான பிரமதண்டும் திக்குகடோறுமுள்ள பாம்புகள் கயிற்றுக்கூட்டங்களாகவும் பக்கத்தில்வர ஆச்சரியமுற்று மேகம்போல எழுந்து கைகுவித்துவணங்கி, இருமலைகளினும் நெருங்கிய பாம்புக்கூட்டங்களை உறிபோலப்பிணித்து புயதண்டுடன் கூட்டி அகத்தியர் அருளிய மூல மந்திரத்தை யுச்சரித்து ஊன்றி எழுந்து பிரமதண்டத்தைத்தோளில் வைத்துக்கொண்டு கடலுண்ட முனிவர் உபதேசித்த திருவுருவத்தை மனத்துள் நினைத்து எழுந்தான் மலைகள் இரண்டும் மேல் எழுந்தன அதை எந்திக்கொண்டு நீலரத்தினத்தை ஒருதட்டிலும் செம்மணியை ஒரு தட்டிலும் வைத்து நிறுக்கும் ஒருவணிகன் போல விளங்கினன். திரும்பும்போது திருவருட்செயலால் வந்த வழியை மறந்து விந்தமலை வழியாகச் சென்று காளத்தி, திருவண்ணாமலை விருத்தாசலம், முதலிய கடந்து புட்பமலையைச் சார்தலும் வேட்டையாடவரும் உருவோடு எம்பெருமான் சுவாமிநாதன் நிற்க, இடும்பன் குருபரனை இவ்வுருவோடு நிற்கின்றானென்று சந்தேகித்து, உன்குலம் யாது, நீ தனியே வந்ததற்குக்காரணம் யாது என்று கேட்டனன். அதற்கு அவர் யாம் இவ்வுலகத்தை ஆள்கின்ற அரசனது குமாரன் வேட்டையாடநினைத்துத் தனித்து வந்தேன். நீ யார்? மலைகளை எடுத்துக்கொண்டு எதிரில் வருகின்றாய், இராக்கதனே? சொல் என்றுகேட்டார். அப்பொழுது இடும்பன் தான் அகஸ்தியர் சிஷ்யன் என்றும் தான் வந்த வரலாறு முதலியவற்றைச்சவிஸ்தாரமாகக்கூறி வழிமயங்கினமையைத் தெரிவித்து சென்னெறி கேட்டு நின்றான்.

எமது பெருமான் குமாரக்கடவுள் இவ்வழியாய்ச்சென்று அழகிய வராகமலையை அடைந்து அந்தவழியாகப் பொதியமலைபோக என்றருளினன். இடும்பன் தனக்கு வழியுரைத்தமையால் பேரருளுடையவன் என நினைத்து புகழ்ந்துகொண்டு அவ்வழியேசென்று

வராகமலைக்கு வடபக்கத்துள்ள திருவாவினன்குடி அடைதலும் உடல் தளர்ந்து தாகமும் பசியும் வருத்த புயவலிமை குறைந்து இருமலைகளின் சுமையைக்கீழே நிலத்தினிடை வைத்தான். எம்பரநாதன் வேலாயுதக்கடவுளின் பெருமையை யார் அறிவார்? மேல் செய்வதின்னது என்றுதோற்றாது அருகிலுள்ள காட்டிலிருக்கும் வாமதேவ முனிவர் ஆச்சிரமஞ்சேர்ந்து இடும்பி கொணர்ந்த கனி முதலியவற்றைப்புசித்துக்களையாறி சிவகிரி சத்திகிரி இவற்றின் பக்கத்திலுள்ள நீண்ட நிலத்தில் தனது இருகைகளாலும் பள்ளத்தை விரைவாகத்தோண்டி யூறிய நன்னீரை உண்டு மலைகளையெடுக்க முயன்றான் புயங்கள் முறிந்தன, பிடர்கள் நெரிந்தன, கால்களொடிந்தன, விழிகள் பிதுங்கின, இதுகண்டு இடும்பன் இஃதென்ன அதிசயமாயிருக்கிறது நம்பெருமையும் வலியும் அழிந்ததே என்று துன்பங்கொண்டு நடுக்கமுற்றான். அகத்திய மகாமுனிவர் உபதேசித்தருளிய மந்திரங்களும் மறந்தனமே. இஃதென்னேவென்று மனம்புழுங்கிக்கோபித்தான். பின் இதன் காரணம் அறியவேண்டி சிவகிரிச்சிகரத்தின்மேல் ஏறி நாலாபக்கமும் பார்க்கவே அம்மலையில் ஒருபக்கத்தில் குராமரத்தின்கீழ் குருபரன் குழந்தையாய் நிற்பதைக்கண்டான். ஐயோ பாவம் இன்னார் என அறியாதவனாய் மாயைபயில்வல்ல இயக்கனெனத்தீர்மானித்து இவன் வலியறிவமென்றுகிட்டினன் பிடரியிலே தொங்குங்குடுமியும், அருட்கடல் ததும்புகின்ற விழிகளும் அழகு ஒழுகுகின்ற திருமுகங்களும், சிறந்த உபவீதமும், மார்பும், கையினிடத்து விளங்குந் தெண்டாயுதமும் விளங்க நீண்ட கோவணவுடையுடனும் நின்றதைப் பார்த்தான் எம்பெருமான் பழநி ஆண்டவன் இவன் வலியைக்கெடுத்து அருள் செய்ய விரும்பினர் இடும்பன் அகத்தியர் சொல்லிய ஏவலிற்பிழைத்தேனே இனி உயிர் வைத்திரேனென்று, அவரை நோக்கி, நீ யாவன்? வழிதவறி வந்தனையோ? தனியே நிற்பானேன் என்று கேட்க ஒன்றுங்கூறாமல் நின்று நகைத்தனர் வீரனாகிய இடும்பாசூரன் மனங்கொதித்து

சிறியனே நீபுன்முறுவல் செய்வதற்குக்காரணம் என்ன? இம்மலையை விட்டுச்செல் நான் அசுரன் என்றான். அதற்கு எம்பால சுப்பிரமணியக்கடவுள் கூறுகின்றார். அசுரனே! நீ கொண்டுவந்த இம்மலைகள் நம்முடைய இருப்பிடமாகும் உனக்கு வலிமையிருந்தாற்கொண்டுபோ என்றருளினார். இதுகேட்ட இடும்பன் சிரித்து மைந்தனே! நீ வஞ்சனையிற் பெரியவன் என்பது கண்டேன், நான் அதற்குச்சிறிதும் அஞ்சேன் விட்டுனை சிவபெருமானுக்கிய கும்பமுனியின் அடியன் என்று இடியைப்போலக்கூறிக் கோபித்தான். அதற்கு இளையராகத்தோன்றிய இறைக்கு ஓம் பொருளுரைத்த சுப்பிரமணியக்கடவுள் சட்டை செய்யாது நிற்க இடும்பன் சினந்து சிறிப்பற்கடித்து உதடு துடித்து கையைப்பிசைந்துகொண்டு இன்னே கொல்வேனென பெருமான்மேற்பாய்ந்து மலைமேற்பிணமாய்க்கிடந்தான். எப்படியிறந்தான் என்பதை எவரும் அறியார். அங்கிருந்த பிரமதண்டமும் பாம்புகளும் இதனை அகத்திய முனிவர்க்கு அறிவித்தன என்று கூறிய சூதமுனிவர் இடும்பாசுரனுக்கு அருள்செய்தமையையும் கூறுகின்றார்.

வாமதேவர் முன் ஆச்சிரமத்திலிருந்த அவன் மனைவி தன் புருஷன் இறந்ததை ஓசையாலறிந்து ஓடி அழுது புரண்டு மயங்கிச் சிறிது தெளிர்ந்து பிரலாபித்தாள். அப்பொழுது ஆகாயத்தினின்றும்தேவகீதங்களும் முரசவாத்திய மும்முழங்க வேலாயுதக்கடவுள் கோடி சூரியப்பிரகாசராய்க் காட்சி கொடுத்தருளினார். பெருமான் எழுந்தருளக்கண்ட இடும்பி பலவாறு ஆனந்தக்கண்ணீர் மல்க நின்று வணங்கி மாங்கல்யப்பிச்சை கொடுத்தருளவேண்டுமென்று இரந்து வேண்டினள். எம்பெருமானாகிய குமரக்கடவுள் திருவருள்செய்ய இடும்பன் தூங்கி எழுந்தவன்போல் உயிர்பெற்று எழுந்தனன். தேவர் போன்றத் திருக்கோலங் காட்டியருளும் குமரக்கடவுளைப் பரனே எல்லாத் தத்துவங்களுக்கும் மேலாயிருப்பவனே. சுத்தர்தஞ் சித்தமிசைக் குடிகொண்டிருக்கும் சுவாமிநாத! என் பிழைபொறுத்தருள்வேண்டுமென்று வேண்டிக்கொள்ளச

சுவாமியப்பர் மனமுவந்து உனக்குவேண்டும் வரங்கேளென ஐயனே ஆதிமூர்த்தி! இம்மலையிலேயே தமியேனிருந்து நின்றிருவடிக்குக் குற்றேவல் செய்யும் வரம் வேண்டுமென்று தாழ்ந்து கேட்க அவ்வாறே அவனுக்கருளி, எம்பெருமான் கோயில் புகுந்தார். இடும்பன் பேரானந்தங்கொண்டு சென்று அகத்திய மகா முனிவரைத் தொழுதான். அவர் அதிக சந்தோஷங்கொண்டு அவனும் மார்க்கண்ட மலையைச் சார்ந்து சுப்பிரமணியக் கடவுளைத் துதித்துத் சத்திகிரி சிவகிரிகளையடைந்து சிவபெருமானையும் உமாதேவியாரையும் பூசை செய்து பின்பு இடும்பாசுரனைப்பார்த்துக்கூறி வேலாயுதக்கடவுள் ஏவிய ஏவல்களை இம்மலையிலிருந்துசெய்வாய் அதனால்முத்தியடைவாய் என்று கூறித்தம்மிடஞ்சென்றார். இடும்பனும் அவ்வாறே செய்து முத்திப்பேறடைந்தான் என்று சூதமுனிவர் கூறினர்.

—:(o):—

இருபத்தொன்றாவது

அகத்தியச் சருக்கம்.

வெண்பா

ஓதுந் தமிழ்மறையை உற்ற குறுமுனிக்குக்
காதுகொள வேயுரைத்த கந்தனருள் —போதுகொடு
நெஞ்சே தினந்துதித்தால் நேரான வாழ்வுமிகும்
பஞ்சாய் வினைபறக்கும் பார்.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளே என்று சூதமுனிவர் சொல்கின்றார்.

ஆகாயத்தை அளாவி நிற்கின்ற சிவகிரியின் பக்கத்திலே தென்மேற்குத்திசையில் வாமதேவமுனிவருடைய ஆச்சிரமமொன்றுளது. அங்குவேதவொலியும் தாபத்ர்தேவமாதர்கள் முதலியவர்கள் நீராடும் ஒலியும், சிவபெருமானைத் துதிக்குந் துதியொலியும் உடையது. அவன் கமண்டலம், யோகதண்டம், முதலியவற்றைக் கையிற்கொண்ட சடையையுடைய முனிவர்கள் சூழ்ந்து யாகங்களியற்றிக்கொண்டிருப்பார்கள். அந்தப்பெரியவனத்தில் மாணாக்கர்களான நல்லொழுக்கம் உடையவரும் மனக்களங்கமில்லாத கேள்வி அறிவினையுடையவருமான ஒப்பில்லாத இருடிகள்சேர்ந்து தம்மைச் சூழ்ந்துவரத் திரிபதார்த்தமுணர்ந்த அக...யமகா முனிவர் அங்கு வந்தார் அப்போது வாமதேவ முனிவர் எதிரே சென்று சோடசோபசாரங்கள் செய்து உயர்ந்த ஆசனத்திருத்தி அருக்கியம் முதலாக மிக்கவுபசாரங்களைச் செய்து முகமன் பலகூறினர்.

மேலும் "இந்தப்பெரிய பூமியினிடத்தில் சிவபெருமானும் உமை அம்மையாருமுவந்து வடிவான மலைகள் இரண்டையும் எங்கட்கு அளித்தருளினீர் சுப்பிரமணியக்கடவுளையும் வணங்கும்படி செய்தருளினீர் யாங்கள் எல்லோரும் உய்ந்தோம் என்று கூறிக் கொண்டிருக்குஞ்சமயத்தில் மகதியாழ்பாடும் முனிசிரேட்டராகிய நாரதர் எழுந்து உண்மையறிவுடைய மெய்ஞ்ஞானிகளே! ஒருவார்த்தையைக்கேட்பீராக நீவிர் தெய்வத் தன்மையையுடைய முனிவர்கள் உங்களுட் சிறந்த முனிவன் யாவன்? வைதிக சைவநெறி நின்று தவஞ்செய்தவன் எவன்? இருவினை ஒப்புவந்தகாலத்தில் சத்திநிபாதங் கைகூடப் பெற்றவன் எவன்? உபநிடதமும் அறிதற்கரிய உண்மைப்பொருளை அடைந்தவன் எவன்? அருள்வடிவம் விளங்க இலங்குகின்றவன் எவன்? அந்நலம் உள்ளவனே நம் முதல்வனாகும் அவனே கண்டிக்கப்படாத நிறைவுடைத்தாய் விகாரம், வாக்கு என்னும் இவை கடந்த உண்மைப்பொருளாகி விளங்குகின்ற தனிப்பொருளாகிய சிவமும் அவனேயாகும் என்று கூறி நான் சொல்லுந்துதிகளும் அவனிடத்தடைக அடியேற்குப்பிறப்பில்லாத

முத்திவந்து கூடுக என்று சொல்லி பொன்னுலகுற்றனன். இவ்வாறு சொல்லி நாரதமுனிவர் சென்றபின் ஏனைய முனிவர்களும் வாமதேவ முனிவரும் முனிவர் கூட்டங்களும சிறப்புடையோன் அகத்திய முனிவரேயாகும் அவரிடத்தே இப்போது கூறிய சொற்கள் சென்றமையும் என்று சொல்லுகையில் வேதவுணர்ச்சி மிக்கவராகிய வியாச முனிவர் கோபித்து ஒருவார்த்தை சொல்கின்றார். முனிவர்களே! நீவிர் யாதுரைத்தீர், இவ்வுலகில் அகத்திய முனிவனிடத்து மாத்திரந்துதியடைதல் எவ்வாறு இதுமுறை பிறழ்ந்த உரையன்றி உபசார வார்த்தையும் ஆகும், சொல்லின் கலைகளுக்கெல்லாந் தலைவியாகிய சரச்சுவதியும் தாயினிடத்தே துதிகள் அடையும் அவளே முத்தியையுங் கொடுப்பள் என்றிவ்வாறு வியாச முனிவர் உரைக்க, அகத்திய முனிவர் கூறுவார். முனிவனே! நீ கூறிய சரச்சுவதியினிடத்துச் சொல்லப்பட்ட நான்குவேதங்களும பிறசாத்திரங்களும் ஆன்மாக்களாகிய நமது காரணமாகப் பரமசிவன் முன்னர்க்காலத்தில் தொகுத்துச் செய்த அந்த நூல்களுள் ஒரணுவளவாவது உண்டோ, நீ கற்றுள்ளாய் அல்லவா, நாவழுவி மனவைரத்தைக் கூறினை அவ்வாறுரைத்தல் குற்றமன்றோ, என்று கூறி அகஸ்தியர்க்கு நான் படித்தது மிக அற்பமாக இருந்தாலும் என்னால் சொல்லப்பட்ட வடமொழிக்கணுள்ள நூல்களை அழகாக நீயும் அறிந்து உயர்ந்தனை அல்லாது வேறு யாதேனும் உண்டோ, என்று தன் சிறப்பை எடுத்து வியாசமுனிவர் சொல்ல அகத்தியர் விரைவில் மௌனங்கொண்டு அச்சபையை விட்டு நீங்கிக் கோபத்துடன் சென்றார். வாமதேவர் முதலாகிய முனிவர்கள் அகத்தியரோ• சிவபெருமானுருவமாகும் வியாசமுனிவரோ திருமாலின் வடிவமாகும் நாமென்சொல்வது வென்று சும்மா இருந்தனர். சந்தனசல முனிவராகிய அகத்தியர் சிவகிரியின் ஒரு பக்கத்தேயிருந்து சந்திரசேகரக்கடவுள் வரமளிக்குமாறு இன்னிலவுலகம் வியக்கும்படி தவஞ்செய்திருந்தனர் அப்பொழுது சிவபெருமான் பார்வதி சமேதராய் இடபவாகனத்தின்கண் எழுந்தருளி வந்து முனிவ

னது மனத்திலுள்ளதைச்சொல்வாயாகவென்று திருவாய் மலர்ந்தருளி வியாச முனிவர் சொல்லிய வரலாற்றையும் உடனே நடந்த வரலாற்றையும் துதித்துச்சொல்ல, அதுகேட்டு இறைவன் முனிவனே, வடக்குப்பக்கத்தில் மூன்றுகுரோசதூரம் செல்லுங்காலத்தில் வனமுந்தீர்த்தமும் விளங்கும் பழய மதில் சூழ்ந்த துர்காபுரி என்னும் பெரிய ஊரிற்போவாயாக என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தருளினார். அவ்வாறே அகத்திய முனிவரும் அத்தலஞ்சென்றார் அவ்விடத்தில் மூலலிங்கம் ஒன்றிருந்தது அவ்விலிங்கம் விட்டுணுவும், பிரமாவும் நாங்கள் அடிமை காத்தருளவேண்டுமென்று வணங்கப்பெற்றது இன்னும் அங்கே முற்கலன என்னும் பிராமணனும அவன் மனைவி இந்திரை என்பவளும் தமக்குக் குழந்தை இல்லாமையால் கீரிப்பிள்ளையொன்றை வளர்த்துப் பின்பு பிள்ளை ஒன்றையும் பெற்று வளர்த்து வரும் நாட்களில் ஒருநாள் நீர் கொண்டுவரச்சென்ற காலத்தில் ஒரு நாகப்பாம்பு வந்து குழந்தையைக்கடிக்கவருகையில் கீரிப்பிள்ளை அந்நாகத்தைத் துண்டு துண்டாகக்கடித்துத்துண்டித்து இவ்வல்லமையை வளர்த்தாளுக்குக் காட்டுவதற்காக நீர்கொள்ளப்போனவள் வரும் வழியிற்செல்கையில் நகுலத்தின் (கீரி) வாயில் உதிரம் படிந்திருந்தமையால் குழந்தையைக்கடித்துக்கொன்றுவிட்டுக் கீரிப்பிள்ளை வருவதாக நினைத்தந் சிறிதுயோசியாது அவசரப்பட்டு நீர்க்குடத்தை அக்கீரியின் மேற்போட்டுக்கொன்று வீடுபோய்ச்சேர்ந்து நாகம் இறந்துகிடப்பதையுங்குழந்தை தூங்குவதையும் கண்டு அந்தோ, கெட்டேன் நன்மை செய்த பிள்ளைபோல வளர்த்த கீரிப்பிள்ளையையுங் கொன்றேனே என்று வருந்திப்புலம்பிக் கணவன் வருமுன்னே கீரியைக்கொன்ற பாவத்திற்குத்தன்னை மாய்த்துக்கொள்ளவேண்டுமென்று நினைத்துக்கையில் விடத்தை எடுத்துக்கொண்டு கருத்தில் கந்தக்கடவுளைத் தியானித்து ஓ குகப்பெருமானே! கொடியாளாகிய யான்பெண்ணாதிவென்னும பேதமையுடையேன் ஆதலால் வந்த பழியை நீக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்து விடத்தை வாயிற் போட்டுக்கொண்ட

னன். அப்பொழுது எம்பெருமான் குமரக்கடவுள் வள்ளிதேவானை
இருமருங்கும் விளங்கத்தோன்றி மாதே! அஞ்சற்க என்றுஅபயங்
கொடுத்தருளினர். மேலும் கொற்றவேற்குமரக்கடவுள் கோதை
யை நோக்கி பூங்கொடி நேர்பூவையே! இக்கீரிப்பிள்ளை முற்பிறப்
பிற் பெற்ற தாயாகும் அப்பொழுது தன் மகன் என்று எண்ணாது
உன்னைக்கொன்றாள் அவளே யிப்போது கீரியாயினள். ஆதலால்
சிறிது மனதில் யோசனையின்றிக்கொன்றனை அதல்லாமலஇறந்த அ
ச்சர்ப்பம் வீரத்தையுடைய சூரியசேனன் புத்திரனாகும். அவன் பெ
யர் அனுவிரன் இவன் தன் தந்தையைக் கொல்லுமபடிக் கோபித்
தெழுந்து தன்னுயிரை விடுத்தலால் நாகமாகப்பிறந்தான், கீரி,பா
ம்பு, என்னும் இரண்டும் உன்னிடத்தில் வந்து தவத்தால் இறந்த
மையாற்சுவர்க்கலோகத்தை அடைந்தன. ஆகையால் நீதுன்பத்தை
விடக்கடவாய் என்று சொல்லி பெரும் வரங்களுந் தந்துகரந்தனர்.
பின் இந்திரையும் அவன் புத்திரனும் சண்முக தீர்த்தத்தில் மூழ்
கிப்பூசித்து எவ்வகைச்செல்வமும் பெற்று எல்லாப்போகங்களையும்
அனுபவித்து மேலான முத்தி அடைந்தனர். அவர்கள் பூசித்த
இலிங்கத்திற்குங் குலேசன் எனத்திருநாமம் உண்டாயிற்று. இவ்
விலிங்கத்தை பூமாதேவியானவள் காமதேனுவுருவத்தை எடுத்துப்
பூசித்து பூமியைப்பெற்றுயர்வடைந்தனள், பாதாளலோகத்துள்ள
ஒருசர்ப்பமானது விசுவாமித்திர சாபம நீங்கப்பெற்றுத்துதித்துப்
பூசித்ததினால் நாகீசன் என்றும் பெயர் விளங்கிற்று. இத்தகைய
பெருமை வாய்ந்த சிவலிங்கத்தை அகஸ்திய முனிவர் ஐந்திரவுகழி
யுமட்டும் பூசிக்க நாகேசப்பெருமான் நல்லஅழகு விளங்குங்காட்
சியைக் கொடுத்து அவர் காதில் மூலமந்திரத்தையும் அதற்கு முன்
னர் நிற்கின்ற மாயாபீஜமந்திரத்தையும் உபதேசித்து இனியதமிழ்
மொழி இதுவேயாகுப அதனையொன்றும் விடாது நமது குமாரன்
உனக்குஉபதேசிப்பான் நீசிவகிரியை அடைதிஎன்றுகூறி இன்னும்
வடக்குத்திசைக்கண்ணுள்ள ஆதிகேசவம், பராசர் ஆச்சிரமம் என
னும் இவைகளை அடைந்து ஒருவருடங்காறும் பூசைசெய்யின் மிக

உசிதமாகும் என்று நாகேசப்பெருமான் கூறியருளித் தந்திருவுரு கரந்து கூறியுட்புகுந்தார். பிரமற்குத்தமிழ்வேதம் ஓதிய தன்மையால் சிவபெருமானுக்கு வாகீசர் என்றும்பெயர் ஏற்பட்டது. பின்னர் அகத்திய முனிவர் ஆதிகேசம் என்னும் தலத்தை அடைந்து தாம்பிரவர்ணி ஆற்றுத்துறையில அரசங்கீழலில் சிவலிங்கந்தாபித்துப்பூசனை செய்தபோது விட்டுணுவை ஒருபாகத்திலுடைய ஒளி வடிவாகிய சிவபெருமான் காட்சிதந்தருள வணங்கிக்குற்றமில்லாத பராசர் ஆச்சிரமத்தை அடைந்தார். இவ்வாச்சிரமத்தில் சிவபெருமான் நாகவந்த காரணத்தையும் சொல்கின்றேன் கேளுங்கள் என றுசொல்லிச் சூதர் சொல்லத் தொடங்கினர். முதலயுகத்தில் பாசபந்தமில்லாத பராசரமுனிவர் கங்கை ஆற்றங்கரையில் எமது சிவபெருமானை மனதிற்றியானித்தார். நான்கு வருடஞ்சென்றதின்பின் விசுவலிங்கப்பெருமானின் அருள்பெற்று அவ்விடம் விட்டு நீங்கி கோங்குவனத்திலுள்ள முல்லைவனத்தை அடைந்து பரிசுத்தமாகிய ஓரிடத்தில் சிவலிங்கம் இருந்த பெட்டியையும் கமண்டலத்தையும் தண்டினையும் வைத்து நித்திய கடன்களைச்செய்து வணக்கஞ்செய்வதற்கு வருவதற்குள் தான் அங்குவைத்த பேழை கமண்டலம் தண்டு என்பவை மூன்றும் இலிங்கமும் கிணறும்பலாசமரமும் ஆயின. அதுகண்டு அதிசயங்கொண்டார். அங்குநெருங்கிய முனிவர்களைப்பார்த்து பராசர் இவ்விடத்தில் வைத்த பெட்டகம் மூலலிங்கமாகவும் தண்டு அழகிய பலாசமரமாகவும் கமண்டலம் கிணறாகவும் வைத்து அவ்விடத்திலேயே ஆயின. ஆதலால் இது மகத்துவம் பொருந்திய சிவபுண்ணியத்தலம் என்று புகன்றார். இவ்வனத்திலே பராசரரும் அவர் புத்திரரும் இருந்து தவஞ்செய்தபடியால பராசரர் ஆச்சிரமம என்று அன்றுதொட்டுப்பெயர் விளங்கிற்று. அக்கிணற்றில கிரகண புண்ணிய காலங்களில் மூழ்கினவர்கள் திருக்கைலையை அடைவர்கள். இந்திரன் பழியைநீக்க வியாழன் மலர் கொண்டு அருச்சித்தார் கார்த்திகேயப்பெருமானை யருச்சித்தலால் ஆதிகேசம் என்னும் பெயரைக்கொண்டது. அகத்திய முனிவர்

அந்தச்சிவலிங்கத்தை மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகிச்செய்த
பூசைகாலத்தில் சிவந்த திருமேனியில் பூசப்படும் விபூதியின் ஒளி
பரந்து காணப்படும் காட்சியிலே கட்டுப்பட்டுத்தியானித்திருக்கும்
காலத்தில் சிவபெருமான் தோன்றி சிறந்த முனிவனே தெளிந்த இ
னிய தமிழினாலே விளங்கும் மந்திர சித்தியிருக்கின்றது. உனக்கு
க்கைகூடுமென்று கூறிச்சிவலிங்கத்தில் மறைந்தருளினார். பின்னர்
அகத்திய முனிவர் சிவகிரியை அடைந்தார்

திருவாவினன்குடி என்னும் ஒருபாகத்திலே அகத்தியர் செ
ன்று பதுமாசனத்திலிருந்து சடாக்கரமந்திரத்தை மனத்தில்நிறு
த்தி அறிவால் விளக்கிப்பாராயணஞ் செய்ய, மனத்திற்கொண்டனை
வற்றைக்கண்கொண்டு பார்த்திருக்குங்காலத்தில் பிதாவும் மாதா
வும் என்று சொல்லும்படி உயிர்வர்க்கங்கள் எல்லாவற்றையும்படை
த்த சிவபெருமானின் புத்திரராகிய வேலாயுதக்கடவுள் வேதங்க
ளால் துதிக்கப்படும் ஞானசிரிய வடிவம் கொண்டு அகத்திய முனி
வரின் எதிரிற்சென்று காட்சிகொடுத்தார்.

எமது தந்தை இங்கே வந்தனன் என்று திருவடிகளிலே விழு
ந்து வணங்கி பலவாறு துதித்து ஆநந்தக்கண்ணீர் வாரானின்ற அக
த்தியமகா முனிவர்க்குத்திருநோக்கஞ்செய்து முனிவர் விருப்பப்ப
டி தமிழ் வழுதும் உபதேசித்தருளி இன்னுஞ்சொல்கின்றார். விந்
துவினின்றும் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி, என்னும்
வாக்குகள் நால்வகைப்பட்டு உதானன் என்னும் காற்றுடன் பிறந்
து வரும் எழுத்துக்கள் ஐம்பத்தொன்றனுள் இனிய ஒலியுள்ள
எழுத்துக்களால் ஆனது தமிழ் மொழியே அதனை இரகசியமான
வேதத்தின் பொருளாக நமது தந்தை உபதேசிக்கப்பெற்றனை சிவ
பெருமான் விட்டுணு முதலாயினோரிடத்துச் சிவபெருமான் அகார
முதலாகப் பலவடிவங்கொண்டு அடங்கி நிற்கின்றனன். மேலுல
கத்தும் பூமியினும் அவ்வெழுத்துக்கள் வருதற்பொருட்டு உன்னி
டத்து உபதேசித்தார் அவ்வெழுத்துக்களின் வகை தொகை விரிவு

களைக் கூறுகின்றோம். அவற்றையுங்கேள் வடமொழி இடத்தே அச்சு அல் என்று வழங்கப்பட்ட உயிர் எழுத்து மெய் எழுத்து என்ற இரண்டனுள் பொருந்தாத இடையிலுள்ள இறு, இறா, லு, இலா, என்னும் நான்கெழுத்துக்களும் கடையிலுள்ள அம், அகா, என்னும் இரண்டெழுத்துக்களையும் நீக்க நின்ற அ, ஆ இ, ஈ, உ, ஊ, எ, ஐ, ஒ, ஔ, என்னும் பத்தெழுத்துக்களோடு எ, ஒ என்னும் எழுத்துக்களையும் சேர்த்து முறையுடன் உயிரெழுத்து பன்னிரண்டென்று எந்தை செய்தருளி இருக்கின்றார். அல் என்னும் மெய் எழுத்துக்கள் கவ்வர்க்கம், சவ்வர்க்கம, டவ்வர்க்கம், தவ்வர்க்கம், பவ்வர்க்கம், என்னும் ஐந்து வர்க்கங்களில் உரப்பியும், கனைத்தும், நீட்டியும், எழுத்துக்களான இடைநின்ற மூன்றெழுத்துக்களையும் ஒழித்து முதலினும், கடையினும் நின்றவை தொகுக்கப்பட்டனவாம். அம் மெல்லெழுத்துகளுக்கு மேல் இடை எழுத்துக்களானவை ய, ர, வ, ல, ள என்பனவும் வந்து கூடின.

வடமொழியில் இல்லாதனவாகிய ற, ன, ழ, என்னும் மூன்றெழுத்துக்களும் ஆகியவற்றைக் கூட்டிப்பதினெட்டு மெய்யெழுத்துகளாகச் செய்தார். மேற்சொல்லிய உயிர் பன்னிரண்டையும் மெய் பதினெட்டினையும் பெருக்கச்சேர்க்கின் இருநூற்றுப்பதினாறாக இயலும். அவைகள் உயிர்மெய் எழுத்து என்று சொல்லப்படும் அத்தன்மையாக உணரும் சார்பெழுத்துக்களை நீயே அறிவாயாக என்று அவற்றின் விரிவை எல்லாம் நன்கு விளக்கிக்கூறி எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, என்னும் ஐந்திலக்கணங்களையும் ஐயந்திரிபறக்கற்பித்துக் குருபரன்கோயில் புகுந்திருந்தார். பின்னர் அகத்திய முனிவர், வாமதேவர் ஆச்சிரமத்திற்குப்போம்போது வியாசமுனிவர் முதலாயினோர் எதிர்சென்றுபசரித்து மேலாசனத்திலிருத்தி பலவாறு துதித்துப் போற்றினார்கள். பின் அங்கிருந்து விடைபெற்றுத் திருவாவினன்குடியை அடைந்து எங் குருபரனைத் தொழுது அவ்விடமிருந்து தன் பொதியமலைக்கு வந்து தமிழை வரையறுத்து இலக்கணமியற்றித் தம் பன்னிரு மாணவர்களுக்கும்

போதித்த உலகெங்கும் என்றுமுள்ள முத்தமிழ் இன்னும் பல்லாயிரமடங்கு பிரகாசிக்கச் செய்தார்.

——:(o):——

இருபத்திரண்டாவது

தீர்த்தச் சருக்கம்.

——:(o):——

வெண்பா.

ஒழுக்குறு பொருளை உத்தமனார்க் கோதியருள்
ஆமுருகர் சன்னிதிக்கே யானக்கால்—யாமுதல்வன்
றன்றாண் மலர்பெற்றுத் தாவிலா தென்றுமே
நின்றா யிருஞ் சுகத்தி னோர்,

'முனிவர்களே! சிவகிரிசத்திகிரியின் பெருமைகளைச்சொன்னோம் அதிலுள்ள தீர்த்தப்பெருமைகளையுஞ்சொல்கின்றோம் கேளுங்கள் என்று சொல்லுகின்றார்.

சிவகிரியில் ஐந்து தீர்த்தங்களிருக்கின்றன. அவைகளிலொன்று சூரியனால் ஆக்கப்பட்டது அதனை சூரியமுக தீர்த்தமென்று சொல்லுவார்கள். அது கிழக்குத்திக்கிலிருக்கிறது. அது தன்னில் தோய்ந்தவர்களுக்கு மலநோய்களை நீக்கி முத்தியளிக்குந் தன்மையது சிவமலைக்குத்தென்றிசையில் ஒரு தீர்த்தமுள்ளது அதற்குத் தேவ தீர்த்தமென்று பெயர். மூழ்குவார்க்கு முத்தி தரவல்லது அத்தீர்த்தத்திற்கு மேற்றிசையில் அமுத தீர்த்தமென்றிருக்கின்றது. அது நோயையும் விருத்தாப்பியத்தையும் நீக்கி மாறா இளமையைத் தரவல்லது.

தென்றிசை மலைச்சாரலின் கீழ்பால் ஞானதீர்த்தமொன்றுளது அதில் தோய்பவர்கள் சிவன்முக்தர்களாவார்கள். வடக்குத்திக்கில் ஒரு தீர்த்தமிருக்கின்றது, அதற்கு பிரமதீர்த்தமென்று பெயர். அது பிரமர் முதலிய தேவர்களால் மூழ்கப்பெற்றது. அவர்களுக்குப்பேறளித்த சிறப்புடையது. நினைத்த அளவிலேயே முத்தியளிக்குந்தன்மையது. இந்தப்பிரமதீர்த்தத்தின் பெருமை எடுத்துப்புகலுதல் எளிதோ? பாண்டியன் அரசாட்சி செய்யும் வளம் பொருந்திய நல்ல நாட்டில் ஒரு வேதியன் தாம்பிரவர்ணி நதிக்கரையில் வசிப்போன் மேன்மையான இல்வாழ்க்கையை உடையவன், நாலு வேதங்களை தா மனத்துடையவன், அநேக யாகங்களைச்செய்தவன், இவன்றனது தந்தையிறந்ததினால்தான் செய்யவேண்டிய கடன்களையெல்லாம் அன்று செய்து, எலும்பைக் கங்கை கரியிலிடும்படிப் புறப்பட்டு வைகைக்கரையிற்சேர்ந்தான். அங்கே அவ்வைகைக்கரையில் செய்யவேண்டிய கடன்களைச்செய்து, அங்கத்தைக் கங்கையிற்போட எடுத்துக்கொண்டு புறப்படுகையில் வேதியனை கங்கையிலிட்டால் முத்திகிடைக்கும் உண்மையே, இங்கு வேறுதீர்த்தமொன்றுளது அதில் எலும்பை இட்டவுடன் செங்கழுநீர்மலராகும்பேன் முத்திபெறுதும் போவரோ? முத்தி வீட்டிற்கு அதுவோர் கப்பல்போலிருக்கின்றது என்று கூறி உன் தந்தை சிவபதம் சேரும் வகை கூறுகின்றேன் என்று சொல்கின்றான்.

வராகமலையின் பக்கத்தில ஓங்கி விளங்கும் சிவகிரிச்சாரலில் வடக்கில் பதினைந்து விரற்கிடை தூரத்திலுள்ள பிரமதீர்த்தத்தில் நின்றந்தையின் அங்கத்தையிட்டு நீயும் மூழ்குவையானால் உனக்கும் உன்றந்தைக்கும் பெரும்பேறு கிடைக்கும், இதற்குமுன் நடந்த ஒரு சம்பவங்கேள், முன்காலத்தில் இரண்டு அயோக்கியர்கள் இருந்தார்கள். இவர்கள் பிராமண குலத்திற்பிறந்தும் கள்ளுண்டும் புலாலருந்தியும் வழிப்பறி பறித்தும் கற்புடைய மங்கையர்கற்பையழித்தும் வந்தார்கள்.

இவர்கள் செய்த பாவத்தினால் புண்ணியஞ்செய்து சுவர்க்கமுற்ற பிதுர்க்களும் இழிந்து நரகிற்கிடந்துழலும்படி நேர்ந்தது அதில் ஒருவன் இறந்தான் அவனை நரகில் எமபடர் புகுத்தி வருத்திவந்தார்கள் இவன் நரகில் துன்பப்படும்போது ஒருநாள பூமியில் கிடந்த அங்கத்தில் (எலும்பு) ஒரு துண்டை ஓர் பருந்து எடுத்து பறந்து போகையில் இப்பிரம தீர்த்தத்தண்டை வந்ததும் எலும்பு நழுவி விழுந்தது உடனே அது செங்கழுநீர்மலராயிற்று. அதை எலும்பெனக்கழுகு எடுத்துப்பறந்தது அவ்வெலும்பு தீர்த்தத்திற் பட்டமையால் அவனும் அவன் சந்ததியாரும் நரகவேதையினின்றும் தீர்ந்து முத்தியடைந்தனர். செங்கழு நீரை எடுத்ததினால் தீர்த்தத்தின் திவலைபட்டதன்மையால் கழுகுந்தேவாய்த்திகழ்ந்தது மற்றொருவன் களவு செய்துவருநாட்களில் ஒருநாள் திருவாவினன்குடியில் சுவாமி நகைகளைக்களவு செய்தபோது அவனைக் கட்டிப்பிரமதீர்த்தத்தில நனைத்து எடுத்தார்கள். அவன் மூச்சடங்கிக் கிடக்க இறந்துவிடுவான் என்று விட்டுப்போய்விட்டனர். அவன் சிறிதுநேரஞ்சென்று உயிர்த்தெளிவடைந்து அவ்விடம் விட்டு வேறுநாடுசென்று முன்போலவே அளவில் அடங்காதபடிக்களவுசெய்துகொண்டிருந்து பின் இறந்தான். இவன் முன்னர் பிரமதீர்த்தத்தில் நனைக்கப்பட்டதன்மையால் தேவகணங்களோடு ஒருதேவனாகி விளங்கினன். ஆதலினால் நீ, நின்றுதையின் அங்கத்தை நீரிலிட்டதும் மலராதலால் இவ்வுண்மையையறிவாயென அவ்வேதியன் அவ்வாறேசெய்ய அங்ஙனமேமலராதல்கண்டு பேரானந்தங்கொண்டான், அவ்விடத்தேயிருந்து அருந்தவஞ்செய்து புண்ணியனாகிச் சிவலோகமுற்று உய்ந்தான்

சத்திகிரியில் நான்கு தீர்த்தங்களிருக்கின்றன. அவைகளுள் சித்ததீர்த்தமென்று கிழக்கேயுள்ள குகையிலிருக்கிறது சித்தர்களுக்கு செல்வங்களைக்கொடுப்பது பிறர் அதில் முழுகாதபடி மறையோரை மயக்கினார்கள். மலையினுச்சியுள் ஒரு தீர்த்தமுண்டு. அதில் முழுகினால் அறிவுடைய புத்திரப்பேறுண்டாகும். வடக்குப்

பக்கத்தில் மாயா தீர்த்தமுண்டு. அது அழிவற்றசெல்வங்களைக்கொடுக்கும். அத்தீர்த்தத்துக்குக்கிழக்கில் வித்தியா தீர்த்தம் உண்டு. அது தன்னில் ஆடுவோருக்கு வித்தையையளிக்கும். இன்னும் ஒருபெரிய தீர்த்தம் சத்தியமலையிலிருக்கிறது. தென்பாலுள்ள பெரிய வராகி மலையினிடத்தே சிறப்புவாய்ந்த கன்னமாபுரியின் வடக்குப்பக்கத்தேயிருக்கும் மேன்மையோடு விளங்கும் தத்தாத்ரி முனி வசிக்கும் ஆச்சிரமம் ஒன்றுண்டு, அவ்விடத்தில் தேவகணங்கள் தொழ வீற்றிருக்கும் உமாதேவியார் வாயுதேவனை நோக்கி வெள்ளிமலைமேலிருக்கும் ஒரு சிவலிங்கத்தை ஒரு இமையிற்கொண்டு வருகவென உத்தரவளிக்க அவனும் அவ்வாறே அச்சிவலிங்கத்தைக் கொண்டு வந்ததும் அதைத்தாபித்து பூசித்துவந்தாள். திருமால்பெரும் மலைவடிவாய் நின்று தாங்கினான். அப்பொழுது சிவபெருமானார் ஒரு விருத்த வேடங்கொண்டுவந்து விருந்தெனப்புகன்று அம்மையிட்ட வுணவையுண்டு அருள்செய்து தன் திருவுருக்காட்டி இடப்பாகஞ் சேர்ந்தினிதிருந்தார். உமாதேவியார் அவ்விடம் வருபவர்க்கெல்லாம் விருந்திடும் வரமும் பெற்றார். அப்பொழுது சித்தில் வல்லகோரக்கன் உமாதேவியாரையும் எம்து எண்டோட் பிரானையும் வணங்கித்துதித்து நின்றான். அவன் பசியை அறிந்த சிவபெருமானார் அம்மையாரை அமுதளிக்கப் பணித்தார். அம்மையும் அவ்வாறு செய்தாள். சிவபெருமானின் உத்திரவின்படி சில தினங்கள் உண்ணும்படி அவற்கு அமுதளித்து வந்தாள். ஒருநாள் நெய் அமைந்த மிக்க சுவைகொண்ட சமையல் மிகுதியாகச்சமைத்து வைத்திருந்தாள். அவ்வாறாய சமயத்தில் தத்தாத்திரேய முனிவர் அடைந்து இடப்பட்டசோற்றில் இச்சைகொண்டவராய் உண்டு விரும்பிய மேலான பலனை அடைந்தனர், அதுகண்டு கோரக்கர் சினங்கொண்டமை தெரிந்து தத்தாத்திரேயரும் சினம் மூண்டார். இவர்கள் இருவரும் கோபித்திருக்குஞ்சமயத்தில் நாரதர்தோன்றி நீவிர் இருவரும் சித்தில் வல்லவராதலினால் இம்மலையில் விளையாட்டைச் செய்யுங்கள் என அகங்காரவயத்தராய் கோரக்கர் இப்பெரிய

தடாகத்தில் மீனாக விளங்கி மேலேயுலாவினார், தத்தாத்திரேயர் மீன்கொத்திப்பறவையாக வந்துகொத்தினார். அத்தலத்திலே இருவரும் பகை நீங்கித்தம் அகங்காரம் நீங்கிப்பெற்று அரிய தவத்தைச்செய்து சிவபெருமான் திருவருள் பெற்றனேக வரங்களை அடைந்தனர். தத்தாத்திரேயர், கோரக்கர் என்னும் சித்தர்கள் படிந்தபடியால் சித்த தீர்த்தமென்றும் கோரக்கர் மீனாய் உலாவியதால் மச்ச தீர்த்தம் என்று பேர் வந்தது. எவர்களாயிருந்தபோதிலும் இதில் மூழ்குபவர் தேவபதவி அடைவர், எமலோகஞ்சேரார் என்று சொல்லி முடித்து, கேளுங்கள் சேரராசன் திருப்பணி செய்து முத்தி அடைந்ததும் சொல்கின்றேனெனச் சொல்லித்தொடங்கினார்.

——:(o):——

இருபத்து மூன்றாவது
சேரர்கோன் சருக்கம்.

வெண்பா

தண்டாயுதங் கொண்ட தாவில்சீர் கந்தனருள்
அண்டா திருக்கு மலைமன்னே—கண்டாயோ
சேரர்கோன் செய்த திருப்பணியால் சேர்ந்தசுகம்
ஆர வறிந்தே யடை,

சோழர்களையும் பாண்டியர்களையும் வென்றவனும் சிவபெருமான் அம்பலத்தில் ஆடுந்திருக்கூத்தையே தன் மனத்தில் பதித்தவனும் சிவனலது வேறு தேவிலை என்றெண்ணியிருப்பவனும் சிவபெருமான் பாதங்களில் செம்பொன் மலரிட்டருச்சிப்பவனும் கண்ணையும் கருத்தையும் சிவபெருமான் சேவையிலுஞ் சிந்திப்பிலும் போக்கி அவரையே வாழ்த்தித் துதிப்பவனும் எம்பெருமான் கல்யாண குணங்களையே கேட்பவனுமான ஒருசேரராசன் இருந்தான்

தண்ணளியன், மன்னுயிரைத்தன்னுயிர்போல் காப்பவன், எல்லாச் செல்வமும் பெற்றவன், இராசதந்திரமுற்று முணர்ந்தவன், வீரதீரன், கல்விகேள்விகளில் முற்றியவன், காமனினும் மிக்க அழகுவாய்ந்தவன், இத்தன்மை வாய்ந்த சேரர்கோன் செங்கோல் செலுத்தி வரும் நாட்களில் ஒருநாள் தன் சேனை புடை சூழக்கீட்டிசை சென்றான்.

அப்பொழுது சோழராஜன் எதிர்சென்று அழைத்துப்போக இருவரும் அளவளாவிக் கனகசபை சென்று நடராஜப்பெருமானைத்தரிசித்துப்பின்னும் சோழநாட்டிலுள்ள ஏனைய தலங்களையும் தரிசித்து அங்கிருந்து பாண்டிய நாடுவந்து, பாண்டியன் எதிர்சென்று வணங்கிவர அவனோடுங்கூடிப் பாண்டிப்பதியிலுள்ள சிவபெருமானார் கோயில்களெல்லாந்தரிசித்துக்கொண்டு பின் எம்பெருமான் குமரக்கடவுள் கோயில் கொண்டிருக்கும்பழனித்தலத்தை அடைந்தான். அப்பொழுது அங்குள்ள அங்கிராமுனிவரும், அத்திரி முனிவரும், வாமதேவ முனிவரும், மற்ற முனிகளுங்கூடிச் சேரனுக்கு ஆசி கூறி எம்பெருமான் சுவாமிநாதக்கடவுள் வீற்றிருக்கும் பழநித்தலப் பெருமைகளை எல்லாங்கூறினார்கள். அதுகேட்டு அரசர்களெல்லாம் இலட்சுமியும் காமதேனுவும், சூரியனும், அரி பிரமாதி தேவர்களும் பூசித்த சிவகிரி வில்வாரண்யம் கோங்குவனம் முதலியவற்றை வழிபட்டுத் தலத்தின் மேம்பட்டவராயிருந்தனர்.

சோழராஜன் கன்னிசார வனத்திலுள்ள தடாகத்திற்கு வடகீழ்த்திசையில் ஒரு சிவலிங்கத்தை தாபித்து சிவாகம விதிப்படி பூசித்து வந்தான். எம்பெருமான் குமரக்கடவுள் மலையில் தமிழ்நாட்டு மூவேந்தரும் இருந்தனர். அங்கிராமுனிவர் சிவகிரி சத்திகிரியின் வரலாற்றையும் கூறி அதன் மகத்துவங்களை இனிது விளக்கினர். அதுகேட்டு சிவகிரியை அடைந்துதிக்கும்பொழுது குருபரன் சேரமான முதலிய அரசர்களுக்குக்காட்சி கொடுத்தருளினர்.

அப்பொழுது அரசர் போற்றித்துதித்து ஆனந்தக்கூத்தாடினார்கள்.

சேரன் சுப்பிரமணியக்கடவுளை கோயில் கட்டுவதற்கு விடை கொடுக்கும்படி வேண்ட அவரும் விடைகொடுத்து மறைந்தருளினார். நாயேனுக்குங் காட்சி கொடுத்தருளிய கந்தக்கடவுளுக்குக் கோயில் கட்டுவேனென் றாக்கத்தோடெழுஞ் சேரன்முன், மயனும் வந்தான். ஆகாயத்தினின்றும் வந்த தேவதச்சனை, சேரராஜன் தழுவி நான் அரியதவத்தைச்செய்த தன்மையினாலே, நீ வந்து சேர்ந்தனை, சிவகிரியின்மீது குமரக்கடவுளுக்கு ஆலயஞ்செய் கவென்று சொன்னான். சேரராஜன் சொல்லியவற்றையும் குமரக்கடவுள் மாற்றுயர்ந்த பொன்போலத்தமது வடிவத்தைக்காட்டி முன் மறைந்து நின்றதையும் தன்னறிவினாலாராய்ந்து தேவதச்சன் மேற்குவாயிலுடைத்தாக சிற்பவிதிப்படி ஒரு விமானஞ்செய்தான். அவ்விமானத்தின் சிறப்பைச் சுருக்கிச்சொல்லின் எம்பெருமான் விளங்கும் வேதச்சிகையென்றே சொல்லவேண்டுமேயல்லது வேறு எதனை நிகர் சொல்வதென்பது அரிபிரமர்க்கும் அரிது! அரிது!! அதற்குள்ளே வேலாயுதக்கடவுள் பழமையாகிய வேதத்திற்குள்ளே நிறைந்துள தன் கோலத்தைக்காட்டி நின்றார்.

தேவதுந்துமி பார்த்தது, தேவமாதர்கள் இன்னிசை பாடினார்கள், பூமழை சொரிந்தார்கள், சாரி சாரியாய் தேவர்களும் அவர்தம் மாதர்களும் வந்து துதிபாடிப்புகழ்ந்து போகவும் வெகு ரமணீயமானதாயிருந்தது. அங்கங்குள்ள ஒவ்வொரு அருந்தலங்களையும் வித்து வணங்கினார்கள்.

நிறைபணி பூணுடன் அழகிய திருவுருவத்தோடு சேரனுக்குக் ட்சி பன்முறையுங்காட்டியருளினர் பின் அரசர்கள் எல்லாந் ருவாவினன்குடி சேர்ந்து விடைபெற்றுக்கொண்டு தத்தம் நாடு ாய் நல்லரசியற்றி இவ்வுலகவின்பங்களையெல்லாம் அனுபவித்து சவந்தழையச் செய்து புண்ணியராய்த்தேவர்கள் எதிர்கொண்டு

அழைக்கச் சிவலோகஞ்சார்ந்த சண்முகக்கடவுள் தாளை சரணாவிந்தம் மருவி ஈறில்லாப்பேரின்ப முத்தியில் வைகினர்கள் என்று சூதமுனிவர் பழநித்தல மகிமைகளைக்கூற நைமிசாரண்ய வாசிகள் முனிவர்பிரானை அர்ச்சித்து வணங்கிப் பலமுகமன்கூறி விடைகொடுத்துவிட்டுத் தத்தமிடஞ் சார்ந்து தம்தவத்தைத் தொடங்கிக் குறைவின்றி நடத்தி வந்தனர்கள்.

தண்ணருள் முகங்கள் ஆறும தனிமலர்ப்பதமும்
வாழி
எண்ணரும் புகழ்முன் னல்காமெழிற் புயவரை
கள்வாழி
நண்ணரும் கடம்பத்தாரும் நகுகதிர்
அயிலும் வாழி
கண்ணரும் முருகும் செய்ய கதிதரும் அருளும்
வாழி

ஏர்பூத்த மறைவாழி வேள்வி வாழி
இவ்வுலக கருவி மழை வாழி வாழி
கார்பூத்த பழநிதலக் கந்தன் வாழி
கலினு மயிலயில் வேல்களென்றும் வாழி
சீர்பூத்த [illegible] ரோங்கி வாழி
தெய்வதிருஞ் [illegible] மலிந் தெங்கும் வாழி
பார்பூத்த பழநித்தல மான்மியம் வாழி
படிப்போருங் கேட்போரும் வாழி மாதோ.

பழநித்தல மான்மியம்
முற்றும்.

——:(o):——

உ

விளம்பரம்.

திருவாலவாயென்னும்

மதுரை மான்மியம்.

செந்தமிழ்நாட்டுச் செல்வர்களே!

நற்றமிழ் நாடுசெய் தவப்பேற்றாற் பிறந்த ஸ்ரீமத் சிதம்பரசுவாமிகளென்னும் பெயரையுடைய பெரியார், தமிழுலகமுய்யவும், சைவந் தழைத்தோங்கவும் "மதுரை மான்மியம்" எனவொரு நூலைச்செய்துளார்.

இந்நூல் அருமைத் திருப்பாக்களும், தேவோற்பத்தியும், உலகோற்பத்தியும், உலகவமைப்பும், காலக்கணிப்பும் பகுப்பும், பாண்டியர்கள்வமிசமும், அவர்கள்காலமும் அக்காலத்தே நடந்த திருவிளையாடல்களும், மூன்று தமிழ்ச்சங்கங்களும், காலாகாலங்களி னடந்த விசேடங்களும், பல பண்டைக்காலத் தருமைவிசேடங்களும், 64 திருவிளையாடற் காதைகளும், கலியுகம்பிறந்தபின் இற்றை 20 வருடத்திற்கு முன் நடந்த சம்பவங்களும். ஒள்ளிய தமிழ் நடையிற் றெள்ளிதிற் பொருள் புலப்பட மொழிந்தருளப்பெற்ற சிறப்புடையது. புத்தகம் ஒன்றின் விலை அணா 6 இப்புத்தகம் வேண்டுவோர் நேரிலும் வி. பி. மூலமாகவும் கீழ்க்கண்ட விடத்திலும் மதுரை புதுமண்டபம் புத்தகக் கடைகளிலும், பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

ம. அழகர்சாமி பிள்ளை.

புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.